

# தமிழரசு

1-1-1992 ரூ.1



# மாண்புமிகு முதல்வர் அவர்களின் புத்தாண்டுச் செய்தி



அனைத்துத் துறைகளிலும், சிறப்புமிகு திட்டங்கள் தீட்டப் பட்டு, தமிழகம் முன்னேற்றப் பாதையில் எழுச்சியோடு நடை போட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் 1992-ஆம் ஆண்டு மலர்கிறது. இனி வரும் நாளில் மேலும் பெரிய சாதனைகளையும், பெருமைக்குரிய செயல்களையும், ஏற்றுத் திறம்பட நடத்துகிற புதிய வலிவினை இப்புத்தாண்டு நமக்கு வழங்கும் என்பதில் ஐயமில்லை.

சரித்திரப் புகழ்மிக்க செயல்பாடுகளைத் தோற்றுவிப்பதோடு, அவைகளைக் காலத்தோடு நிறைவேற்றக்கூடிய வேகத்தையும், அதன்மூலம் நில்லயான வெற்றி இலக்குகளை ஈட்டித் தரக்கூடிய விவேகத்தினையும் நமக்கு இப்புத்தாண்டு வழங்கிடும் என்பது எனது நம்பிக்கையாகும்.



இந்த இனிய புத்தாண்டுத் தினத்தில் தமிழக மக்கள் அனை வரும், அனைத்து நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட எனது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்த இதழில்...


சமுதாயத்தின் நன்மைக்குக் கல்வியே தவிர, கல்விக்காகச் சமுதாயமல்ல!
— மாண்புமிகு முதல்வர் உரை ... 2

கர்நாடகக் கொடுமைகளுக்கு ஜனநாயக வழியில் நிரந்தர முடிவு காண்போம்!
— மாண்புமிகு முதல்வர் உரை ... 9

புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 14

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்- மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை ... 35



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மார்கழித் திங்கள் - 17

மலர்:22 1-1-1992 இதழ்:13

# சமுதாயத்தின் நன்மைக்குக் கல்வியே தவிர கல்விக்காகச் சமுதாயமல்ல!

## சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில்- மாண்புமிகு முதல்வர் உரை

உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமை நடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம், இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக்கிடையே பாலம் அமைத்துள்ள விழுமிய, ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத் தளையினின்று மனித உணர்வுகளை விடுவிக்கும் எண்ணங்களுடன் இடையறாது செயற்படும் பாங்கினுக்காகவும், சமுதாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும் தமிழினத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச் சிந்தனைகளை எடுத்துக்கூறும் தெளிவினுக்காகவும்,

மாண்புமிகு
தமிழக முதல்வர்

**புரட்சித் தலைவி**
**செல்வி ஜெ. ஜெயலலிதா**
அவர்களுக்குச்
சென்னைப் பல்கலைக்கழகம்
**டாக்டர் பட்டம்**
அளித்துச் சிறப்பிக்கின்றது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 134-வது பட்டமளிப்பு விழாவில் சிறப்புரை ஆற்ற என்னை அழைத்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். எனக்கு நீங்கள் அளித்துள்ள இந்தக் கவுரவத்தை நான் என்றென்றும் நினைவில் நிறுத்தியிருப்பேன்.

இந்த நாட்டின் பழமையான கல்வி நிலையமாகச் சென்னைப் பல்கலைக் கழகம் திகழ்வதாலும், இந்தியாவின் கல்வி நிலையங்களுள் பெருமைமிகு இடத்தை இப்பல்கலைக் கழகம் பெற்றிருப்பதாலும், எனது நன்றி பன்மடங்காகிறது. உயர் கல்வித்துறையில் ஒரு நூற்றாண்டுக்கும்மேலாகக் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் சென்னைப் பல்கலைக் கழகம் புரிந்துள்ளது. தேசிய, உலக அளவில் பல்வேறு துறைகளில் பிரகாசித்த பிரபலமான பலரின் கல்விக் கூடமாகவும் இது திகழ்ந்துள்ளது. அரசியல், பொருளாதார, விஞ்ஞான, சமூகத் துறைகளில் சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் தொண்டாற்றிய இப்பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பெயர்களைப் பட்டியலிட்டுக் காட்டுவது இயலாத காரியமாகும்.

சென்னைப் பல்கலைக் கழகம் பல பல்கலைக் கழகங்களின் தாயாக விளங்கியுள்ளது. மாபெரும் தாய் நிறுவனமான இந்தப்பல்கலைக் கழகத்தில் பயின்ற புகழ்மிக்க ஆடவரும், பெண்டிரும் மனித அறிவு வளர்ச்சியை மென்மேலும் பெருக்கி வந்துள்ளனர். அறிவை விருத்தி செய்து, உலகமெங்கும் இதுபோன்ற பல கல்விச் சாலைகளை வளர்த்த பல்வேறு அறிஞர்களின் பெயர்கள் இப்பல்கலைக் கழகத்தின் சரித்திரத்தில் நிரம்பக் காணப்படுகின்றன.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில், அயராத உழைப்பினால் சாதனைகள் புரிவதையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு உழைத்து, தங்களது அறிவாற்றலால் கற்பனைத் திறனால், தொலைநோக்குப் பார்வையால் இப்பல்கலைக் கழகத்திற்குப் புகழ் சேர்த்த பேரறிஞர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். இந்த நினைவே, இங்குக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும், இத்தகைய பல்கலைக் கழகம் தாங்கள் பயின்ற, வளர்ந்த, பயிற்சி பெற்ற நிறுவனமாகத் திகழ்ந்துள்ளது என்ற பெருமையை வழங்கும்.

இந்தச் சபையில் நான் பேசுவதில்எனக்குள்ள எல்லைகளை நான் உணர்ந்திருக்கிறேன். என்றாலும், இந்த அழைப்பினை நான் ஏற்றுக் கொண்டதற்குக் காரணம், இப்பல்கலைக் கழகம் சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள தொண்டினைப் பாராட்டிடவும், தங்களது வாழ்க்கையில் மாபெரும் சாதனைகளைச் சாதித்துக் காட்டிய இப்பல்கலைக் கழகத்தின் பேரறிஞர்களைப் பாராட்டவும் இது ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும் என்பதால்தான். எனவே, உங்களிடையே இன்று நான் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் தன் மகளுக்குக் கிடைத்துள்ள மரியாதைகளைக் கண்டு பூரிக்க என் தாய் இல்லையே எனும் என் தனிப்

பட்ட துயரத்தினையும் நான் வெளிப் படுத்தியாக வேண்டும்.

நீங்கள் பெற்றுள்ள பெருமை களுக்கு என் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் வாழ்வில் இன்றைய தினம் ஒரு திருநாளாகும். உங்கள் பயிற்சி முடிந்து, பங்கேற்பு தொடங்கும் நன்னாளாகும். ஏனெனில் பட்டம், படிப்பின் முடிவல்ல. சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் தீவிரமாக ஈடுபடவேண்டியதன் ஆரம்பமாகும். பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற சில பாக்கியசாலிகளில் நீங்களும் ஒருவர் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். நம் நாட்டில் 17 முதல் 21 வயது நிரம்பியவர்களில் 10 சதவிகிதத்தினர் கூட இச்சந்தர்ப்பத்தினைப் பெற்றதாகப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது. எனவே, நம் நாட்டு வளர்ச்சியில் உங்கள் பொறுப்பு அதிகமாகிறது. நாட்டின் அநேக சவால்களைச் சந்திக்க நீங்கள் இங்கு பெற்ற அறிவினையும், திறமையையும் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். உங்கள் முயற்சிகளில் நீங்கள் வெற்றியடைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகம் அறிவின் கிடங்கு அல்ல. திறமைகளை வளர்த்துக் கொள்ளும் கூடம் மட்டுமல்ல. கல்வி என்றாலே சுதந்திரம். உயர் கல்வி என்பது மென்மேலும் சுதந்திரமே உங்களது மனதிற்கும் இதயத்திற்கும் சுதந்திரம் வழங்கி, ஒரு இலட்சியத்தை உருவாக்கி, தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தி, பின் தங்கியோருக்கு உதவுவதே உயர் கல்வியின் நோக்கமாகும். சுருங்கச் சொன்னால், மக்கள் நலங்களில் உள்ள உங்கள் ஈடுபாடுகளை வளர்ப்பதே உயர் கல்வியின் நோக்கமாகும். தெய்வப்புலவர் வள்ளுவர் கூறினார்

அறிவினான் ஆகுவ துண்டோ
பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை'

'மற்றவர்களின் துயரைத் தன் துயராகப் பாவிக்காதவனின் அறிவு எதற்குப் பயன்?'

காலங்காலமாக நம் நாடு, கல்வியின் பலத்தை உணர்ந்து, சமுதாய, கலாச்சார அம்சங்களில் கல்விக்கு முக்கிய இடத்தைத் தந்துள்ளது. சுய



வளர்ச்சிதான் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. சுய ஞான வளர்ச்சியைப் பெறுவதே, அறிவைப் பெறுவதின் நோக்கமாக கொண்டுள்ளது. கல்வி பயிலுவதென்பது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்கிறது. தீவிர ஆன்மீக உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்புகளைக் கடைப்பிடித்து மக்களிடையே அமைதி, நல்லிணக்கம், நல்லுறவு ஆகியவற்றை வளர்க்கும் வகையில் சமுதாய முன்னேற்றத்திற்கு அயராது பாடுபடும் தனி மனிதத் தகுதிகளை வளர்க்கக் கல்வி ஒரு வழிமுறையாகும். உண்மையில், பண்டைய இந்தியச் சமுதாயத்தில், கல்வி, தனிமனிதனையும் சமுதாயத்தையும் நெருங்கிணைப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. மனிதர்களுக்கிடையே உள்ள உறவுகள் சரியான ஒழுக்க நெறிகள், முறையான சமூகப் பண்புகள் ஆகியவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ள உதவுவதே கல்வியின் நோக்கமாகும். அறிஞர்கள், புலவர்கள், ஆசிரியர்கள், குருக்கள், மாணவர்கள், ஆகியோர் மக்களிடையே அமைதி, நல்லுறவு, நல்லிணக்கம் ஆகிய பண்புகளை வளர்ப்பதற்கு ஏதுவாக சமுதாயப் பண்புகளை நிலைநிறுத்தவதிலும் பாதுகாப்பதிலும் தத்தம் பங்கினை ஆற்றி வந்துள்ளனர். உண்மையிலேயே ஆன்மீகமே, ப[illegible] டைக் காலக் கல்வியின் கு[illegible] கோளாக விளங்கியது.

கல்வியின் இந்தக் குறிக்கோ[illegible] தற்காலத்திற்கும் பொருத்தமான[illegible] என்று மாபெரும் வரலாற்று ஆசிர[illegible]



**மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்நினைவு நாளான 24.12.'91 அன்று அவரது நினைவிடத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அமைச்சர்களுடன் அஞ்சலி செலுத்தினார்.**

யரான ஆர்னால்ட் டாயன்பி வலியுறுத்துகிறார். அவருடைய வார்த்தைகளை நினைவு கூர்வது இங்கே பொருத்தமாகும்.

'கல்வியின் நோக்கம் வணிகச் சார்புடையதாக இல்லாமல் சமயச் சார்புடையதாக இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். சரியான முறையில் வாழ வழியினைக் கண்டுபிடிப்பது, வாழ்க்கையின் பொருளையும், குறிக்கோளையும் உணர்ந்து கொள்வது ஆகியவற்றிற்கான ஒரு தேட்டமே கல்வியாகும். தகுந்த ஆன்மீக வழியே அனைத்து மக்களுக்கும் அடிப்படையில் பொருந்துவது என நான் நம்புகிறேன். மனித சமுதாயத்தின் அமைப்பு, செயற்பாடு ஆகியவற்றின் இயல்பான எளிமை, சிக்கலாக்கப்பட்டதன் மூலம், வேலைப் பகிர்வு

(Division of Labour) என்பது அவசியமாக்கப்படுவதற்கு முற்பட்ட காலத்திலேயே மனித சமுதாய முழுமைக்கும் இது சரியான நடைமுறையாகவே இருந்து வந்தது.'

தொழிற் புரட்சியின் தொடக்கம், விஞ்ஞான மனப்பான்மை காலத்துக் கட்டியம் கூறியது. இதுவே ஒரு தொழில்நுட்ப நாகரீகத்திற்கு, குறிப்பாக மேலை நாடுகளில், அடிக்கல் நாட்டியது. கல்வியைப் பற்றிய மனித மனோபாவத்தில் மாபெரும் மாறுதல்களை இவையனைத்தும் உருவாக்கின. கல்வி பிழைப்புக்கான ஒரு வழியாக மாறியிருக்கிறது.

அறிவைப் பேணுவது பிழைப்புக்கான ஒரு ஆதாரமாகக் கருதப்படுகிறது. கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதிகளைப் பெற்றிருப்பதின் மூலமாக ஒருவன் தன் வாழ்க்கைத் தகுதியை உயர்த்திக் கொள்ள ஒரு வழி முறையாகவே கல்வி கருதப்படுகிறது. தொழில்நுட்பம் என்பது வேலைகளை, பகுப்பது ஆகும். அதனால் சிறப்பான திறமைகளைப் பெறுவது அவசியமாகிறது. விஞ்ஞானமும் சிறப்புத் தகுதிகளும் கைகோர்த்துச் செல்கின்றன. ஒருவருடைய புரிந்து கொள்ளும் தன்மை எவ்வளவு விசாலமானது என்பதோ அவருடைய அறிவு எவ்வளவு ஆழமானது என்பதோ அல்லது அவருடைய கல்வி கற்கும் நோக்கம் எவ்வளவு உன்னதமானது என்பதோ கேள்வி அல்ல. இன்றைய தொழில் மயமான நவீன சமுதாயத்தில், பங்கு பெற, ஒருவன் சிறப்பான தொழில்நுட்பத் தகுதிகளைப் பெற வேண்டியதே தலையாய அவசியமாகும். ஒருவன் தன்னுடைய பொருளாதாரத்தில் அடைந்துள்ள வெற்றி என்பது அவன் பெற்ற, தேர்ச்சி அடைந்துள்ள சிறப்பான தகுதிகளைப் பொருத்தே அமைந்துள்ளது.

நம் நாடு 1947-இல் சுதந்தரமடைந்து விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரக் கலாச்சார வளர்ச்சிகளில் மேலை நாடுகளைப் பின்பற்றி, பிறகு மாறிவரும் கலாச்சாரத் தேவைகளுக்கேற்ப நமது கல்வி நிறுவனங்கள் தங்களை மாற்றி அமைத்துக் கொண்டுள்ளன. இது இயற்கையாகவே நமது நாட்டைத் தேர்ச்சி பெற்ற உயர் கல்விப் பாதையில் செல்ல வைத்தது.

எனினும் இன்று நம் நாட்டில் கல்வித்துறை நிறைய சிக்கல்களை உள்ளடக்கியுள்ளது. நம் நாட்டிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வியினை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகத் தரும் கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது. பள்ளிகளில் முறையாகப் பயில இயலாத ஏராளமான மக்களுக்கு வாழ்க்கை நீரோட்டத்திற்குக் கொண்டுவரத் தேவையான அடிப்படை அறிவைக் கொடுத்தாக வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப சமூக மற்றும் பொருளாதார உற்பத்திகளை அடிப்படை

யாகக் கொண்டுள்ள வேலைகள் தரப்பட வேண்டிய ஏராளமான இளைஞர்களை நம் கல்வி முறை கையாள வேண்டியுள்ளது. தொழில் முன்னேற்றத் தேவைகளும், உலகப் பொருளாதாரத்தின் பாதிப்புகளும் உயர்நிலைத் தொழில்நுட்பங்களை அமல்படுத்துவதும் சேர்ந்து பல்கலைக் கழகப் பட்டங்களுடனோ அவை இல்லாமலோ தேர்ச்சி பெற்ற, மிகவும் திறமையான இளைஞர்கள் பல்வேறு பதவிகளை வகிக்க தேவைப்படுகின்றனர். இதற்கெல்லாம் அடிப்படைத் தேவையாக ஆசிரியர்கள் அறிவுத் திறனையும், அனுபவத்தையும் வளர்க்கிறார்கள். ஏனெனில், சிறந்த அறிவைப் பெறுவதில் உள்ள போட்டிகளில் அவர்கள் தோற்றுவிடாமல் இருக்க வேண்டும். இவையனைத்துக்கும் மேலாக இருப்பது அபாயகரமான அளவில் வளர்ந்து இந்த அனைத்து வசதிகளும், மிக்க குறுகிய நேரத்தில் தங்களுக்கு, வேண்டுமெனப் போராடும் மிகப்பெரிய மக்கள் தொகையே ஆகும். கல்வித் துறையில் வேறு எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு பிரச்சினைகளை நாடு இன்று சந்தித்துக் கொண்டு இருக்கிறது. அது கல்வியிலுள்ள நம்மைப் பற்றிய பிரச்சினையாகும். நாம் வழங்கும் கல்வியிலிருந்து அனைத்து நலன்களையும் பெற வேண்டிய புதிய தலைமுறை, மக்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கல்வியின் திறன் மீது உள்ள நம்பிக்கையை இழந்து வருகிறது. தவறான கொள்கைகளை அமல்படுத்துவதினாலும், தவறான அணுகுமுறைகளினாலும் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமையாலும் தவறான விதிகளை வகுப்பதாலும் நடைமுறைக்கு ஒவ்வாத இலட்சியங்களை அமைத்துக் கொள்வதாலும் இப்பிரச்சினை தீவிரமடைகிறது. இப்பிரச்சினையின் முக்கியமான அம்சங்களைக் கீழ்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. மக்களின் கல்வியறிவில்லாமயை ஒழிப்பது.
2. ஆரம்பக் கல்வியை அனைவருக்கும் போதிப்பது.
3. சமூக, அரசியல் விழிப்புணர்ச்சிக்காகக் கல்வித் திட்டத்தை அமைத்துக் கொள்வது.
4. ஒற்றுமை உணர்வு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவைகளை வளர்த்து, சாதி இன மற்றும் இதர தீய சக்திகளினால் உருவாகும் பிரிவுகளை ஒழிப்பது.
5. விஞ்ஞானத் தொழில்நுட்பங்கள் மீது அதிக அக்கறை காட்டுதல்.
6. கல்விச் சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.
7. சரியான அணுகுமுறை, மதிப்பீடுகளை வளர்த்துக் கொள்ளுதல், பல்வேறு பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடும் கருணையோடும் அணுகுதல்.
8. முறையான தகுதியுள்ள சமூகக் கல்வியை வழங்குதல்.
9. பள்ளிக்கூடத்திலிருந்தே, விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கல்வியை விரிவுபடுத்துதல்.

இந்த அம்சங்கள் நம்மை அலைக்கழிப்பது போலவும், விடைகாண முடியாதவை போலவும் காணப்படலாம். ஆனால், இது குறித்து நாம் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. நம் அரசியல் நிர்ணய சட்டத்தில், நம் கல்வித் திட்டத்தில் கல்வியின் பங்கைப் பற்றிய சரியான கண்ணோட்டம் கொண்டு, அதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், கவலைக்குரிய விஷயம் என்னவென்றால், நாம் சந்திக்க வேண்டிய பிரச்சினைகளின் அளவைப் பார்க்கும்பொழுது நம் முயற்சிகளும் சாதனைகளும் மிகவும் பற்றாக்குறையாக உள்ளன.

'இந்தியாவின் விதி இப்பொழுது நம் வகுப்பறைகளில் நிர்மாணிக்கப்படுகிறது' என கோத்தாரி கமிஷன் கூறியுள்ளது: நம் விதியின் எஜமானர்கள் நாம்தான். நமக்கு முக்கிய மானவர்களைநிர்மாணிப்பவர்களும் நாம்தான். எனவே, முறையான நல்ல கல்விக்கு உயர்ந்த முக்கியத்துவத்தை வழங்கவும், தேசத்தின் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு மக்கள் நலனுக்குப் பயன்படும் வகையில் கல்வித் திட்டங்களைத் தீட்டவும் நம்முடைய ஒன்றுபட்ட அறிவு, உடல், பொருட்சக்திகளை ஒன்று திரட்ட வேண்டும்.

இந்த தொழில்நுட்ப நாகரீக உலகில் சிறப்பான அளவிற்கும் திறமைக்கும் வழக்கமான கல்வியோடு, தொழிற்பயிற்சியும் சேர்ந்து தரப்படவேண்டும். நமது சக்தியின் வளர்ச்சிக்கும், தனிநபரின் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் பள்ளிப்படிப்பு மட்டும் போதாது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமை உள்ளது. ஒவ்வொருவருக்கும் தகுதிகளும் குணங்களும் உள்ளன. அவைகளை அர்த்தமுள்ளதாக உபயோகிக்கத் தேவையானது. திறமைகளைக் கண்டுபிடித்து, அவைகளுக்கு உயிரூட்டி, அன்றாட வாழ்க்கையிலும், நடைமுறைகளிலும் பயன்படுத்துவதேயாகும்.

பள்ளியிலும் கல்லூரியிலும் ஒருவனுடைய சாதனைகளை வைத்து அவனை மதிப்பிட்டு விடமுடியாது. சிறந்த மாணவர்கள் அனைவரும் பிற்கால வாழ்க்கையில் சிறந்த குடிமகனாகத் திகழ்ந்தது கிடையாது. சிறந்த மாணவர்களாக அல்லாதவர்கள் பிற்காலத்தில் புகழ்மிக்க, மிகவும் மதிக்கத்தக்க . குடி



மக்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர். எனவே, பள்ளியை விட்டோ கல்லூரியை விட்டோ செல்லும் போது பெறும் சான்றிதழ்களும் பட்டங்களும், வாழ்நாள் முழுமைக்குமான சான்றிதழ் அல்ல. இது பாடத்திட்டத்திற்கான மதிப்பீடே ஆகும்.

எனவே, ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும் தொடர்ந்து பயில வேண்டியது, அத்தியாவசியமாகிறது. விஞ்ஞான முன்னேற்றம் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், நம் அறிவு விருத்தியடைந்து கொண்டேயிருப்பதாலும் தொடர்க்கல்வி மேலும் தேவையாகிறது. மனித சக்திகள் பல வகைப்பட்டவை. அவை சமூகத்தில் மதிப்பு வாய்ந்தவை. ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட திறமைகளைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும். ஒன்றையொன்று சரி செய்கின்ற ஊக்குவிக்கின்ற விதிகளையும், நடைமுறைகளையும் கலந்து அளிக்கக்கூடிய கல்வியையும் நடைமுறைச் சோதனைகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளையும் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் இதை நாம் செய்யலாம்.

சிறந்தவைகளையே நாடிச்செல்லும் திட்டங்களைப் போடும் அதே நேரத்தில் அனைவரும் அடிப்படை வசதிகளைத் தருவதில் ஓரளவு திருப்தியை நாம் அடைந்தாக வேண்டும். ஜான்பால் சாத்ரு கேட்ட கேள்வி தற்பொழுது பிரபலமாகிவிட்டது' 'பசித்திருப்பவனுக்கு இலக்கியம் என்ன செய்ய இயலும்.' அதே போல் நாம் வேறொரு கேள்வியையும் எழுப்பலாம். 'பசித்தவனுக்கு கல்வி என்ன செய்ய இயலும்?' நெத்தியடி போல் இப்படி கேட்கப்படும்பொழுது அதற்கு விடை கிடைப்பதில்லை. ஒருவனது மூளையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் அவனது பசியைப் போக்க வேண்டும். ஆனால், இரண்டு பணிகளும் முக்கியமானவை. நாம் இதுவரை நிறைவேற்றிய கல்வித் திட்டங்கள் சுற்றிச் சுற்றி வரும் பிரச்சினையைத்தீர்ப்பதில் ஓரளவு ...ற்றி பெற்றுள்ளதாக நான் ...ர்கிறேன்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நம் கல்வி பெற்றுள்ளதென்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். மக்களின் சமூகப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி, முதியோர் கல்வி, சிறப்புப் பிரிவுகளில் உயர்நிலைக் கல்வி என்று பல திட்டங்களை வகுத்துள்ளோம். இவைகளுக்கு அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள், சோதனைக் கூடங்கள், பயிற்சி நிலையங்கள் போன்றவற்றை நம்மால் இயன்ற அளவிற்கு வாங்கியுள்ளோம். உதாரணமாக, கல்வியில் நம் மாநிலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. படிப்பறிவு வளர்ப்பதில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். 1991 புள்ளி விவரக் கணக்குப்படி தமிழ்நாட்டில் 7 வயதுக்கு மேற்பட்டவர்களில் 63.72 சதவிகிதத்தினர் படித்தவர்கள். படிப்பறிவில் நாட்டிலேயே கேரளாவிற்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு உள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் பயனாக நமது ஆரம்பக் கல்வித் திட்டம் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. பல்கலைக் கழகக் கல்வியிலும் பெரும் வெற்றியை நாம் சாதித்துள்ளோம். விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் பல்வேறு பிரிவுகளில் நமது இளைஞர்கள் மிகச் சிறப்பான சாதனையைப் புரிந்துள்ளனர். இதில் உங்கள் பல்கலைக்கழகத்தின் பங்கும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இச்சாதனைகளினால் நாம் பெருமையடைகிறோம். அதேநேரத்தில், நமது கல்வி முறை, சமுதாயத்திலிருந்து மனிதனைப் பிரிக்கிறது என்பதை நினைக்கப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அளவிற்கதிகமான பிரத்தியேகமான தகுதி பெறுவதாலும் குறுகிய தற்காலிக நோக்கங்களினாலும் நம் கல்வி முறை மாணவர்களைச் சமுதாயத்தின் முக்கிய அம்சங்களை மறக்கடிக்கச் செய்கிறது. நம்மைப் போன்ற ஒரு ஏழைச் சமுதாயம், கல்வியைப் போதிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு செலவழிப்பதால், அதற்குப் பதிலாக, சமுதாயத்தின் நன்மைக்கு மாணவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது தார்மீக உரிமையாகும்.

அர்நால்டு டாயன்பி சரியாகச் சொன்னார் 'தொழில் புரிய முனையும் ஒவ்வொருவரும், தன் சிறப்பு

## கர்நாடகத்திலிருந்து வெளியேறும் தமிழர்களுக்கு உதவ மையங்கள்

**கர்நாடகத்திலிருந்து தப்பி வரும் தமிழர்களுக்கு உதவ கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ள ஐந்து தமிழக மாவட்டங்களில் உதவி மையங்கள் உடனடியாக ஏற்படுத்தப்படும்.**

**இது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்: 25-12-91**

**கர்நாடகத்திலிருந்து 17,000 தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு இது வரை வந்து சேர்ந்துள்ளனர். கடந்த இரண்டு தினங்களில் மேலும் இரண்டாயிரம் பேர் பெரியார் மாவட்டத்திற்கு வந்துள்ளனர். அதிக அளவில் தமிழர்கள் கர்நாடகத்திலிருந்து வந்ததையடுத்து எழுந்துள்ள நிலைமை பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. பின்னர் மேற்படி உதவி மையங்களை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக ஏற்படுத்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.**

**உதவி மையங்களை மாவட்டத்தின் எல்லையோர இடத்தில் அமைக்க வேண்டும். அங்கு உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி ஆகியவை வழங்கப்படும். கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்குத் திரும்பும் வரையிலோ அல்லது கர்நாடகத்திலோ உள்ள தங்களது இடங்களுக்குத் திரும்பும் வரையிலோ இந்த உதவி தொடர வேண்டும்.**

**கோயம்புத்தூர், பெரியார், தர்மபுரி, சேலம், வட ஆர்க்காடு-அம்பேத்கர் ஆகிய மாவட்டங்களில் இந்த உதவி மையங்கள் வருவாய்த் துறை ஊழியர்கள் மேற்பார்வையில் செயல்படும்.**

**கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிராக நடந்த கலவரம் பற்றி, பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து பொருள் இழப்பு, ஏற்பட்டுள்ள காயங்கள் உள்பட முழு விவரங்களைச் சேகரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் விழா

**1991** டிசம்பர்த், திங்கள் 19-ஆம் நாள் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு பொன்னாள்!

ஆம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிய நன்னாள்!

புகழ்பூத்த பெருமை பெறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் வாழ்த்தும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்-

புரட்சித்தலைவி அவர்கள் இயல், இசை, நாடகத் துறைகளில் தேர்ச்சி பெற்ற முத்தமிழ்ச் செல்வி; பரத நாட்டியக் கலையில் கரை கண்ட 'காவிரி தந்த கலைச்செல்வி;' புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாகப் புரட்சிகரமான சூழலில், தமிழக ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றி, நீதி, நேர்மை தவறாத செங்கோல் செலுத்திப் புரட்சிகரமான சாதனைகளைப் படைத்துவரும் வெற்றிச் செல்வி ஆவார். தமிழ், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய பல மொழிகளில் எழுத்தாற்றல், பேச்சாற்றல் பெற்ற பன்மொழிச் செல்விதான் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

'அஞ்சாமை, அடக்கமுடைமை, துணிவுடைமை, கல்வி, அறிவு, ஈகை, ஊக்கம், செங்கோலாச்சுதல், குடியோம்பல் போன்ற வள்ளுவர் வகுத்த பண்புகளின் உறைவிடமாகவும் பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணாகவும் திகழும் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, டாக்டர் பட்டம் வழங்கும் முதல் பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகமாகும். அதன் மூலம் சென்னைப் பல்கலைக்கழகம் தனிப்பெருமையையும், புகழையும் பெறுகிறது'.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் (டி.லிட்) வழங்க வேண்டும் என்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'செனட்' 'சிண்டிகேட்' ஆகிய இரு அமைப்புகளும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி இருந்தன.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூற்றாண்டு விழா அரங்கில் 19.12.91 அன்று நடைபெற்ற 134-வது பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் (D.Litt.) வழங்கப்பட்டது.

இந்த விழாவினையொட்டி சென்னை நகரமே அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. விழா நடைபெற்ற பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். அன்று மதியம் 3.40 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழா மண்டபத்தில் மேடைக்குப் பின்புறம் வந்து காரில் இறங்கினார். பல்கலைக்கழக இணை வேந்தரும், மாண்புமிகு கல்வி அமைச்சருமான திரு. இராம வீரப்பன், துணைவேந்தர் திரு. சாதிக், பதிவாளர் திரு. பி. கோவிந்தராஜுலு ஆகியோர் அவரை வரவேற்றனர். பிறகு, 3.47 மணிக்கு மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மண்டபத்தின் முன்புறம் வந்து இறங்கி, தேசிய மாணவர் படையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து ஆளுநர், இணைவேந்தர், துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழகப் பல்வேறு துறைத் தலைவர்கள், செனட் உறுப்பினர்கள் ஊர்வலமாக அரங்குக்குள் வந்தனர். கண்ணைக் கவரும் வகையில் அலங்கரிக்கப்பட்ட விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டமளிப்பு விழா உடையுடன் வந்தார்.

துணைவேந்தர் எஸ். சாதிக் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் வழங்குவதற்கான குறிப்புகளைத் துணைவேந்தர் படித்தார்.

பின்பு சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேந்தர், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கவுரவ டாக்டர் (D.Litt.) பட்டத்தை வழங்கினார். மண்டபத்தில் குழுமியிருந்தவர்களின் பலத்த கைத்தட்டலுக்கிடையே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் 481 பட்டதாரிகள் நேரடியாகப் பட்டம் பெற்றனர். அவர்களில் 267 பேர் பெண்கள். பல துறைகளில் முதலிடம் பெற்ற மாணவ மாணவியருக்கு மேதகு ஆளுநர் பட்டங்களை வழங்கினார் இவர்களைத் தவிர மேலும் 25,942 நபர்கள் இவ்வாண்டு பட்டம் பெற்றனர்.

பிரபு என்ற பார்வையற்ற மாணவர் ஆங்கில இலக்கியத்தில் முதலிடம் பெற்று, மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து பட்டம் பெற்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருக்குக் கைலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார். இவ்விழாவில் அனைத்து அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**என். இளங்கோ.**

அறிவினையும், திறமையையும் சகோதர மனிதர்களின் நலனுக்காக உபயோகத்திற்காகப் பயன்படுத்த வே அவர்களைச் சுரண்டுவதற்காக அல்ல என உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும். தனக்கும் தன் குடும்பத்திற்கும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அமைத்துக் கொள்வதைக் காட்டிலும் தொண்டு செய்வதற்கே முன்னுரிமை அளித்திடல் வேண்டும். அதிகபட்ச சேவை, அதிகபட்ச இலாபமல்ல என்ற குறிக்கோளுக்கே ஒருவன் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். கல்வித் துறையிலுள்ள அளவுக்கு மீறிய சிறப்புத் தகுதிகளினால் உண்டாகும், தனி மனிதனின் நசுக்கும் சக்தியினை, ஒதுக்கிவிட வேண்டியதன் அவசியத்தை அர்நா டாயன்பி சரியாக வலியுறுத்தியு ளார். அனைத்து வழிகளிலு இலட்சக்கணக்கான மக்களின் நல களைக் கவனிக்க வேண்டிய நம்மைப் போன்ற சமுதாயத்தில் எடுத்துக்

கொள்வதின் தேவையைவிட, கொடுக்கப்பட வேண்டியதன் தேவை முக்கியமாகின்றது.

நாம் மாணவர்களுக்குத் தரும் கல்வி முறையினால் சமுதாய முழுமைக்கும்நன்மை ஏற்பட வேண்டும். சமுதாயத்தின் நன்மைக்கு, கல்வியே தவிர, கல்விக்காக சமுதாயமல்ல. மாணவர்களின் மனதில் இந்த அடிப்படை அம்சங்களைப் பதிய வைக்க கல்வி பயன்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். சில்லறை விஷயங்கள், குறுகிய மனப்பான்மை, சாதி, இன உணர்வு களைத் தூண்டுதல் அல்லது மற்ற வெறுப்பு ஆகியவை அறவே ஒழிக்கப்பட வேண்டும். இந்தத் தேவை நம் அனைவருக்கும் மிகவும் முக்கியம். அதுவும் குறிப்பாகப் பிரிவினைவாத சக்திக்கு ஒரு பொய்யான மரியாதை கிட்டியுள்ள இந்தக் காலத்தில், இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு கூறினார்.

இந்தியாவில் முதலில் முக்கியமானது நாட்டின் ஒற்றுமையைப் பேணிக்காப்பதுதான், அரசியல் ஒற்றுமையை மட்டுமல்ல. பிரிந்து தனியே செல்ல வேண்டுமென்னும் தூண்டுதலை ஒதுக்கி மதத்தின் பெயரால் எழுப்பப்பட்டுள்ள தடைகளை உடைத்து - மாநிலங்களுக்கிடையேயுள்ள தடைகளை ஒடுக்கக்கூடிய சிந்தனைக்கும், மனதுக்கும் உள்ள ஒற்றுமையை பேணிக்காத்திட வேண்டும். தீவிரவாதத்திலும் வன்முறையிலும் நம்மை நாம் இழந்துவிடக் கூடாது என்பது மிகவும் முக்கியம். தேசிய ஒருமைப்பாடும், முறையான வளர்ச்சியும் இன்று மிகவும் அத்தியாவசியம்.' இந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இன்றும்உண்மையாக உள்ளன.

உங்களது பட்டமளிப்புகளின் சின்னமான உடைகளில் இன்று நீங்கள் காணப்படும் இந்த அருமையான சந்தர்ப்பத்தில், கல்வி முடிவேயில்லாமல் தொடருகிறது என்பதையும், கல்வியே சுய வளர்ச்சிக்காகத்தான் என்பதையும் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். போட்டி தேவைதான் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அது ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும். தனிமனித முன்னேற்றம் தேவைதான். ஆனால் அது சமுதாயத்தின் சிறந்த, பெரிய அளவிலான நலத்தில் இருக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் தேவைதான். ஆனால், அது யாருடைய அழிவிலும் இருக்கக் கூடாது. சமூக நீதியின் தேவையை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டும். தரமான கல்வி ஒருவன் தன் தனித்தன்மையையும் சமூக, தேசிய அடையாளங்களையும் பெறுவதற்கு உதவியாக இருக்க வேண்டும் நமக்குத் தெளிவான இலட்சியங்களை அமைத்துக் கொள்வதில் தான் நம் முன்னேற்றம் அடங்கியுள்ளது. ஆனால், மகாத்மா காந்தி அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்ததைப் போல், வழிமுறைகளும் முக்கியமே. இதைச் சற்றுப் புரிந்து கொள்வோமேயானால், அது நம்மை நல்ல மனிதர்களாகவும், அதிக உபயோகமுள்ள குடிமக்களாகவும் உருவாக்கும்.

இங்கு பட்டங்களையும், பரிசுகளையும் பெற்ற அனைத்து இளைஞர்களையும் பாராட்டுகிறேன். நம் நாட்டிற்கும், மனித குலத்திற்கும் சேவை புரிவதில் சிறந்த எதிர்காலத்தைப் பெற்றிட உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கலை-பண்பாட்டு இயக்ககம்

**தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் அங்கமாக, கலை- பண்பாட்டு இயக்ககம் தொடங்கப்படும் என்று வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார். அதன்படி, கலை-பண்பாட்டு இயக்ககம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்.**

**இந்த இயக்ககம், மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி, கலை- கைத் தொழிற் கல்லூரிகள், அரசு இசைப் பயிற்சி மையம், இயல், இசை, நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவர் இல்லம் ஆகிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப் பட்டு அமைக்கப்பட்டுள்ளது.**

**தமிழகத்தின் பழங்கலைகளுக் ...ம், இசை, நாட்டியம், நாடகம், ...ின் கலைகள் ஆகியவற்றுக்கும் ...ாக்கமும், ஆக்கமும் வழங்குவதை இந்தப் புதிய இயக்ககம் நோக்கமாகக் கொண்டு செயல்படும்.**

## ஊனமுற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சி

**தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்க, சமூகநலத்துறை திட்டமிட்டுள்ளது.**

**இந்தப் பயிற்சியில் சேர்வதற்குச் சில தகுதிகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:**

**1. ஊனமுற்ற பெண்களாக இருக்க வேண்டும்.**
**2. வயது வரம்பு: 18 வயதுக்கு மேற்பட்டு 35 வயதுக்குள் இருக்க வேண்டும்.**
**3. 8-வது வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால், பயிற்சிக்குப் பின் அரசு நடத்தும் தேர்வில் பங்கு பெறலாம்.**
**4. 8-வது வகுப்புக்குக் கீழ் படித்தவர்கள் அரசுத் தேர்வு எழுத முடியாது.**
**5. பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்.**
**6. பயிற்சிக் காலத்தில் 50 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்.**

**இந்தப் பயிற்சியில் சேர விரும்பும் உடல் ஊனமுற்ற பெண்கள், உதவி இயக்குநர் (பணி அமர்த்துதல்), சமூகநல இயக்ககம், சேப்பாக்கம், சென்னை-600 005 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டும். பயிற்சிக்குப் பிறகு, கூட்டுறவுச் சங்கங்களில் அவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு உதவி செய்யப்படும்.**

# கர்நாடகக் கொடுமைகளுக்கு, ஜனநாயக வழியில் நிரந்தர முடிவு காண்போம்!

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

**கா**விரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், நமது பெருமுயற்சியால் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள நியாயமான வெற்றியை, கர்நாடக அரசும் அங்குள்ள அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளாததால், தற்போது அங்கு நடைபெற்று வரும் வன்முறை மற்றும் கலவரச் சம்பவங்களைப்பற்றி, நாம் அனைவரும் அறிவோம். கர்நாடகத்தில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களின்மீது இப்படிக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களினால், அவர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொணாக் கொடுமைகளின் காரணமாக, அவர்கள் கர்நாடக மாநிலத்தை விட்டு வெளியேறி, தமிழகத்தை நோக்கித் தினந்தோறும் ஓடி வந்துகொண்டிருக்கின்றனர்.

இக்கொடுமைகளுக்கு ஜனநாயக வழியில் ஓர் நிரந்தர முடிவு காணவும், இப்பிரச்சினையில் தமிழகத்தின் முடிவினை ஒரே குரலில் ஒலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் தான், இன்று இந்தக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். இக்கூட்டத்திற்கு வருகை தந்து நல்ல கருத்துகளையும், ஆலோசனைகளையும் கூற இருக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும், பிரதிநிதிகளையும், தமிழக அரசின் சார்பில் வரவேற்கின்றேன்.

தற்போது நம் முன் இருக்கின்ற இந்தப் பிரச்சினை குறித்து, இது நாள் வரை மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நம் அனைவரின் பெருமுயற்சி காரணமாக, தமிழகத்தின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், மத்திய அரசு காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் 10.12.1991 அன்று வெளியிட்டது. உச்சநீதி மன்றத்தின் ஆணைகளுக்கு இணங்க, மத்திய அரசால் சட்டத்திற்குட்பட்டுத் தோற்றுவிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் உச்சநீதி மன்றத்தின் கருத்துரைகளைப் பெற்ற பின்னரே மத்திய அரசு அதன் அரசிதழில் வெளியிட்டது. இதனை எதிர்த்து 12.12.1991 அன்று, மாண்டியா நகரில் வன்முறை வெடித்தது. அன்று கர்நாடக விவாசாயிகள் சங்கம் மாண்டியாவில் பந்த் அறிவித்து நடத்தியபோது, காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று.

கர்நாடக மாநிலத்தில் 13.12.'91 அன்று ஒரு பொது வேலைநிறுத்தம் அனுசரிக்கப் போவதாகக் கர்நாடக அரசே அறிவித்து, அதனை அரசியல் லாபத்திற்காகத் திசை திருப்பி, அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கி உள்ளனர். ஆண்டாண்டுக் காலமாகக் கர்நாடக மாநிலத்தில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்துவரும் தமிழ் மக்களை அடையாளம் கண்டு அவர்களுக்குக் கொடுமை இழைத்துள்ளனர். அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும்மனிதாபிமானமே இல்லாது சேதங்கள் விளைவித்துள்ளனர். ஒரு குற்றமும் செய்யாத தமிழ் மக்கள், அங்கு அவர்கள் தங்களது சுய உழைப்பால் ஈட்டிய சொத்துக்களை இழந்து, இன்று அகதிகளாக உயிருக்குப் பயந்து தமிழகத்திற்கு ஓடி வந்து கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமே, முன்னெச்சரிக்கையோடு சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற கர்நாடக அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்காததுதான். காலத்தோடு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், இந்த அநாகரீகமான அராஜகச் செயல்களைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்.

கர்நாடகத் தமிழர்களைக் காக்கின்ற தார்மீகப் பொறுப்பு தமிழக அரசிற்கும், தமிழக மக்களுக்கும் இருப்பதால், நான் 13.12.1991 அன்றே கர்நாடக முதல்வரை இப்பிரச்சினையில் உடனடியாகக் கவனம் செலுத்தி, கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அன்றே இந்தியப் பிரதமருக்கும் இது தொடர்பாக ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பி, கர்நாடகத் தமிழர்களைப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

14.12.1991 அன்றும் வன்முறைச் சம்பவங்கள் பெருத்த அளவில் தொடர்ந்தன. தமிழ் மக்கள் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் தங்களின் உடைமைகளை இழந்தனர். அன்றே நான் மத்திய அரசு அமைச்சர்களான திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், திரு. சிந்தா மோகன் ஆகியோருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, இராணுவத்தையோ அல்லது மத்திய அரசின் காவற்படைகளையோ உடனடியாகக் கர்



நாடகத்திற்கு அனுப்பி வைக்க என் சார்பில் பிரதமரை வற்புறுத்துமாறு வேண்டினேன்.

15.12.91 அன்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தன. கர்நாடகத்தின் பல பகுதிகளில் தமிழ்மக்கள் தாக்குண்டனர். அன்றே நான் மீண்டும் கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கும், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், விரைந்து அமைதி காக்க வேண்டிய அவசியத்தையும், தமிழ் மக்களின் இழப்புகள் அனைத்தும் ஈடுசெய்யப்பட வேண்டுமென்றும் கோரினேன். தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்குக் கர்நாடக முதலமைச்சர்தான் முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும், இந்தியப் பிரதமர் மேலும் தாமதிக்காமல் கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்பி நிலைமையைச் சீராக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையில் தான் மைய அரசு மத்திய காவல் படைகளைக் கர்நாடகத்திற்கு அனுப்பியது.

கன்னட வெறியர்களின் வன்முறை நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் தங்கள் சொத்துக்களை முழுமையாக இழந்து, அடிபட்டு, காயங்களுடன் கர்நாடக மாநிலத்தைவிட்டு வெளியேறி தமிழகம் வரத் தொடங்கினர். அவ்வாறு தமிழகம் வரும் தமிழர்களுக்கு உணவு, உடை, மருத்துவம் போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

தொடர்ந்து நான் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு டெலக்ஸ் செய்திகள் மூலமும், தொலைபேசி மூலமும் பல முறை தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண உதவும்படி தமிழக அரசின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் கேட்டுக் கொண்டேன். மத்திய அரசும் எனது வேண்டுகோளுக்கு இணங்க கர்நாடக மாநிலத்திற்கு மத்திய காவற் படைகளை அனுப்பியதையும் இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த சூழ்நிலையில், மத்திய அரசு இது பற்றி மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டியதை வற்புறுத்தி, வன்முறை நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்த சிலரைச் சுட்டிக்காட்டி, ஏராளமான தமிழ் மக்கள் தமிழ்நாடு வந்துள்ளதையும், அதனால் இங்கு ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையையும் எடுத்துரைத்து, பிரதமர் இதில் உடனடியாகத் தலையிட்டு கர்நாடகத்தில் வாழும் தமிழர்களைக் காக்க வேண்டும் என்று கோரி, 21.12.1991 அன்று விரிவாகக் கடிதம் ஒன்றும் எழுதினேன்.

அதனைத் தொடர்ந்து, 23.12.'91 அன்று காலை 9.15 மணிக்கு நான் பிரதமர் அவர்களை டெல்லியில் நேரில் சந்தித்து இப்பிரச்சினை தொடர்பாக மெமோரண்டம் ஒன்றினையும் அவர்களுக்கு நேரில் கொடுத்து, தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும், நிலைமைகள் உடனே சீர்செய்யப்பட வேண்டுமென்றும், இழப்புகள் ஈடுகட்டப்பட வேண்டுமென்றும், விரைவில் கர்நாடக மாநிலத்தில் அரசியல் ரீதியிலும், மக்கள் உறவு முறைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டு, புதிய சுமுகமான உறவுகள் வளர்க்கப்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

இந்தியப் பிரதமர் அவர்கள் இது பற்றி மத்திய அரசு ஆவன செய்யுமென்றும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இழப்புகளை ஈடுசெய்ய வழிவகைகள் செய்யுமென்றும், கர்நாடக மாநில அரசுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குமென்றும் உறுதியளித்தார்.

வன்முறை குறைந்துள்ளது எனக் கருதிக் கொண்டிருக்கும் வேளையில், கடந்த வாரத்தில் மேலும் பல இடங்களில் மீண்டும் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. குறிப்பாக சாமராஜநகர், நஞ்சன் கூடு, குண்டலுப்பேட்டை, கொள்ளேகால் போன்ற இடங்களிலிருந்து மேலும் ஆயிரக்கணக்கானோர் நீலகிரி, பெரியார், கோவை மாவட்டங்களுக்குப் பரிதவித்து வரத் தொடங்கியுள்ளனர். இதுவரை 71,000 பேர்களுக்கும் மேலான தமிழர்கள் இவ்வாறு அகதிகளைப் போலத் தமிழகம் வந்துள்ளனர்.

இவ்வாறு வரும் தமிழர்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதிகள் உடனடியாக அளிப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்துள்ளது. கர்நாடக மாநில எல்லைக்கு அருகிலுள்ள தமிழக மாவட்டங்களில், இவ்வாறு வருபவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, அவரவர் விரும்புகின்ற அவர்களின் சொந்த ஊர்களுக்குப் பேருந்துகளில் இலவசமாக அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு சொந்த ஊர்களுக்குச் செல்ல விரும்பாதவர்களுக்காகத் தற்போது பெரியார் மாவட்டத்தில் 20 இடங்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 10 இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் 9 இடங்களிலும், தருமபுரி மாவட்டத்தில் 5 இடங்களிலும், நீலகிரி மாவட்டத்தில் 4 இடங்களிலும், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 2 இடங்களிலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ஓரிடத்திலும், உதவி மற்றும் நிவாரண முகாம்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடைகள், மற்றும் சமையல் பாத்திரங்கள் அளிக்கப்படுகின்றன. உடைகளைப் பொறுத்தமட்டில் ஆண்களுக்குப் பெரியவராயின் 2 வேட்டி அல்லது 2 லுங்கிகளும், 2 உள் அரைக்கால் சட்டையும் கொடுக்கப்படுகிறது. பெண்களுக்குப் பெரியவராயின் 2 சேலைகள், 2 சட்டைகள் மற்றூர் ஓர் உள் பாவாடை கொடுக்கப்படுகிறது. சிறுவர்களுக்கு 2 அரைக்கால் சட்டைகள், ஓர் உள் அரைக்கால் சட்டை மற்றும் ஒரு ஸ்லாக் சட்டை கொடுக்கப்படுகிற[து]. சிறுமியர்களுக்கு ஒரு பாவாடை, [...] சட்டை மற்றும் ஒரு கவுன் கொடு[க்கப்]படுகிறது. மேலும் ஒரு குடு[ம்பத்]திற்கு 2 துண்டுகளும், உணவு சமை[க்க] மூடியுடன் கூடிய ஒரு பாத்திரமு[ம்]

**உண்மையின் ஒளிப்பாதையில் நம்பிக்கை வைத்து அதைப் பின் பற்றிச் செல்லுங்கள். அந்த ஒளியே கருமேகத்திலிருந்து விடுபட்ட சந்திரனைப் போல் உலகம் முழுவதும் பிரகாசிக்கின்றது.**

**—புத்தர்**

# தமிழ்நாட்டில் கன்னடியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டும்

# எங்கள் தமிழர்க்குக் கர்நாடகத்தில் இன்னலா?

## தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம்

1. கர்நாடக மாநிலத்தில் பல்லாண்டுக் காலமாகவும், தலைமுறை தலைமுறையாகவும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அங்குள்ள கன்னட வெறியர்களால் எந்தக் காரணமும் இன்றி வன்முறைக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கன்னடர்களால் திட்டமிட்டுத் தாக்கப்பட்டு, தங்களது உடைமைகளை இழந்து தமிழகம் வந்து சேர்ந்துள்ளனர். கர்நாடக மாநிலத் தமிழ் மக்கள் இப்படித் தொடர்ந்து பல்வேறு கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டு வருவது குறித்து அமைச்சரவை ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

2. வழிவழியாகக் கன்னடர்களோடு ஒன்றி வாழ்ந்து- கர்நாடக மாநிலத்தின் செல்வ உயர்விற்கும், வளர்ச்சிக்கும் உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள், கலவரத்தின் மூலம் அவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை காரணமாக, இன்று தங்கள் இல்லங்களையும், உடைமைகளையும் இழந்து தங்கள் உயிருக்கே பாதுகாப்புத் தேடும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்புத் தர, கர்நாடக அரசு தவறியது குறித்து வருந்துவதோடு, இந்த வன்முறைச் செயல்களையும் அமைச்சரவை கண்டிக்கிறது.

3. வன்முறை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த பொழுது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களுடன் நேராகவும், தொலைபேசி மூலமாகவும் டெலக்ஸ் செய்திகள் மற்றும் கடிதங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும், இந்த வன்முறை மற்றும் கலவர நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட வேண்டுமென்று பலமுறை கேட்டுக் கொண்ட பொழுதும் மத்திய அரசு உடனடி

---

சாம்பார் போன்றவை தயாரிப்பதற்கு ஒரு பாத்திரமும், 2 பெரிய கரண்டிகளும், 2 சாப்பிடும் தட்டுக்களும் மற்றும் 2 டம்ளர்களும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பெரியவர்க்கும் ஒரு பாய் மற்றும் போர்வையும் கொடுக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உதவி மற்றும் நிவாரண முகாம்களைத் திறக்க உத்தரவிடப்பட்டதோடு, மாண்புமிகு அமைச்சர்களையும், உயர்மட்ட அதிகாரிகளையும் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் அதிகமாக வந்து தங்கியுள்ள, கோவை, நீலகிரி, பெரியார், தருமபுரி, வட ஆர்க்காடு- அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களுக்கு அனுப்பி, நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டுத் துரிதப்படுத்த ஆணையிட்டுள்ளேன்.

இந்த உதவி மற்றும் நிவாரண முகாம்களுக்காகும் பெரும் பொருள் செலவை, இக்கட்டான நிதி நிலையிலும் கூட இந்த அரசு ஏற்றுச் செய்து வருகிறது. ஏனென்றால், து தமிழ்நாட்டின் மானப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையில் ம் அணுக வேண்டிய நடைமுறைளை உடன் தீர்மானிக்கின்ற பின்னணிக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து அவர்களுக்குத் தக்க புகலிடமும், நிவாரணமும் அளிப்பதோடு நில்லாமல், அவர்களது உரிமைகளையும், உடைமைகளையும் ஜனநாயக வழியில் அவர்களுக்கு மீட்டுத் தருவது போல், நமது தலையாய கடமையாகும் என்பதைத் தெளிவாக்க விரும்புகின்றேன்.

இந்தத் தருணத்தில் நமது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி என் நினைவிற்கு வருகின்றது. அதில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை இக்கூட்டத்தில் எடுத்துக் கூறுவது மிகவும் பொருத்தமாக அமையும் என்று நம்புகின்றேன்.

அது - 'நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்கவும், வலுப்படுத்தவும், என்னை அர்ப்பணித்துச் செயல்படுவேன் என்று மனமார உறுதி கூறுகிறேன். நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபடமாட்டேன் என்றும், மதம், மொழி, வட்டார மற்றும் அரசியல் அல்லது பொருளாதார பேதங்களுக்கு அமைதியான முறையிலும், அரசியல் சட்டத்திற்குட்பட்டும், தீர்வுகாணத் தொடர்ந்து பாடுபடுவேன் என்றும், நான் மேலும் உறுதி கூறுகிறேன்'- என்று உள்ளது.

கர்நாடக மாநில அரசும், அங்குள்ள அரசியல் கட்சிகளும், தீய சக்திகளும்; நிச்சயமாக நமது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை மதிக்காதது மட்டுமல்ல, உடைத்தெறிந்துள்ளன என்பதை நாம் இன்று உணர்கின்றோம். ஆனால் நாம் என்றென்றும் நாட்டின் சுதந்திரத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் நம்மை அர்ப்பணித்துச் செயல்படுபவர்கள் என்பதை நாடு நன்கு அறியும். நாம் அந்தப் பெருமைமிக்க நிலையில் இருந்து சிறிதும் விலகாது செயல்பட்டு, அமைதியான முறையில், இன்று நம் முன்னர் உள்ள இந்த முக்கியப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரச் தீர்வு காணவேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள கட்சித் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**( சென்னையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை)**

யாக நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாகக் கர்நாடக மாநிலத்தில் உள்ள கலவரப் பகுதிகளுக்கு இராணுவத்தையோ அல்லது மத்திய அரசுப் படைகளையோ அனுப்பி அமைதி காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை மீதும் மைய அரசு காலம் தாழ்ந்து நடவடிக்கை எடுத்தது. குறித்த காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், வன்முறை நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இது குறித்து அமைச்சரவை அதிருப்தியைத் தெரிவிக்கின்றது.

4. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டபொழுது, பிரதமர் அவர்கள் கர்நாடக மாநிலத்தில்நிலவும் பதட்ட நிலை குறித்து விசாரிக்க, மைய அரசின் இரண்டு மூத்த அதிகாரிகளை அனுப்புவதாகக் கூறியிருந்தும், மத்திய அரசின் உள்துறையைச் சார்ந்த இணைச் செயலாளர் மட்டத்தில் ஒரு அதிகாரியை மட்டும் கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பியிருப்பது வருந்தத்தக்கது. இந்த ஒரு அதிகாரியும், மிகக் குறுகிய கால கட்டத்தில் கர்நாடகத்தில் உள்ள உண்மை நிலவரத்தையும், அங்குள்ள தமிழ் மக்களின் பாதிப்புகளையும் முழுமையாக விசாரித்து அறிந்து கொள்வது என்பது நடைமுறையில் இயலாத ஒன்றென்பதால், பிரதமரின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பது பற்றியும் அமைச்சரவை அதிருப்தியைத் தெரிவிக்கின்றது.

5. 70 ஆயிரத்திற்கும் மேலான தமிழ் மக்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது இங்கு ஒரு அசாதாரண நிலையினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வன்முறைச் சம்பவங்களால் அச்சத்திற்கும், கவலைக்கும் ஆளாக்கப்பட்ட தமிழ் மக்கள், பாதுகாப்பிற்காகத் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தங்கள் கர்நாடக மாநிலத்தில் தற்போதும் தொடருகின்றன. இதனால் இங்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு, உணவளித்து, தங்க இடம் கொடுத்து, தேவையான பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பினை மாநில அரசு மேற்கொள்வதால் கணிசமான செலவு ஏற்படுகிறது. இந்தச் செலவு அனைத்தையும் மைய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அமைச்சரவை தீர்மானிக்கிறது.

6. மேலும், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அங்கு சென்று தொடர்ந்து வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் கர்நாடக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கான அறிவுரைகளை மத்திய அரசு கர்நாடக அரசுக்கு வழங்க வேண்டுமென்றும், அந்த அறிவுரைகளை உடன் செயற்படுத்த வேண்டுமென்றும், கர்நாடக, மத்திய அரசுகளைக் கேட்டுக் கொள்ள அமைச்சரவை தீர்மானிக்கிறது.

7. வன்முறைச் செயல்களால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்களுக்கும், உடற்காயங்களுக்கும், பொருள் இழப்புக்களுக்கும் கர்நாடக அரசு உடனடியாக உரிய நிவாரணம் அளிக்க வேண்டுமென்று அந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ள அமைச்சரவை தீர்மானிக்கிறது.

8. அத்தகைய நிவாரணத்திற்குத் தகுதி பெற்றுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொழுது தமிழகத்திற்கு வந்து தங்கியிருப்பதால், அவர்களுக்கும் கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் இந்த நிவாரணத்தை வழங்குவதற்கான விசாரணையை நடத்த மத்திய அரசு உச்சநீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க முன்வர வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கோரிக்கைவிட அமைச்சரவை தீர்மானிக்கிறது. அத்தகைய விசாரணைக் குழுவின் நியமனத்தை ஏற்று, அதன் பணிக்கான எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டுமென்றும் அமைச்சரவை கர்நாடக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

9. இதுவரை தாக்குதலுக்குள்ளாகி கர்நாடகத்திலிருந்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபோதிலும், தமிழ் நாட்டின் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த 380 கன்னடியர்கள் மட்டுமே கர்நாடக மாநிலத்திற்கு அச்சத்தின் காரணமாகச் சென்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே தமிழகத்திற்குத் திரும்பி விட்டனர்.

தமிழ்நாட்டில் வாழ்கின்ற கன்னடியர்களுக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அவர்களைப் பாதுகாக்க எல்லாவித நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுக்கும் என்ற உறுதியை இந்த அமைச்சரவைக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

—மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தி[ல்] நடைபெற்ற அமைச்சரவைக் கூட்[டத்]தில், கர்நாடக மாநிலத்திலிருந்[து] வந்துள்ள தமிழ்மக்களின் நி[லை] குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழு விவரம்.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் புது வழித்தடங்களில் பேருந்துகள்

**1992-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் தமிழ்நாட்டில் ஆயிரம் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்படும்.**

**உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.22 கோடி செலவில் 550 பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும், அதிக அளவில் டீசலைச் சேமித்த போக்குவரத்துக் கழக நிறுவனங்களுக்கும் சிறந்த ஓட்டுநர்களுக்கும் சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் பரிசளித்துப் பேசுகையில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார்.**



# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு

தேசிய வளர்ச்சிக்கான சில இன்றியமையாத விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாடக்கூடியிருக்கும் இந்த வேளையில் அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் பொதுவான பொருளாதார நிலை குறித்து அறிக்கைகள் கூறும் தகவல்களைக் கண்டு இடிந்து போய் விடாமல், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நாட்டை நிர்மாணிப்பதற்கான செயல்களில் தீவிரம் காட்டவேண்டும்.

வளைகுடா யுத்தம் போன்ற சம்பவங்களால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் வளர்ச்சியையும், ஸ்திர நிலையையும் அடைய முடியுமா? என்ற ஐயத்தை ஏற்படுத்திவிட்டது. பண வீக்கத்தையும், விலைவாசி உயர்வையும் உடனடியாகக் கட்டுப்படுத்தியாக வேண்டும். விலைவாசி உயர்வு குறித்துத் தங்களுக்கு ஏற்படும் அதிருப்திகளை க்கள் மாநில அரசுகள் மீதுதான் காட்டுகிறார்கள். ாருளாதாரத் துறையில் அமைப்பு ரீதியான ற்றங்களைச் செய்யும்போது அவற்றால் ஏற் ம் தீய விளைவுகள் ஏழை மக்களைப் பாதிக் மல் பார்த்துக்கொள்ள வேண்டும். திட்டமிடு ின்ற வேளையில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த தளராத முழுமையான நமது ஈடுபாட்டை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

திட்டமிடலில் காணப்படும் மாறுதல்கள் மகிழ்ச்சி தருகின்றன. மத்தியில் நாம்கடைப்பிடித்து வந்த அதிகாரக் குவியல்முறை மாறி இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்படும் இடையூறுகளைக் களைகின்ற ஒரு புதிய திட்டம் வேண்டும். திட்ட அணுகுமுறை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பெரும்பாலான இலக்குகளைப் பாராட்டும் அதே வேளையில், நாம் கவனிக்க வேண்டிய பிற அம்சங்கள் குறித்தும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய வளர்ச்சிக்காக ஒவ்வொரு உத்தியைக் கையாள வேண்டியுள்ளது. இந்த நிலையில் மாநிலங்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்காகத் திட்டமிடல் அமைந்து விடக்கூடாது. தமிழ்நாட்டில் போதிய இயற்கை வளங்கள் இல்லை. எனவே அக வளங்களை மட்டும் நம்பியிராமல், புறம் சார்ந்து வளரக்கூடிய உத்தியை வகுக்க வேண்டிய கட்டாயம் அதற்கு இருக்கிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டுகின்ற வேளையில் மாநிலங்கள் தங்களது வளர்ச்சிக்கான யுக்திகளை வகுத்துக்கொள்ள அனுமதிக்கப்படவேண்டும்.

# உரிய பங்கை வழங்குக!

## புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

வேளாண்மைத்துறையும், கிராமப் பகுதிகளில் உள்ள இதரத் துறைகளும்தான் தொடர்ந்து பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றன. இந்த வேளாண்மை சிறக்க தண்ணீர் வளம் வேண்டும். தமிழகம் தன்னுடைய நிலத்தடி நீர் இருப்பில் பெரும் பகுதியைப் பயன்படுத்திவிட்டது. கடலில் வீணாகக்கலக்கும் உபரி நீரை நாட்டின் வறட்சியான பகுதிகளுக்கு மடை மாற்றம் செய்யும் ஒரு 'நதி நீர்த் தொகுப்பை' (River Water Grid) உருவாக்க வேண்டியதின் அவசியத்தை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தீபகற்ப நதிநீர்த் தொகுப்புக்கான ஒரு தொடக்கம் அமையும் என்று நான் நம்புகிறேன். மத்திய அரசு முன்நின்றால் இது ஒன்றும் செய்ய முடியாத செயல் அல்ல என்று கருதுகிறேன்.

கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பெருமளவு முதலீடு எதையும் மத்திய அரசு செய்யவில்லை. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான மத்திய அரசு நிறுவனங்களின் உத்தேசத் தொழில் திட்டங்களைப் பார்க்கும்போது, தமிழகத்துக்கான மத்திய அரசின் முதலீடு மிகக் குறைவு என்று தெரிகிறது. மத்திய அரசு இனியாவது தமிழகத் தொழில் திட்டங்களில் பெருமளவு முதலீடு செய்யும் என்று நம்புகிறேன். தென்னக நில வாயு தொகுப்புத் திட்டத்தை மத்திய அரசு விரைந்து தொடங்கவேண்டும். அது தமிழ் நாட்டுக்குத் தேவைப்படும் நில வாயுவை வழங்கும்.

வேளாண்மை, தொழில் துறை தவிர, ஏனைய துறைகளிலும் தனியார் முதலீட்டை அனுமதிப்பது என்ற முடிவு வரவேற்கத் தக்கது. அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு சரியாக இல்லை என்பதற்காக அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பெருக்காமல் விட்டுவிட முடியாது. ஜெயங்கொண்ட சோழபுரம் என்ற இடத்தில் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்கவும், அனல் மின்சார நிலையத்தை அமைக்கவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை நிறைவேற்ற உத்தேசித்துள்ளோம். கூட்டுத்துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தத் திட்டத்துக்கு ரூ.5,000 கோடி முதலீடு தேவைப்படும். 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும். தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையில் கணிசமான அளவை இது பூர்த்தி செய்யும். இந்தத் திட்டத்தை விரைவிலேயே நாங்கள் தொடங்கும் வகையில் மத்திய அரசின் அனுமதி கிட்டும் என்று நம்புகிறேன்.

உலகப் பொருளாதாரத்தோடு இந்தியப் பொருளாதாரத்தை ஒருங்கிணைப்பது எப்படி என்பதற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். தமிழ்நாட்டுக்கும், சிங்கப்பூருக்கும் இடையே வர்த்தக உறவு ஏற்படுவது இதற்கு உதவும். இதற்காகத் தமிழ்நாட்டின் ஒரு துறைமுகத்தை மாற்ற வேண்டும். இந்த உத்தி வெற்றியடைய நாம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

புதிய சாலைகளை அமைக்கவும், ஏற்கெனவே போடப்பட்ட சாலைகளைப் பராமரிக்கவும் ஒதுக்கப்படும் நிதியின் அளவு வெகுகுறைவாக இருக்கிறது. 'மத்திய சாலை நிதி' இதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகுகூட, இந்த நிதி மாநிலங்களுக்குத் தரப்படவில்லை. சாலை மேம்பாட்டுக்காகவே உருவாக்கப்பட்டது இந்த நிதி. எனவே, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் மாநில அரசுகளுக்குக் கூடுதல் நிதி வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். சாலைகளை உபயோகிப்போரிடமிருந்து வரி வசூலிப்பது குறித்து நாங்கள் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறோம்.

வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு ஆகிய அம்சங்களில் முக்கியத்துவம் காட்டவில்லையென்றால், திட்டமிடலுக்கே அர்த்தம் இல்லை. வறுமை ஒழிப்புத் திட்டங்களை ஒருங்கிணைப்பதை வரவேற்கும் அதேவேளையில், இவற்றைத் திட்டமிடவும், அமல் செய்யவும் மாநிலங்களுக்கு அதிக உரிமைகளை வழங்கவேண்டும்.

மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தமிழ்நாடு எப்பொழுதுமே முன்னுரிமை வழங்கி வந்துள்ளது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உதவும் குடும்பநலத் திட்டங்களை முறையாக அமல் செய்வதில் தமிழ்நாடு வெற்றி கண்டுள்ளது. குடும்ப நலம், ஊட்டச்சத்து வழங்கல், ஆரம்பக் கல்வி, குடிநீர் வசதி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், ஏழையர், நலிவுற்றோருக்கான திட்டங்கள் என மனித ஆற்றல் மேம்பட, தொகுப்பான பல திட்டங்களைத் தமிழகம் நிறைவேற்றி வருகிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த முயற்சிகள் மேலும் வலுப்படுத்தப்படும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நாங்கள் மேற்கொண்ட முயற்சி, எங்களுக்கு எதிரான பலன்களைத் தந்து விடக்கூடாது. 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையில் தான் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் மத்திய அரசின் நிதி உதவிகள் அமையும் என்ற வாக்குறுதி எனக்குத் தேவை.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அரசு நிறுவனங்களுக்கான மொத்த முதலீடு



எவ்வளவு என்று தெரிந்தாலும், மத்திய, மாநில அரசுகளுக்குரிய பங்கு என்னவாக இருக்கும் என்று தெரியவில்லை. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவை விட குறைந்து விடாதபடிக்கு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு அமைய வேண்டும். மத்திய அரசு திரட்டும் கடன் தொகையில் 40 சதவிகிதம் மாநிலங்களுக்குத் தரப்படுகின்றது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில் அது 50 சதவிகிதமாக உயரவேண்டும்.

ஒன்பதாவது நிதிக் கமிஷன் பரிந்துரைகளை மறு ஆய்வு செய்யவேண்டும். விலைவாசி நிலைமை கடந்த 2 ஆண்டுகளில் மோசமாகி விட்டதால், அதனடிப்படையிலான பரிந்துரைகளையும் மறுபரிசீலனை செய்வது அவசியம். திட்டமிலா இனங்களில் தமிழ்நாட்டுக்கு உபரி இருப்பதாக நிதிக் கமிஷன் கூறியிருப்பதாலும், உண்மையில் பற்றாக்குறைதான் ஏற்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்தும், மத்திய அரசின் வருவாய்ப்பற்றாக்குறை குறித்தும், கவனம் செலுத்தப்பட்டுள்ளதே தவிர, மாநிலங்களின் மோசமான நிதிநிலை குறித்துப் போதிய அக்கறை காட்டப்படவில்லை. மாநிலங்களின் கடன் பளுவும் கூடிவருவது கவலை தருகிறது. மத்திய எக்ஸைஸ் தீர்வையில் மாநிலங்களுக்குப் பிரித்துத் தரும் பங்கை 50 சதவிகிதம் உயர்த்த வேண்டும். கூடுதலான 5 சதவிகிதம் வரி மாநிலங்களுக்குக் கிடைக்கும் வண்ணம் செய்யவேண்டும். இது நிறைவேற்றப்படாவிட்டால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்குக் கூட பல மாநிலங்கள் சிரமப்படும். ஒன்பதாவது நிதிக் கமிஷன் பரிந்துரை செய்த வருவாய் மானியத்தையும் பரிசீலித்து உயர்த்தவேண்டும்.

மாநிலங்களின் நிதி ஆதாரங்களை உடனடியாக வலுப்படுத்த வேண்டும். அனுப்புச் சரக்கு வரியைக் கொண்டு வர முடிவு செய்திருந்தோம். எதற்கு வரி விலக்குத் தருவது, எவ்வளவு வசூலிப்பது என்பதை விரைந்து முடிவு செய்யவேண்டும். சரக்கனுப்பு வரியை விதிக்க இந்தக் குழு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்றும், மத்திய அரசு அடுத்த நாடாளுமன்றத் தொடரில் இதற்கான மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். சிறு சேமிப்பிலிருந்து கிடைத்து வந்த மாநிலங்களின் பங்கு குறைகிறது. இதையும் உயர்த்தித் தர வேண்டும்.

மத்திய அரசே ஏற்று நடத்தும் சில திட்டங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்படுவது பற்றி அடுத்துக் காண்போம். இந்த மாற்றம் அதிக அளவில் இல்லையென்றாலும் இதன்பின் உள்ள உணர்வை நான் மதிக்கிறேன். எட்டாவது திட்டத்தில் இன்னும் அதிக திட்டங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் மாற்றப்படுகையில் அவற்றுக்கு அளிக்கப்படும் உதவிகளும் தொடர வேண்டும். மத்திய அரசே ஏற்று நடத்தும் புதிய திட்டங்கள் பரவலாக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையும், மாநிலங்களுக்கிடையிலுள்ள திட்டங்களும் மட்டுமே தொடர அனுமதிக்க வேண்டும். இந்த்த் திட்டங்களில்கூட, நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் மாநிலங்களுக்குப் போதிய உரிமை வழங்கப்பட வேண்டும்.

மத்திய உதவியையும், கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமான தொகைகளையும் மாநிலங்

(44-ஆம் பக்கம் பார்க்க)

# வளமுடன் வாழ்க!



வரப்புயர என்றந்நாள் பாட்டில்
வாழ்த்தியவள் இன்றிருந்தால் பூமிப்
பரப்பதுவே உள்ளதனால் பிள்ளை
பலபெறுதல் தவிர்த்திடுவீர், என்பாள்!

'வளமுடனே வாழ்க!' எனச் சொல்வார்!
வளமதுதான் குறையாமை வேட்பார்!
குளமதிலே மீன்களைப்போல் பிள்ளை
குவியாமை அதில்அடக்கம் அன்றோ?

'பதினாறும் பெறுக!' என வாழ்த்தின்
பதினாறு 'பிள்ளையெனக் கொள்வார்!
'பதினாறு வகையான செல்வம்
பல்க!' எனப் பொருளாம்! உண்மை!

'வெல்க!' என விளம்புங்கால் நாடும்
வியனுலகும் வெல்வதெனல் அல்ல!
பல்கும்சேய் பிறவாமல் காத்தல்
பயனுறவே வெல்வதுதான், என்பேன்!

'நன்றாக இருங்கள்!' எனில் இன்மை
நலிவகல சிலபிள்ளை பெற்றே
என்றென்றும் நிறைகுடம்போல் செம்மை
இருந்தோங்க வாழ்வதுவே என்போம்!

குடிவிளங்க தீர்க்காயுசு என்றே
கூறுவன யாவையுமே பிள்ளை
நெடியதொகை பெருகாமல் காத்து
நிலவிடவே அமைதிசெயல் அன்றோ?



கவிஞர்
மனசை ப. கீரன்

# நூல் நயம்

### நாலடியார்

**உரையாசிரியர்கள்:**

**தி. சீனிவாசன்**
**சந்திரிகா ராஜமோகன்**

**வெளியீடு:**

சாந்தா பப்ளிஷர்ஸ்
ஸ்ரீபுரம், 2-வது தெரு,
சென்னை-600 014.

பக்கம்:210 விலை:ரூ.5/-

**ப**தினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார், மக்கள் வாழ் வாங்கு வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறுகிறது. 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்னும் பழமொழியால் இதன் பெருமையை உணரலாம்.

நாலடியார் மூலமும்-உரையும் உள்ள டங்கிய நூலாக இது விளங்குகிறது. மூலமும் அதற்கு எதிரே உரையும் என்கிற வகையில் இது அமைந்திருக்கிறது. நூல் அறிமுகம், பாட்டு முதற் குறிப்பு ஆகி யவை படிப்போர்க்குப் பயனுள்ளவை யாகும். பள்ளி மாணவர்கள் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே, எளிய சொற்களோடு இனிய தமிழில் உரை வளம் உள்ளது, இதன் சிறப்பு. கையடக்க அளவில், மலிவு விலையில் அழகிய பதிப்பாக இது வெளிவந்திருக்கிறது.

### பெருமை கொள்வாய் தமிழா!

**ஆசிரியர்: திருச்சி பாரதன்**

**வெளியீடு:**

செந்தில் பதிப்பகம்,
136, பெருமாள் எடத் தெரு,
பாலக்கரை, திருச்சி-620 001.

பக்கம்:120 விலை:ரூ.16/-

**ஒ**ரு சமுதாயத்தைச் சீர்திருத்த - சீர்தூக்கப் படைப்புகள் பெரும்பங்கு வகிக்கின்றன எனலாம். அந்த வகையில் இந்நூலாசிரியர் படைத்துள்ள இந்தப் படைப்பு தமிழனைப் பெருமை கொள்ள வைக்கும் என நம்பலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் ஆற்றிய உரையின் தொகுப்பாக, அத்துடன் தன் வரலாற்றுக் குறிப்பாக மலர்ந்துள்ள இந்நூலை தமிழ் ஆர்வலர் அனைவரும் படிக்கலாம்.

- பொ. மறைமலை.

### அறிவியல் புதுமைகள்

**ஆசிரியர்: மலையமான்**

**வெளியீடு:**

ஒளிப் பதிப்பகம்
3, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-600 018.

...:104 விலை:ரூ.13/-

**அ**றிவியலின் அசுரவேக வளர்ச்சி ...ன் காரணமாக, பல அற்புதங்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. ஹெலிகாப்டர், சட்டைப்பைத் தொலைக் காட்சி, டெரிலின், ஜெராக்ஸ், லேசர் இப்படிப் பல சுவையான அறிவியல் துணுக்குகளின் அழகிய தொகுப்பாக விளங்குகிறது இந்நூல். பள்ளி மாண வர்கள் படித்துப் பயன்பெறத்தக்க நூல்.

- பூங்கொடி.

### வழிகாட்டிய ஒளிவிளக்குகள்

**ஆசிரியர்: பி.வி. கிரி**

**வெளியீடு:**

இராஜேஸ்வரி புத்தக நிலையம்
22, 6-வது தெரு,
பக்தவத்சலம் நகர், பழவந்தாங்கல்,
சென்னை-600 114.

பக்கம்:96 விலை:ரூ.12/-

**வ**ழிகாட்டிய ஒளிவிளக்குகளாய் விளங்கியவர்கள் நம் முன்னோர்கள். அவர்களது வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் வாழ்க்கையில் நடந்த சுவை யான நிகழ்ச்சிகள் இந்நூலில் அழகுறத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள், பாவேந்தர் பாரதிதாசன், டாக்டர் அம்பேத்கர், ஆனந்தரங்கப்பிள்ளை, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, மாயூரம் வேதநாயகர், தமிழ்த் தென்றல் திரு.வி.க., மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார், எழுத்தாளர் அகிலன் ஆகியோரின் வாழ்க்கைச் சித்திரங்கள் இந்நூலில் இடம் பெற் றுள்ளன.

மாணவர் மட்டுமல்ல, பெரியவர் களும் படிக்கலாம்.

### காந்தி வழி வாழ்க்கை

**ஆசிரியர்: டாக்டர் ஜே.சி. குமரப்பா**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625020

பக்கம்:67 விலை:ரூ.8/-

**அ**ண்ணல் காந்தியடிகளின் வாழ்வு, நமக்கெல்லாம் வாழ வழிகாட்டியாக அமைகிறது. அவர் கடைப்பிடித்த அன்பு, சத்தியம், அகிம்சை, முதலானவை வாழ்க்கையின் வெற்றிக்கு வழி வகுத்த தத்துவங்களாகும். அண்ணலின் கருத்து ரைகள் நூல் முழுதும் விரவியுள்ளன.

எல்லாத் திறத்தாரும் படித்துப் பின் பற்ற வேண்டிய பயனுள்ள நூல்.

### ஒப்பனை முகங்கள்

**ஆசிரியர்: ரவிசுப்ரமணியன்**

**வெளியீடு:**

அன்னம் (பி) லிட்.,
சிவகங்கை.

பக்கம்:72 விலை:ரூ.12/-

**க**விதைத் தொகுப்பு புதுக் கவிதைகள் பல இடங்களில் கவிஞரின் சிந் தனைகள் சிலிர்க்க வைக்கின்றன. உதாரணம்,

'சேவலின் கால்களில்
கத்தி பதித்து
ரத்தம் சுவைக்க நிற்கிறது
ஓநாய்கள் கூட்டம்'. —ஆர். சுகுமாரன்

### 'நேருமாமா'

**ஆசிரியர்: எம்.எஸ். தியாகராஜன்**

**வெளியீடு:**

தணிகை பதிப்பகம்
13, தேசிகர் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:96 விலை:ரூ.10.50/-

**கு**ழந்தைகள் படித்து இன்புறத்தக்க 8 சிறுகதைகளும், 'அறிந்து கொள்ள வேண்டிய அரிய செய்திகள்' என்ற தலைப்பில் 225 அறிவியல் துணுக்கு களும் இடம் பெற்றுள்ளன.

முதன் முதல் உலகப்படத்தை வரைந் தவர்... ஐ.நா. சபையிலுள்ள நூல் நிலையத்தின் பெயர்... இவை போன்ற சின்னஞ்சிறு துணுக்குகள் நாம் அறிந்து கொள்ள வேண்டியவைதான்.

- என். குமார்.

### 'அறிவூட்டும் பண்புக் கதைகள்'

**ஆசிரியர்: மனோகரன்**

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை
(மேற்கு சூளை மேடு), சென்னை-94.

பக்கம்:100 விலை:ரூ.12/-

**ஆ**சிரியர் வீட்டிற்குக் கல்விக் கற்க வந்த மாணவர்கள், மழை பெய்யத் தொடங்கவே ஆசிரியர் வீட்டிலே சிறிது நேரம் தங்க... மழை விடும் வரை கதை கூறுவதாக ஆசிரியர் கதை சொல்லத் தொடங்குகிறார்.

மழை ஓயும் வரை ஒன்பது கதை களைச் சொல்கிறார். ஒவ்வொரு கதை யின் முடிவிலும் சொல்லிய கதையிலி ருந்து மாணவர்களைக் கேள்விக் கேட்டுக் கதையின் நற்பண்பை உணர்த்தும் உத்தி சிறப்பு

- குமார்.

# வேளாண் வளர்ச்சிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம்

**பை**யூர் மண்டல ஆராய்ச்சி நிலையம், தருமபுரி கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில், தருமபுரியிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. தருமபுரி, சேலம் மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாட்டின் வடமேற்கு மண்டலத்திற்கான வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் தேவைகளை இந்நிலையம் மேற்கொண்டு வருகிறது.

இம்மண்டலத்தில் சுமார் 70 சதவிகிதம் மானாவாரி நிலங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்குச் சராசரியாகச் சுமார் 825 மி.மீ. மழை 47 மழை நாட்களில் கிடைக்கிறது. இப்பகுதியிலுள்ள மண் வகைகளைச் சுண்ணாம்பில்லாத செம்மண், சுண்ணாம்போடு கூடிய செம்மண் மற்றும் சுண்ணாம்புச் சத்துடன் கூடிய கருமண் எனப் பிரிக்கலாம். இந்நிலங்கள் குறைந்த அயனிகள் மாற்றும் தன்மையும், பெய்யும் மழை நீரைக் குறைந்த அளவே சேமிக்கும் தன்மையும் குறைந்த அளவே ஊட்டச் சத்துக்களையும் கொண்டவை, பயிர்களுக்கு இடப்படும் மணிச்சத்தைப் பயிர்களுக்கு எளிதில் கிடைக்காமல் செய்து வருகின்றன.

தழை மற்றும் மணிச்சத்து மிகக் குறைந்த அளவே காணப்படுகின்றது. கேழ்வரகு, நிலக்கடலை, சோளம், எள், கொள்ளு, நெல், சாமை, உளுந்து, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, பருத்தி, மரவள்ளி, காய்கறிகள், மல்லிகை ஆகியவை இம்மண்டலத்தில் சாகுபடிச் செய்யப்படும் முக்கியப் பயிர்களாகும். ஜூன்-ஜூலை மாதங்களில் கிடைக்கும் தென்மேற்குப் பருவ மழையைக் கொண்டு பெருவாரியான நிலங்கள் பயிரிடப்படுகின்றன. வடகிழக்குப் பருவமழை கிடைக்கும் பகுதிகளில் இரண்டாவது போகமும் மானாவாரியாகவே சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. நிலக்கடலை, கேழ்வரகு, கம்பு, மரவள்ளி ஆகிய பயிர்கள் இறைவையிலும் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள மா சாகுபடிப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு இம்மண்டலத்திலுள்ளது. திராட்சையும் பெருவாரியாகச் சாகுபடியிலுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கங்கள்

1. இராகி, கொள்ளு ஆராய்ச்சிகளில் தலைமையகமாகப் பணியாற்றுதல், முக்கியப் பயிர்களில் உயர் விளைச்சல் ரகங்களைத் தேர்வு செய்து வெளியிடுதல்.

2. மானாவாரி மற்றும் இறைவைச் சாகுபடிக்குத் தேவையான

ஆய்வு செய்யப்பட்டுவரும் டி.பி.ஐ.45, டி.பி.ஐ.55 ஆகிய உயர் விளைச்சல் மாமரங்கள்.






ஆய்வு மையத்தில் தயாரிக்கப்படும் காளான் வித்துக்கள்.

அனைத்துத் தொழில்நுட்பங்களையும் கண்டறிதல்.

3. பயிர்களில் ஏற்படும் பூச்சி நோய்களை அளவீடு செய்து அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளை ஆராய்தல்.

4. முக்கியத் தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தொழில்நுட்பங்களை ஆராய்தல் மற்றும் ரகங்களைத் தேர்வு செய்து வெளியிடுதல்.

5. இம்மண்டலத்திற்குத் தேவையான புது வேளாண் கருவிகளை வடிவமைத்தல், நீர், மண் வளம் பராமரிப்பு முறைகளைக் கண்டறிதல்.

6. வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, சார்நிலைத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்.

7. வேளாண் பெருமக்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் ஆகியவைகளாகும்.

பயிர் மேம்பாடு, பயிர் மேலாண்மை. பயிர்ப் பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விரிவாக்கம் ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த 24 வேளாண் விஞ்ஞானிகள் ஒருங்கிணைந்த முறையில் இம் மண்டலத்திற்கு வேண்டிய ஆராய்ச்சிகள் அனைத்திலும் திட்டமிட்டுப் பயனுள்ள முறையில் செய்து வருகின்றனர்.

முனைப்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக பையூர்-1 என்று பெயரிடப்பட்டுள்ள நெல், இராகி, சோளம், சாமை, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, கொள்ளு, எள், பருத்தி, தக்காளி ஆகிய 10 உயர் விளைச்சல் ரகங்கள் இந்த நிலையத்திலிருந்து இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

பையூர்-1 நெல் ரகம், கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பாசனப் பகுதிகளில் மிக அதிக அளவில் சாகுபடியிலுள்ளது. தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. இதர பையூர்-1 ரகங்கள் வறட்சியைத் தாங்கி உயர் விளைச்சல் கொடுக்கக்கூடியவை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பயிர் மேம்பாடு ஆராய்ச்சியின் விளைவாக 17 உயர் விளைச்சல் வளர்ப்புகள் பல வித பரிசோதனைகளிலும், அனுசரனை ஆராய்ச்சியிலும் உள்ளன. இவை கூடிய விரைவில் சாகுபடிக்கென வெளியிடப்படும்.

இந்நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள பயிர் ரகங்களில் நிபுணர் விதை இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வேளாண் துறைக்கு விதைப் பெருக்கத்திற்காக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பயிர் மேலாண்மையில் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்களில் நெல்லுக்குச் சாம்பல் சத்து மேலுரமிடல், யூரியாவில் வேப்பம் புண்ணாக்கு கலந்து இடுதல், கிருஷ்ணகிரி பகுதியில் களர் - உவர் நிலங்களைச் சீர்திருத்தம் செய்ய ஜிப்சம் மற்றும் பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்துதல், மானாவாரிப் பயிர்களுக்கு மக்கிய தென்னை நார்க்கழிவு உரத்தை இடுதல், மானாவாரிப் பயிர்கள் வறட்சி தாங்கி வளர விதைகளைக் கடினப் படுத்தும் முறைகள், ஊட்டமேற்றிய தொழு உரத்தின் பயன்கள், கலப்புப் பண்ணையின் பயன்கள், சோயா மொச்சையைத் தனிப் பயிராகவும் ஊடு பயிராகவும் சாகுபடி செய்யும் முறைகள், பல்வேறு மானாவாரிப் பயிர்களை விதைக்க ஏற்ற காலம், மரவள்ளி, தட்டைப்பயறு ஆகியவற்றின் உரத் தேவைகள் ஆகியன அடங்கும். தீவனப் பயிர்களான புல், பயறுவகைகள், மரவகைகள் ஆகிய வற்றிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியப் பயிர்களுக்குத் தேவையான அசோஸ்பைரில்லம், ரைசோபியம் ஆகியவற்றைத் தேர்வு செய்யும் ஆராய்ச்சியும் செய்யப்படுகிறது.

பயிர்ப் பாதுகாப்பில் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், முக்கியப் பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள், பருத்தி, காய்ப்புழு, தக்காளி காய்ப்புழு, தட்டைப்பயிறு மற்றும் துவரையில் தோன்றும் காய்ப்புழு ஆகியவற்றை நச்சுயிரி கொண்டு கட்டுப்படுத்துதல், ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்தி தென்னைக் கருத்தலைப் புழுக்களைக் கட்டுப்படுத்துதல், நிலக்கடலையில் பல்வேறு பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்வதன் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

பல்வேறு 'மா' ரகங்கள் இங்கு ஆய்வு செய்யப்பட்டு டி.பி.ஐ.45, டி.பி.ஐ.55 ஆகிய உயர் விளைச்சல் 'மா' வளர்ப்புகள் இந்நிலையத்திலிருந்து வெளியிடப்படவுள்ளது. பச்சை திராட்சை மற்றும் அர்க்காவதி ஆகிய இரண்டு திராட்சை ரகங்கள் இப்பகுதிக்கு மிகவும் ஏற்றவை எனத் தெரியவந்துள்ளது.

## முழு அளவு எழுத்தறிவு பெற்ற புதுவை மாநிலம்!

**புதுவை மாநிலம், முழு அளவு எழுத்தறிவு பெற்ற யூனியன் பிரதேசமாக 30-11-1991 அன்று முறைப்படி அறிவிக்கப்பட்டது. மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் இது தொடர்பான அறிவிப்பைப் புதுவையில் நடந்த பொதுக்கூட்டத்தில் வெளியிட்டார்.**

**நாட்டில் முழு அளவு எழுத்தறிவு பெற்ற இரண்டாவது மாநிலமாகப் புதுவை திகழ்கிறது. ஏற்கெனவே கேரள மாநிலம் இந்தச் சாதனையை அடைந்து முதல் இடத்தில் இருக்கிறது.**



அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்ற உயிர் உரங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் இயந்திரம்.

மண், நீர் வளப் பாதுகாப்பிற்கும், மண் ஈரம் காக்கவும் பகுதிப்பாத்தி முறை மிகவும் சிறந்தது என ஆய்வு மூலம் தீர்மானிக்கப் பட்டுள்ளது. மானாவாரியிலும், இறைவையிலும் கருப்பு பாலீதீன் தாள் கொண்டு போர்வை அமைத்தல் மண் ஈரம் காக்கவும், களைகளைக் கட்டுப்படுத்தவும் விளைச்சளைப் பெருக்கவும் உதவுகிறது. தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களை இரண்டு கட்டமாகச் செயலாக்கியதன் மூலம் வறட்சி மற்றும் பூச்சி நோய்கட்கு எதிர்ப்புச் சக்தி கொண்ட உயர் விளைச்சல் ரகங்களை வெளியிடுதல் மானாவாரிக்கான ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டங்களைக் கண்டறிதல், மாற்றுப் பயிர்கள் மற்றும் ஊடு பயிர்கள் ஆராய்ச்சி, ஒருங்கிணைந்த உர நிர்வாகம், உயர் விளைச்சல் காண வழிமுறைகள் இப்பகுதியில் மானாவாரிப் பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை மண்வரிசைக்கேற்றபடி அளவிடுதல், மண் இனக்கலவை ஆராய்ச்சி, மர, புல் மற்றும் தீவனப்பயிர்கள் ஆராய்ச்சி, தானியப் பயிர்களில் பயிர் விளை எண் குறியீடுகளை நிர்ணயித்தல், குறிப்பிட்ட திறன் வாய்ந்த நன்கு பயனளிக்கக்கூடிய ரைசோபியம், அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா, மைக்கோரைசர் போன்ற உயிர் உரங்களைத் தேர்வு செய்தல் ஆகியவை தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த உயிரினங்களைப் பயன்படுத்துதல் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. பூச்சி மற்றும் நோய்கள் தோன்றுவது குறித்து முன்கூட்டியே அறிவிக்க வழிவகைகள் காணுதல் பற்றிய ஆராய்ச்சிக்கும் முன்னுரிமை அளிக்கப் படுகிறது.

திராட்சை, குண்டு மல்லிகை மரவள்ளி ஆகிய பயிர்களுக்குத் தேவையான அனைத்துத் தொழில் நுட்பங்களையும் காணும் ஆராய்ச்சி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இறவைக் கேற்ற தக்காளி ரகத்தைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி தொடர்கிறது. திராட்சை, பீன்ஸ், முட்டைக்கோசு, முசுக்கொட்டை ஆகிய பயிர்களில் விவசாயிகளின் நிலங்களிலேயே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

இம்மண்டலத்தில் பயன்படுத்தப் பட்டு வரும் விவசாயக் கருவிகளைப் பற்றி ஒரு அளவீடு மேற்கொள்ளப் பட்டு வருகிறது. புதுவகையான கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கும், வேலைப்பளுவைக் குறைப்பதற்கும் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

**இந்நிலையத்தில் செயல்பட்டு வரும் மற்ற பணிகள்**

★ அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்ற உயிர் உரங்களை அதிக அளவில் தயாரித்து விநியோகித்தல்.

★ மண், நீர் மற்றும் செடி மாதிரிகளை இந்நிலையத்திலுள்ள மண்டல மண் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்து தக்க பரிந்துரைகள் அளித்தல்.

★ வேளாண்துறை, தோட்டக்கலைத் துறை, சார்பு நிலையத்துறை ஆகியோருடன் இணைந்து செயலாற்றுதல்.

★ ஒவ்வொரு மாதமும் 7-ம் தேதியன்று காளான் வளர்ப்பு பற்றி பயிற்சி அளித்தல், மேலும் காளான் வித்து தயாரித்து விநியோகித்தல்.

★ வேளாண் பெருமக்களுக்கு ஆராய்ச்சி நிலையத்திலும் வெளியிடங்களிலும் பயிற்சி அளித்தல்.

★ பல்வேறு வேளாண் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தல்.

★ தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதிக் திட்டத்தில் பங்கேற்று பணியாற்றுதல்.

★ மரப்பயிர்களுக்கு ரைசோபியம் நுண்ணுயிர்க்கலத்தலின் நன்மையைக் காட்ட தனித் திட்டம் மூலம் செயலாற்றுதல்.

★ விவசாயிகளின் நிலங்களில் வயல்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவைகளாகும்.

**மு. கிருஷ்ணன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்

# விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி?

'செய்வன திருந்தச் செய்' என்ற நல்ல அறிவுரையைக் கருத்தில் கொண்டு, நம் பணிகளைச் செவ்வனே செய்தால், 'விபத்து' என்ற சொல்லுக்கே இடமில்லாமற்போகும் 'விபத்து' என்றதுமே நமது உடலும் உள்ளமும் உறைந்து போகின்றன. காரணம், அது விளைவிக்கும் அச்சமும் அழிவும்தான், உடலுக்கும், உடைமைக்கும், உயிருக்கும், ஊறு விளைவிக்கும் 'விபத்து', நமது வாழ்க்கையில் வேண்டாத விருந்தாளி. எனவேதான் இந்த விபத்துக்களைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தும் உருவாகியது.

**விபத்துக்கள் நேர்வது எப்படி?**

விபத்துக்கள் நிகழ்வதற்கான காரணங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன-

1. மனிதனின் கவனக்குறைவும், அலட்சியப் போக்கும்.
2. இயந்திர மற்றும் மின்சாரக் கோளாறுகள்.
3. இயற்கையின் சீற்றத்தினால் நிகழும் விபத்துக்கள்.

**மனிதனின் கவனக் குறைவும் அலட்சியப் போக்கும்**

இவ்வகை விபத்துக்களுக்கு சாலை விபத்துக்களையும் இரயில் விபத்துக்களையும் உதாரணமாகச் சொல்லலாம். வாகன ஓட்டுநர்கள், சாலை விதிகளை அறியாமலும், மீதியாமலும், அலட்சியப் படுத்துவதாலும் விபத்துக்குக் காரணமாகின்றனர். முன்னே செல்லும் ஊர்தியை முந்திச் செல்ல நினைக்கும் மதியற்ற செயலும் ஒரு காரணம். வாகனங்கள் சரிவர இயங்குகின்றனவா என்பதை அவ்வப்போது கவனிக்காமல் இருப்பதும் ஒரு காரணம். சாலை விபத்துக்களுக்குப் பாதசாரிகளும் காரணமாகின்றனர். எப்படியெனில் அவர்கள் நடைபாதையையும், சுரங்கப் பாதைகளையும் உபயோகப்புடுத்துவதில்லை. சாலையே தனக்குத்தான் சொந்தம் என்ற மிதப்பில் சாலையைக் கடக்கும்போது, வெகு விரைவாக, அல்லது வெகு நிதானமாக, எதிரில் வரும் வாகனங்களையும் கவனிக்காமல், சாலை விதிகளான 'கடக்கும் இடம்', மற்றும் 'சிக்னல்'களையும் கவனிக்காமல் சாலையைக் கடப்பதனால் அநேக விபத்துக்கள் நிகழ்கின்றன.

'இரயில் விபத்துக்கள்' நிகழ்வதற்கு ஓட்டுநர்கள், மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் கவனக்குறைவும், அலட்சியமும் மட்டுமின்றி, இயந்திரக் கோளாறுகளும் காரணமாகின்றன.

அடுத்ததாக கட்டடக் கோளாறுகளினால் ஏற்படும் விபத்துக்களுக்கும் கவனக்குறைவு காரணமாகிறது. கட்டட வரைபட வல்லுநர்கள். திட்டம் தீட்டுபவர்கள், பொறியாளர்கள், கட்டடத் தொழிலாளிகள் ஆகிய பலரது சிறிய கவனக் குறைவால் பெரிய விபத்தெல்லாம் நிகழ்கிறது. தரக் குறைவான பொருட்களை உபயோகப்படுத்துவதாலும், கலப்படத்தாலும் கூட கட்டட விபத்துக்கள் நிகழ்கின்றன.

அடுத்தபடியாக, இயந்திரப் பணியாளர்களின் கவனக்குறைவும், அலட்சியப், பாங்கும் விபத்துக்கள் நேரக் காரணமாகின்றன. இயந்திரச் சாதனங்கள் பழுதடையாமல் இருக்கின்றனவா என்று கவனிப்பதில்லை இயந்திரங்களை இயக்கும் வழிமுறைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதில்லை. இயந்திரச் சாதனங்களின் மேல் எழுதப்பட்டிருக்கும் 'எச்சரிக்கை' வாசகங்களைக் கவனிப்பதில்லை. எனவேதான் இயந்திரக் கோளாறுகளுக்கு மனிதன் காரணமாகிறான்.

**இயந்திர, மற்றும் மின்சாரக் கோளாறுகள்**

இவ்வகைக் கோளாறுகள் மனிதனின் சக்திக்கும் திறமைக்கும் அப்பாற்பட்டவை. உதாரணமாக, விமான விபத்துக்களைச் சொல்லலாம். 'கால நிலை' காரணமாகவும், இயந்திரக் கோளாறுகளாலும், விமான ஓட்டியின் கவனக்குறைவு அல்லது போதிய பயிற்சியின்மையும் விமான விபத்துக்களுக்குக் காரணமாகின்றன. இதற்கு உதாரணமாக, சில மாதங்களுக்கு முன்னால் பெங்களூரில் நிகழ்ந்த 'ஏ-320' ரக விமான விபத்தைச் சொல்லலாம். இந்த விபத்துக்குக் காரணம், 'கணினி' எனப்படும் 'கம்யூட்டர்' கோளாறும், விமான ஓட்டிக்குப் போதிய பயிற்சி தராமையுமே காரணங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளன.

அடுத்ததாக, 'போபால் விஷ வாயுக் கசிவு' என்னும் விபத்து, இது உலகறிந்த ஒன்று. அந்த ஆலை சரிவரப் பராமரிக்கப்படாததால் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணம் என்று சொல்லப்படுகிறது. இதனால் இவ்வாலையை நிர்வகிக்கும் அமெரிக்கநிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என முடிவாகியுள்ளது. இந்த விஷவாயுக் கசிவினால் எண்ணற்ற மக்கள் உயிர் துறந்தனர். பலர் நோய்வாய்ப்பட்டனர். சிலர் பயத்தினால் ஊரை விட்டே வெளியேறிவிட்டனர்.

அடுத்தபடியாக அணுசக்தியால் ஏற்படும் விபத்துக்கள். ஆக்க சக்தியான அணுசக்தி சில நேரங்களில் அழிவுச் சக்தியாகவும் மாறி விடுகிறது. இதற்கு உதாரணம் - ரஷ்ய நாட்டில் செர்னோஃபில் என்ற இடத்தில் அணுசக்தி உற்பத்தி ஆலையில் நடந்த மிகப்பெரிய விபத்தாகும். இந்த விபத்திற்கு இயந்திரக் கோளாறுகள் காரணமாய் இருக்கின்றன. இதற்குப் பிறகு 'அணுசக்தி உற்பத்தி' அவசியமா? என்ற கேள்விக் குறி தோன்றி ..ட்டது ..க்க[illegible] மனத்தில் சமைப்பதற்கு ..தவுட ..ருப்பு, தீயாக

**விபத்துக்கள் எப்படி ஏற்படுகின்றன? அவற்றைத் தவிர்ப்பது எப்படி? என்பன போன்ற யோசனைகளைக் கூறுகிறது இக்கட்டுரை. சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தில் பொறியியல் துறையில் முதுநிலை உதவியாளராகப் பணியாற்றும் திருமதி எஸ்.வி. பட்டு இக்கட்டுரையை எழுதியுள்ளார். இது முதற் பரிசு பெற்ற கட்டுரையாகும்.**

## அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் துணி வகைகள்!

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் முதலிடம் வகிப்பது துணி வகைகள் ஆகும். நமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் சுமார் 25 சதவிகிதம் ஜவுளி ரகத்தைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் ஜவுளி ஏற்றுமதி உயர்ந்துக் கொண்டே போவது மகிழ்ச்சிக்குரியதாகும். 1984-85-இல் ரூ.1,888 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஜவுளி, 1989-'90 ஆண்டுகளில் ரூ.6,501 கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஏற்றுமதி 1990-'91-இல் குறிப்பிடப்பட்ட இலக்கான ரூ.7,330 கோடியையும் மிஞ்சி ரூ.8,409.68 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தருவதிலும் பெரும் பங்கு வகிப்பது ஜவுளித்துறையே ஆகும். மொத்த அந்நியச் செலாவணியில் ஏறக்குறைய 75 சதவிகிதம் ஜவுளி ஏற்றுமதியின் மூலமே கிடைக்கிறது.

—பத்திரிகை தகவல் அலுவலகம்.

---

மாறினால் சோற்றுக்கே வழியில்லாமல் செய்துவிடுவது போல், பகைவரிடமிருந்து காத்துக்கொள்ளவும், ஆக்க சக்திக்கும் உதவும் அணு சக்தி இயந்திரக் கோளாறுகளினாலும், கவனக்குறைவாலும் சில நேரங்களில் அழிவுச் சக்தியாகவும் மாறிவிடுகிறது.

**இயற்கையின் சீற்றங்கள்**

இயற்கைக் கட்டுப்பாட்டை மீறினால் மனிதசக்தியால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. புயல், மழை, வெள்ளம், மின்னல், இடி, நில நடுக்கம், பூகம்பம், எரிமலை ஆகியவை இயற்கை ஏற்படுத்தும் விபத்துக்கள். இவ்விபத்துக்களால் ஏற்படும் அழிவு மிகப் பெரியது. விதியால் ஏற்படும் இவ்விபத்துக்களை மதியால் ஓரளவு தடுக்கலாம். இப்போது வெகுவாக முன்னேறி வரும் வானிலை ஆராய்ச்சியின் உதவிகொண்டு, இயற்கையின் விபத்துக்களை முன்பே அறிய முடிவதால், தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ள முடிகிறது.

இவை தவிர மின்சாதனங்களாலும், மின்சாரம் தடைபடுவதாலும் கூட விபத்துக்கள் நேர்கின்றன.

**விபத்தைத் தடுப்பது எப்படி?**

விபத்துக்கான காரணங்களைப் பற்றி அறிந்த நாம் இனி விபத்துக்கள் நேராவண்ணம் தவிர்க்கும் வழிமுறைகளைப் பற்றி ஆராய்வோம். 'வருமுன் காப்பதே மேல்' என்ற வாசகத்தின்படி விபத்துக்களைத் தடுப்பதெப்படி? என்று சிந்திக்கும்போது - விபத்துக் கட்டளைகள் நினைவுக்கு வருகின்றன. விபத்தைத் தடுக்க-

**பணியாளர்களுக்கான (வி)பத்துக் கட்டளைகள்:**

1. கவனக்குறைவோடு காரியங்கள் செய்ய வேண்டாம்.
2. எச்சரிக்கை வாசகங்களை மறக்க வேண்டாம்.
3. பாதுகாப்புச் சாதனங்களை - கையுறை, தலைக் கவசம் போன்றவற்றை அணியாதிருக்க வேண்டாம்.
4. சாலைப் பாதுகாப்பு விதிகளை மீற வேண்டாம்.
5. தீப்பற்றும் பொருட்களை மின்சாரத்திற்கருகில் வைக்கவேண்டாம்.
6. குடிபோதையில் வேலைக்குச் செல்ல வேண்டாம்.
7. புகை பிடித்துக் கொண்டே பணிகளைச் செய்யவேண்டாம்.
8. தீ விபத்து ஏற்பட்டால் தன்னையும் பிறரையும் காத்துக் கொள்ளும் முறைகளை அறியாதிருக்க வேண்டாம்.
9. பாதுகாப்பு விதிகளைப் பற்றித் தெரியாதிருக்க வேண்டாம்.
10. பழுதுபட்ட இயந்திரங்களை இயக்கவேண்டாம்.

விபத்தைத் தவிர்ப்பதில் பணியாளர்களுக்கு மட்டுமல்ல, நிர்வாகத்தினருக்கும் பங்கு உண்டு. அதற்கான (வி)பத்துக் கட்டளைகள் பின்வருமாறு:

1. தொழிலுக்குத் தகுந்தாற்போல் பாதுகாப்புச் சாதனங்களை அளிக்க வேண்டும்.
2. எச்சரிக்கை வாசகங்களை ஆங்காங்கே எழுதவேண்டும்.
3. பாதுகாப்பு விதிகளை அனைவரும் அறியச் செய்யவேண்டும்.
4. பழுதுபட்ட இயந்திரங்களைச் சீராக்கவோ, மாற்றவோ வேண்டும்.
5. தீவிபத்து ஏற்பட்டால் தப்பிக்க வழிவகைகள் செய்ய வேண்டும்.
6. தகுதியையும், திறமையையும் சோதித்து, போதிய பயிற்சி பெற்றவரையே பணிகளில் அமர்த்த வேண்டும்.
7. தேவையற்ற கழிவுப் பொருட்கள் சேராமல் வெளியேற்ற வேண்டும்.
8. சுத்தமான காற்றும், வெளிச்சமும் சுலபமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.
9. ஆலை அமைக்கும் விதிகளை அறிந்திருக்க வேண்டும்; அதை அனுசரிக்க வேண்டும்.
10. மேற்பார்வை, கண்காணிப்பை மேம்படுத்த வேண்டும்.

மற்ற எல்லாத் துறையையும்விட, துறைமுகங்களில் விபத்துக்கள் நிகழ நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. துறைமுகங்களில் பல எண்ணெய், தானியக் கிடங்குகளும், தீப்பற்றக் கூடிய இரசாயனப் பொருட்களும் உள்ளன. இரயில் போக்குவரத்தும் உள்ளது. கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கடல் சீற்றத்திற்கும் ஆளாகிறோம். எனவே,

'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு'

என்ற வள்ளுவர் வாக்குப்படி துறைமுகத்தில் வேலைபார்க்கும் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து விபத்துக்கள் ஏற்படாதவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(நன்றி: சென்னைத் துறைமுகம்)





# அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா



இந்தியாவிலேயே மிருகக் காட்சி சாலையை முதன்முதலாக 1855-ஆம் ஆண்டில் சென்னையில் அமைத்தலின் மூலம், தமிழகம் பெருமையடைகிறது.

வண்டலூர் உயிரியல் பூங்கா 1985-இல் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த உயிரியல் பூங்காவில் சிறிய பெரிய யானைக் கூட்டங்களும் உள்ளன. புலி, கடமான், பன்னிறப் பறவைகள் முதலானவையும் பார்க்கப் பரவச மூட்டும்.

இந்த விந்தைமிகு விலங்குகள் உலகம் நம் சிந்தைக்கு விருந்தூட்டுவன. வாருங்கள்! அந்த உலகிற்குப் போவோம்!

## இரவு விலங்குகளின் உலகம்

அற்புதமான இரவு விலங்குகளின் செயல்களை நம்மில் பலர் பார்த்திருக்க வாய்ப்பில்லை. இரவு விலங்குகள் இரவில் மட்டுமே காணப்படுவதால் சில சாதாரண இரவு விலங்குகளைப் பற்றிக் கூட மனிதனால் அதிகம் அறிய முடியவில்லை. இரவு விலங்குகளில் 951 வகையான வெளவால்களும் 123 வகையான ஆந்தைகளும் உள்ளன. இவைகளின் வாழ்க்கை முறைகளும் பழக்க வழக்கங்களும் பகலில் காணப்படும் விலங்குகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இவை சிறப்பான முறையில் இரவு வாழ்க்கையை நடத்திடப் புதுமையான தகவமைப்புகளைப் பெற்றுள்ளன.

ஆந்தைகளின் பெரிய கண்களும், வெளவால்களின் எதிரொலியைப் பயன்படுத்திப் பொருள்களை அறிவதையும் உதாரணங்களாகச் சொல்லலாம். இரவு விலங்குகள் பகலில் தூங்குவதனால் சாதாரணமாக அவைகளின் செயல்களைக் காண வாய்ப்பில்லாமல் போகிறது. மேலும் பார்வையாளர்கள் இரவு நேரத்தில் அவைகளைக் காண்பதென்பதும் அரிது. எனவே இரவு, பகல் சூழ்நிலைகளை மாற்றி அவைகளுக்கேற்றவாறு இரவு விலங்குகளைச் செயல்பட வைக்கும் ஓர் புதிய உத்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



உலக அரங்கில் ஒரு சில உயிரியல் பூங்காக்களில் மட்டுமே இரவு விலங்குகள் உலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவும் ஒன்றாகும். இவ்விலங்குகள், இரவு விலங்குக் கூடத்தினுள், பகலில் குறைந்த ஊதா மற்றும் சிவப்பு ஒளி வெளிச்சத்தில் இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது. இந்த இரவு விலங்குகளுக்கு நிறப்பார்வை இல்லாததனால் இவை இருளிலேயே இருப்பதுபோல் எண்ணிச் செயல்படுவதைப் பார்வையாளர்கள் கண்டு களிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் இந்த இரவு விலங்குக் கூடங்கள் ஒளி வெள்ளங்



களினால் பகல் போன்று தோற்று விக்கப்படுவதால் விலங்குகள் ஓய்வு நிலைக்குச் சென்று விடுகின்றன.

இங்கு இரவு விலங்குகளின் இருப்பிடத்தின் உள்ளே சென்று அவைகளைக் காணும்படியாக அமைக்கப்பட்டுள்ள 'உட்சென்று காணும் இரவு விலங்குக் கூட' அமைப்பு ஓர் தனிச் சிறப்பு அம்ச மாகும்.

## சிங்கம் உலவிடப் பூங்கா

நவீன உயிரியல் பூங்காக்களில், விலங்குகள் அவை இயற்கையில் வாழும் சூழ்நிலையை ஒத்த இடங் களில் வைக்கப்பட்டு வருகின்றன. விலங்குகளைப் பார்வைக்காக வைப் பது, முதலில் கூண்டிலேயும், பிறகு பெரிய தீவுகளிலேயும் தற்பொழுது உலவிடங்களிலும் வைக்கக்கூடிய அளவுக்குப் படிப்படியான வளர்ச்சி யினை அடைந்துள்ளது. இவ்வாறு விலங்குகளை உலவிடங்களில் வைப் பதன் மூலம், அவை மகிழ்ச்சியோடு இருப்பது மட்டுமல்லாமல், காணும் பார்வையாளர்களுக்கும் ஒரு பரவச உணர்வை ஏற்படுத்துகின்றன. மேலும் விலங்குகளைச் சிறிய கூண் டில் வைப்பதனால் அவைகளுக்குச் சில அசாதாரண பழக்கங்கள் ஏற் படுவதுடன், அவைகளுடைய இயற் கைக் குணங்கள் மறைந்து இனவிருத் தியும் தடைப்படுகிறது. எனவேதான், உலவிடங்கள் ஐரோப்பிய நாடு களில் முதலில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவிலும் அயல் நாடுகளி லும் உள்ள நவீன உயிரியல் பூங் காக்களில் உலவிடங்கள் அமைப்பது, உயிரினப் பூங்காவின் ஓர் அங்க மாகக் கருதப்படுகிறது. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அமைக்க எழுதப்பட்ட திட்டத்தில் சிங்கம், காட்டெருமை, மான்கள் ஆகிய வைக்கும் உலவிடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உலவிடங்கள் நிலப்பரப் பில் சுமார் 70 எக்டேர் மலைச் சரி வைக் கொண்டது. இதில் சிங்கங் களுக்கான உலவிடம் 30 எக்டேர் பரப்பில் அமைந்துள்ளது. இதனை ஏற்படுத்துவதற்கான செலவு ரூ.23.58 இலட்சமாகும்.

மூன்றுவிதமான வனவிலங்கு களுக்கு மலைச்சரிவைக் கொண்ட பெரிய நிலப்பரப்பில் உலவிடங்கள் அமைந்திருப்பது இந்தியாவிலேயே ஒரு புதிய சிறப்பு அம்சமாகும்.

## ஊர்வன இல்லம்

பாம்புகள், முதலைகள், பல்லிகள், ஆமைகள் ஆகிய ஊர்ந்து செல்லும் விலங்கினங்கள் 'ஊர்வன' வகுப் பாகும். இவற்றில் பாம்புகள், முதலைகளைப் பற்றி மக்களுக்கு ஓரளவு தெரிந்திருந்தாலும், பல வகையான பல்லிகள், ஆமைகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்தப் பலவகையான விலங்குகள் ஒரே வகுப்பில் அமைக்கப்பட்டிருந் தாலும் இவற்றின் வெளித் தோற் றங்கள் முழுமையாக வேறுபட்டிருப் பதைப் பார்க்கிறோம். காலில்லாத பாம்புகள், கடின மேலுறை கொண்ட ஆமைகள், ஆகியவை தோற்றத்தில் ஒன்றிற்கு ஒன்று சம்பந்தம் இல் லாமை போல் தோன்றுகின்றன. இவ்வகையான வேறுபட்ட ஊர்வன விலங்கினங்களை இங்கு அவற்றின் வாழ்விடங்களை ஒத்த இல்லங்கள் அமைத்துப் பாதுகாப்பாகப் பார் வையாளர்களுக்கு வைக்கப்பட்டுள் ளன. இந்த அமைப்பு பார்வை யாளர்களுக்கு ஊர்வன விலங்கு களின் பரிணாம வளர்ச்சி பற்றியும், விஷமுள்ள, விஷமற்ற பாம்புகள் பற்றியும் கற்றுக் கொள்ளும் வித மாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பாம்புகளைப் பற்றி விரி வாக அறிய சிறிய செய்முறைப் பயிற்சிக்கும் வழிவகை செய்யப் பட்டுள்ளது. பாம்பு போல் வளைந்து செல்லும் இந்த இல்லத்தினுள் நடந்து செல்வதும், இதன் எதிரே அமைக் கப்பட்டிருக்கும் நில வடிவமைப்பும் பார்வையாளர்களுக்குப் பரவச மூட்டும். இந்த ஊர்வன இல்லத்தை அமைப்பதற்கான மொத்த செலவு ரூ.7.3 இலட்சம் ஆகும்.

## உட்சென்று காணும் பறவைக் கூடம்

உட்சென்று காணும் பறவைக் கூடம் ஒரு நவீன அமைப்புக் கொண்ட பறவைகள் காப்பகம் ஆகும். பழங்காலத்தில் பறவைகளைச் சிறு கூண்டுகளில் வைத்துத் தான் வளர்த்து பார்வைக்கு வைத்தார்கள் சில உயிரியல் பூங்காக்களில் பெரிய பறவைகளின் இறகுகள் பறக்காதவாறு நறுக்கப்பட்டு பெரிய திறந்தவெளிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதை அறிகிறோம்.





பெரும்பாலான பறவைகள் அவற்றின் இறகுகள் வெட்டப்படுவதாலும், சிறிய கூண்டுகளில் வைக்கப்படுவதாலும் இனவிருத்தி செய்வதில்லை. இந்தக் காரணத்தைக் கருத்தில் கொண்டே, சில நவீன உயிரியல் பூங்காக்கள், பெரிய பறவைக் கூடாரங்களைப் பறவைகள் உள்ளே உல்லாசமாகப் பறந்து வரும் விதமாக அமைத்து வருகின்றன. இவ்வாறாக அமைக்கப்படும் பெரிய உட்சென்று காணும் பறவைக் கூடங்களினால் இரண்டு பயன்கள் உண்டு. ஒன்று இதனுள் பறவைகள் உல்லாசமாகப் பறப்பதன் மூலமும் தோகை விரித்து ஆடுவதன் மூலமும் நன்கு இனவிருத்தி செய்கின்றன. இரண்டாவதாக, பார்வையாளர்கள் கூடாரத்தினுள் சென்று பறவைகளின் குணத்தையும், செயல்பாடுகளையும் தெளிவாகக் கண்டு அறிய ஏதுவாகிறது.



இந்தப் பறவைக் கூடம் கோடிக்கரை சரணாலய நீர்ப் பறவைகளுக்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டு, சில முக்கிய கோடிக்கரைச் சரணாலயப் பறவைகளான பூநாரை, கடல் காகம், சிறவி வகைகள், கொக்கு நாரை போன்றவைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கூடத்தினுள் புதர்கள் கொண்ட ஒரு சிறிய திடலும் (30 ச.மீ.) ஒரு பரந்த நீர்ப் பரப்புடன் (110 ச.மீ.) அமைக்கப்பட்டுள்ளன. கோடிக்கரைச் சரணாலயத்தில் இப்பறவைகளை அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலான காலங்களில் மட்டுமே காணலாம். ஆகவே அவற்றை ஆண்டு முழுவதும் பார்வையாளர்கள் பார்த்து மகிழ்வதற்கு வசதியாக, இப்பெரிய கூடத்தினுள் வளர்க்கப்பட்டு வரப்படுகிறது.

ஆகவே, இது கோடிக்கரைச் சரணாலயம் பறவைக்கூடம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனுள்ளே பறவையாளர்கள் நுழைந்து சென்று பறவைகளைப் பக்கத்தே பார்த்து மகிழலாம். இங்கே பூநாரைகள் ஆழமில்லா நீரில் தலையை நுழைத்து சேற்றைக் கிளறிப் பூச்சிகளை உண்டு மகிழும் விதத்தையும், பறந்த நீர்ப் பரப்பில் கடல்காகங்கள் நீந்திச் சென்று மீன் பிடிப்பதையும் கண்டு மகிழலாம். சிறிய நிலப்பரப்பில் உள்ள புதர்களில் சிறவிகள் தங்கி கூடு கட்டவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பரப்பில் உள்ள புதர்களில் சிறவிகள் தங்கிக் கூடு கட்டவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பரப்பின் தளம் பிளாட்டிங் விரிப்பில் பரப்பப்பட்டு அதன் மீது செங்கல் பரப்பப்பட்டு, எளிதான முறையில் நீர் பூமிக்குள் செல்லாதவாறு சேமிக்கப்பட்டுள்ளது. கூடத்தின் கூரையில் பரப்பப்பட்டுள்ள நீலநிற வலை வானத்து நிறத்துடன் ஒன்றி விடுவதால் உள்ளே உள்ள பறவைகள் மேற்கூரையை வானமென உணர்கின்றன.

இந்தக் கூடமும் இதனைச் சுற்றியுள்ள அமைப்பும் சுமார் ரூ.7.55 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, ஆடவர் மகளிர் குழந்தைகள் கண்டு மகிழ்ந்திட அழகிய இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருப்பதுதான், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

சென்னைக்கு அருகில் அமைந்துள்ள இந்த இயற்கைப் பூங்கா நம்மவரை மட்டுமல்ல, வெளிநாட்டவரையும் வெகுவாக கவர்ந்து வருகிறது என்றால், அது மிகையாகாது!





# அன்றும் இன்றும்...



# பல் மருத்துவம்

**பல் மருத்துவம் என்பது அந்தக் காலத்தில் எப்படியெல்லாம் இருந்தது - இந்தக் காலத்தில் எவ்வாறெல்லாம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையெல்லாம் இந்தக் கட்டுரை விளக்குகிறது.**

'தென்பாண்டி நாட்டிலே தேடியெடுத்த முத்துக்களோ' என்று பற்களின் அழகைப் புகழ்ந்து கவி பாடினர் புலவர்கள். ஆலும், வேலும் பல்லுக்குறுதி என்றார் ஔவை மூதாட்டி. நம் முன்னோர் பற்களின் வலிவையும் பொலிவையும் நன்குணர்ந்து, அவற்றைப் போற்றிப் பாதுகாத்து, வாழ்ந்து வந்தனர். பற்களைப் பராமரிப்பது குறித்தும், பற்களில் ஏற்படக் கூடிய நோய்களைப் பற்றியும், அந்நோய் தீர்க்கும் மருந்துகளையும் சித்தர் பாடல்கள் பல எடுத்துரைக்கின்றன:

'கல்லு மணலும் கரியுடனே
பாளைக்கும்
வல்லதொரு வைக்கோலும்
வைத்துநிதம் -பல்லதனைத்
தேய்த்திடு வாராயின்
சேராளே சீதேவி
வாய்த்திடுவாள் மூதேவி வந்து.'

'வேலுக்குப் பல்லிறுகும்
வேம்புக்குப் பல்துலங்கும்
பூலுக்குப் போகம்
பொழியுங்காண் - ஆலுக்குத்
தண்டா மரையாளுஞ்
சாருவளே நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்'

- என்ற பாடல்கள் பல் பராமரிப்பைப் பாங்குற விளக்குகின்றன. காலப்போக்கில், மக்களின் கவனக் குறைவாலும் உணவுப் பழக்கங்களில் ஏற்பட்ட மாறுதல்களாலும், பற்களைச் சரிவர சுத்தப்படுத்தாததாலும், பல் நோய்கள் மிகையாகப் பரவின. அவற்றைக் கட்டுப்படுத்தவும், குணமாக்கவும், கிராமங்களில் அந்தக் காலத்தில் முடிதிருத்துபவரே பல் மருத்துவராகவும் செயல்பட்டிருக்கிறார். இக்காலத்தை, பல் மருத்துவத்தின் தளர்ந்த காலம் எனலாம். விஞ்ஞான வளர்ச்சியின் பயனாகப் பல் மருத்துவம் நன்கு முன்னேறி, பட்டப்படிப்பும் பட்டமேற்படிப்பும் தனியே உருவாகி, உபகரணங்களிலும் உபயோகிக்கும் பொருள்களிலும் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டு, இன்று பொது மக்களுக்குச் சீரிய சேவை செய்து வருகின்றது.

டாக்டர் எ. பரமேஸ்வரன், எம்.டி.எஸ்.,
டாக்டர் கே.எஸ். கார்த்திகேயன், எம்.டி.எஸ்.,

### பற்களின் தேவையும் அவற்றின் பாதுகாப்பும்

முகத்தின் அத்தனை அங்கங்களுக்கும் மிகவும் எடுப்பாக அமைந்து, மிடுக்காக இருந்தாலும், பற்கள் இல்லாவிட்டால் அழகனைத்தும்

போய்விடும். பற்களின் பயன் பார்வைக்கு அழகு மட்டுமா? உணவினைக் கடித்து, மென்று கூழாக்கி எளிதில் ஜீரணிக்க உதவுவது பற்களல்லவா? அதுமட்டுமா? 'பல்லு போனால் சொல்லு போச்சு' என்ற முதுமொழிதான் எத்தனை உண்மை! வார்த்தைகளைத் தெளிவாக உச்சரிக்கப் பற்கள் எவ்வளவு உபயோகமாக இருக்கின்றன! 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்பதுபோல, பலருக்குப் பற்களின் பெருமை, அவற்றை இழந்த பிறகுதான் தெரிகிறது. பற்களைப் பேணிப் பாதுகாத்து வந்தால், வாழ்நாள் முழுவதும் அவை பெரும் பயன் தரும். பற்களைப் பாதுகாக்க, ஆண்டுக்கு இருமுறை பல் மருத்துவரை அணுகி, அவரது ஆலோசனைகளைப் பெற்று, அதன்படி நடந்து பயன்பெறலாம்.

**பல் மருத்துவம் - அன்றைய நிலைமை**

பல் வைத்தியர் என்ற சொல் காதில் விழுந்ததுமே, பலருக்கு உடனடியாக மனதில் தோன்றும் மற்றொரு சொல், வலி என்பதாகும். அந்த அளவிற்கு, முந்தைய நாட்களில் பல் மருத்துவ முறைகள் குறையுடன் காணப்பட்டன. தவிரவும், முன்பு பல் துலக்க உபயோகப்படுத்தப்பட்ட கரி, சாம்பல், செங்கல் போன்ற கரகரப்பான பொடிகளால் பல்லின் மேற்பாகம் தேய்ந்து உருமாறி உடைந்து பயனற்றுப் போய் பல்வலி அதிகமாகி பற்களை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தக்க தருணத்தில் சரியான முறையில் பல்லைப் பேணிப் பாதுகாக்காமல் மக்கள் விட்டுவிட்டதால் பல் மருத்துவர்களும் வேறுவழியின்றிப் பற்களை அகற்றி வந்தனர்; இதனால் பல் மருத்துவம் என்றாலே பல்லைப் பிடுங்குதல் என்ற நினைப்பே அப்போதெல்லாம் மேலோங்கி இருந்தது.

குற்றவாளிகளின் பற்கள் பிடுங்கப்பட்டு, ஒரு தண்டனையாகவே நிறைவேற்றப்பட்டு வந்த காலமும் உண்டு! பற்களின் துவாரங்களைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் குறைந்த வேகங்களில் சுழன்றதாலும், உராய்வினால் சூடேறியதாலும், நோயாளிகளுக்கு அதிகமாகப் பற்கூச்சத்தையும் சிரமத்தையும் அளித்து வந்தன. மருத்துவரின் வசதிக்காக உபயோகித்த விளக்குகளும், பிணியாளர்களின் கண்களுக்கு அதீத பிரகாசத்தையும் வெப்பத்தையும் அளித்துக் களைப்புறச் செய்தன. முன்னாளில், நோயாளிகள் அமரும் நாற்காலிகளும் அவர்களது உடலுக்குச் சீரான சௌகரியம் அளிக்காமல் இருந்தன. பற்களுக்குள் அடைக்கும் பொருட்களும் உயர்ந்த தரமுள்ளவையாக இல்லாமலும், பற்களின் உட்புறத் திசுக்களுக்கு ஏற்புடையதாகவும் இல்லை. பல் மருத்துவரே பல் மருத்துவம் சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் உதவியாளரின்றிச் செய்து வந்ததாலும், நின்றபடியே மருத்துவர் சிகிச்சை செய்ததாலும், பழைய உத்திகளையும் கொள்கைகளையுமே பயன்படுத்தி வந்ததாலும்


டாக்டர் எ. பரமேஸ்வரன்

எளிதில் அயர்வுற்றனர். இந்த நிலைமைகள் இன்று மாறிவிட்டன.

**பல் மருத்துவம் - இன்றைய நிலைமை**

பல் மருத்துவத்தின் எல்லாத் துறைகளிலும் இப்போது வியக்கத் தகுந்த முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. மரத்துப்போக உதவும் சிறந்த நவீன மருந்துகள் உள்ளதால், வலியே சிறிதும் இல்லாமல் பற்களில் சிகிச்சை செய்ய-அல்லது வீணான பற்களை எளிதில் பிடுங்கி விட முடிகிறது. சில பல் மருத்துவர்கள் ஹிப்னாடிச முறையையும், அக்குபஞ்சர் முறையையும் பின்பற்றி வலியற்ற வைத்தியம் புரிகிறார்கள். இப்போதைய நவீன முறைகளின் மூலமாக எவ்வளவு தூரம் பல்லைக் காப்பாற்ற இயலுமோ அவ்வளவு முயற்சிகளையும் செய்து பற்களைப் பிடுங்குவதைத் தவிர்க்கிறார்கள்.

பல் பரிசோதனைக்குப் பயன்படும் கருவிகளில் மின்னணுக் கருவிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. புதுமையான கண்டுபிடிப்புகளான சோதனைக் கருவிகள் சில பல் மருத்துவருக்குப் பெரிதும் உதவுகின்றன. எக்ஸ் கதிர்களை உபயோகித்து எக்ஸ்ரே படங்கள் எடுப்பதிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரே படத்தில் வாயிலுள்ள அனைத்துப் பற்களின் பிம்பங்களும் படியும் வண்ணம் எடுக்கப்படும் 'பான் எக்ஸ்ரே' என்கிற புதிய முறை மிகவும் வசதியானதாகும்.

நடமாட இயலாத நோயாளிகளுக்காக, இப்போது, நகர்த்திச் செல்லக்கூடிய எக்ஸ்ரே கருவிகள் கிடைக்கின்றன. இவற்றை நோயாளிகளின் படுக்கையருகில் கொண்டு சென்று, நோயாளிக்குச் சிறிதும்


டாக்டர் கே.எஸ். கார்த்திகேயன்

சிரமமின்றி எக்ஸ்ரே படங்களை எடுக்கலாம். நோய் குறித்துச் சரியான முடிவுக்கு வருவதற்கு இந்த எக்ஸ்ரே படங்கள் பெரிதும் உதவுகின்றன.

பல் மருத்துவரின் ஆய்வுக்கு உதவும் வகையில் கண்கள் கூசாத நிழலற்ற விளக்குகள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன. இவை போதுமான வெளிச்சத்தை அளித்த போதிலும் பிணியாளருக்குக் கண்களைக் கூசச் செய்யாதவண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பல் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் மற்றொரு விளக்கு, வெப்பமில்லா ஒளி விளக்காகும். இந்த விளக்கில், உபயோகிக்கப்படும் 'லாம்ப்' சற்று தூரத்தில் இருந்தபோதிலும், வெளிச்சத்தை மட்டும் செயற்கைக் கண்ணாடி இழைகள் மூலமோ அல்லது திரவங்கள் மூலமோ ஊடுருவிப் பிரதிபலிக்கச் செய்து நோயாளியின் வாயருகில் உபயோகிக்கிறார்கள்.

எவ்வளவு நேரம் இந்த வெளிச்சத்தில் வேலை செய்தாலும் வெப்பம் அதிகரிப்பதில்லை என்பதால், நோயாளிகளும், பல் மருத்துவர்களும் 'பைப்ரோ அப்டிக் லைட்' எனப்படும் இவ்விளக்கைப் பெரிதும் விரும்புகின்றனர்.

### ஏற்றபடி அமையும் இருக்கைகள்

பல் நோயாளிகளுக்கான இருக்கைகளிலும் நிறைய மாறுதல்கள் செய்யப்பட்டு, உடலுக்கேற்ற வடிவமைப்புள்ள பல் மருத்துவ இருக்கைகள் கிடைக்கின்றன. இவற்றில் அமர்ந்து மருத்துவம் செய்து கொள்ளும் நோயாளிகள் மிகவும் சௌகரியமாக உணருகிறார்கள். அவர்களது உடல் முழுவதையும் ஒரே சீராக இந்த இருக்கைகள் தாங்கிக் கொள்ளுவதால், நோயாளிகளுக்கு முதுகு வலியோ கழுத்து வலியோ ஏற்படுவதில்லை.

நோயாளிகளின் சௌகரியம் மருத்துவத்தில் மிக முக்கியமான விஷயம். வசதியான முறையில் அவர்கள் அமர்ந்திருப்பது, மருத்துவம் செய்கையில் ஏற்படும் பாதிச் சங்கடங்களைத் தீர்த்துவிடும். பல் மருத்துவர்களும் இப்போது நின்று கொண்டே வைத்தியம் புரியாமல், தக்க இருக்கைகளில் அமர்ந்தபடி பணிபுரிகிறார்கள். இதனால் அவர்களும் எளிதில் சோர்வுறாமல், அதிக நேரம் வேலை செய்ய முடிகிறது. பல் மருத்துவர்களுக்கும், அவர்களது பணியின் காரணமாக, சாதாரணமாக ஏற்படக்கூடிய முதுகு வலி, மூட்டுவியாதி போன்றவை, இப்படி உட்கார்ந்தபடி வேலை செய்வதால் தவிர்க்கப்படுகின்றன. இவை தவிர பல்வேறு பல் மருத்துவக் கல்லூரிகளிலும் நன்கு பயிற்சியளிக்கப்பட்டு தேர்ச்சியடைந்த உதவியாளர்களைப் பயன்படுத்துவதால், வேலைகள் சரிவரப்பிரிக்கப்பட்டு, மருத்துவரின் வேலைப் பளு குறைகிறது. குறைந்த நேரத்தில் அதிக நோயாளிகளைக் கவனிக்கவும் முடிகிறது.



பற்களின் துவாரங்களைச் சுத்தப்படுத்தி வடிவமைக்க உருவாக்கப்பட்டுள்ள சுழற் கருவிகளிலும் மிக அதிக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தற்சமயம் உபயோகத்திலுள்ள அதிவேக ஆற்றல் சுழல் இயந்திரங்களைப் பயன்படுத்தி, நிமிடத்திற்கு மூன்று முதல் ஐந்து இலட்சம்



சுழற்சியினைக் கருவிகளில் பெற இயலும். இந்த வேகத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள் மிக எளிதாக, நோயாளிக்கு வலியே தெரியாமல் பல்லில் துவாரம் செய்ய உதவுகின்றன. காற்றழுத்தத்தால் சுழலும் இக்கருவிகள் அதிர்வின்றி இயங்குவதால் நோயாளிக்கு எந்த விதமான சிரமமும் இருப்பதில்லை. பல்லின் துவாரங்களை அடைப்பதற்காகப் பயன்படுத்தும் பொருட்களிலும் நிறைய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய பொருட்கள் பற்களின் இயற்கை நிறத்திற்கு ஏற்றபடியும், பல்லுடன் ஒட்டிக் கொள்ளும் தன்மையாகவும் நல்ல வலிவுடையதாகவும் விளங்குகின்றன உடைந்த பற்களைச் சீர்செய்யவும், சொத்தை விழுந்து நொறுங்கிய பற்களை மீண்டும் புதுப்பிக்கவும்,



விழுந்த பற்களை மீண்டும் பொருத்தவும் புதிய முறைகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

### புதிய சிந்தனைகள்

பல் மருத்துவத் துறையில் புதிய சிந்தனைகள் செழித்து வளர்ந்துள்ளன. மக்களுக்குப் பற்களைப் பற்றிய சிந்தனையையும் விழிப்புணர்வையும் வளர்ப்பதற்காகக் கண்காட்சிகளும், சொற்பொழிவுகளும், ஒளிபரப்புக்களும் அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன. பற்சொத்தை வராமல் தடுக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. மக்களுக்காகவே மருத்துவம் என்பதை உணர்த்துவது போல ஆங்காங்கு பல் மருத்துவம் இலவசப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன. நடமாடும் பல் மருத்துவ ஊர்தி, மருத்துவ வசதியற்ற பல ஊர்களில் பெரும் சேவை புரிகின்றது. உலகில் ஓர்புறத்தும் இல்லாதபடி, நம் தமிழகத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டமும் சிறப்புற நடந்து வருகிறது. நோய் வருமுன் காத்தலே சிறந்த மருத்துவம் என்னும்படி மக்களுக்குப் பல் நோய்த் தடுப்பு பற்றித் திரைப் படங்கள் மூலமாகவும் அறிவுறுத்தப் படுகிறது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; 'கால வகையினானே' என்ற வாக்குக்கு ஏற்ப காலப்போக்கில், பயன்தராத பழைய முறைகள் அநேகம் மறைந்து, அவற்றிற்குப் பதிலாக, ஏற்றம் மிகுந்த சீரிய புதிய முறைகள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டு, பல் மருத்துவத் துறையில் பயன்படுத்தப் படுகின்றன. மக்களின் உடல் நலத்தைப் பேணுவதில் பல் மருத்துவர்களுக்குப் பெரும்பங்கு இருப்பதால் பல் மருத்துவம், இப்போது தனி அந்தஸ்திற்கு உயர்ந்திருக்கிறது. பிணியாளர்களின் நன்மை ஒன்றையே கருத்தில்கொண்டு சேவை செய்துவரும் பல் மருத்துவத் துறையின் எதிர்காலம் மிகப் பிரகாசமானதாகும் என்பதில் சற்றும் ஐயமில்லை. ●

# அறிவுச் சுடர்

# மாணவர் பக்கம்

சுதந்திர இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்?

**—கவிஞர் சரோஜினி நாயுடு**

சோவியத் நாட்டிலிருந்து ஏவப்பட்ட இந்தியச் செயற்கைக் கோள் எது?

**—ஆர்யபட்டா**

தீக்குச்சி செய்ய உபயோகப்படும் இரசாயன மருந்து எது?

**—பொட்டாசியம் குளோரைடு**

பூமியில் நிலமும் நீரும் எத்தனைச் சதவிகிதம்?

**—நிலம் 29%, நீர் 71%**

போபால் விஷவாயு நிகழ்ச்சி நடந்த நாள்?

**—டிசம்பர் 3, 1984**

இந்தியாவையும், சீனாவையும் பிரிக்கும் எல்லைக்கோடு எது?

**—மேக்மகோன் கோடு**

நான்கு பக்கமும் கடலில் சூழப்பட்ட கண்டம் எது?

**—ஆஸ்திரேலியா**

இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முதல் செயற்கைக் கோள் எது?

**—ரோகினி**

இந்தியாவில் மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம் உள்ள இடம் எது?

**—சோனாப்பூர் (736 மீட்டர்)**

பறவை இனத்தில் பறக்கத் தெரியாதது எது?

**—பெங்குவின்**

கொம்பில் கண் உள்ள பிராணி?

**—நத்தை**

காலிலே காது உள்ள பூச்சி?

**—வெட்டுக்கிளி**

தென் ஆப்பிரிக்காவில் அண்ணல் காந்தியடிகளோடு சேர்ந்து போராடிய தமிழ்ப் பெண் யார்?

**—தில்லையாடி வள்ளியம்மை**

நீந்தத் தெரியாத மிருகம்?

**—ஒட்டகம்**

சிமெண்ட்டைக் கண்டுபிடித்தவர் யார்?

**—பார்க்கர்**

உலகில் நீளமான சுவர் எது?

**—கிரேட்வால்-ஆப் சைனா. 2,710 கி.மீ.**

இரத்தத்திலுள்ள நோய்க் கிருமிகளைக் கொல்வது எந்த அணுக்கள்?

**—வெள்ளை அணுக்கள்**

மஞ்சள் காமாலை நோய் எதனால் ஏற்படுகிறது?

**—கல்லீரல் பாதிக்கப்படுவதால்**

அறிவு வளர்ச்சி அதிகமுள்ள கடல் பிராணி எது?

**—டால்பின்**

இந்தியாவில் அதிகம் ஆப்பிள் விளையும் இடம் எது?

**—சிம்லா**

—மா.தா. ஸ்ரீதர்
12-ஆம் வகுப்பு 'பி' பிரிவு
ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன்
மேல்நிலை பள்ளி (தெற்கு)
தியாகராய நகர், சென்னை-17.



## தாய்நாடு

**— கவிஞர் தமிழ்முடி**

**வேர்நன்றாய் இருந்தால்தான்**
**மரம்நன்றாய் வளரும்!**
**பேர்நன்றாய் புரிந்தால்தான்**
**அஞ்சல்போய்ச் சேரும்!**
**ஊர்நன்றாய்த் தெரிந்தால்தான்**
**போய்ச்சேர முடியும்!**
**ஏர்நன்றாய் நடந்தால்தான்**
**சோறுணவு கிடைக்கும்!**

**காய்நன்றாய் இருந்தால்தான்**
**கனியாகி இனிக்கும்!**
**வாய்மொழியில் சிறந்தால்தான்**
**தாய்மொழியும் சிறக்கும்!**
**ஈபூத்தேன் குடித்தால்தான்**
**தேனடைகள் கிடைக்கும்!**
**சேய்பண்பால் உயர்ந்தால்தான்**
**தாய்நாடு சிறக்கும்!**

**மதுரமிகு தாய்மொழியில்**
**பிழையின்றிப் பேச**
**மதலைமுதல் அக்கறையாய்**
**உச்சரித்துப் பழகி**
**நிதமும்நல் பயிற்சியுடன்**
**பழகிவரல் வேண்டும்!**
**அதனால்நம் மொழிசிறக்கும்**
**இலக்கியங்கள் பிறக்கும்!**





**திரைப்படங்களில், 'ஸ்லோ மோஷன்' காட்சிகளைப் பார்க்கிறோம். அவை எப்படி எடுக்கப்படுகின்றன தெரியுமா?**

**இதற்கென்றே விசேட 'ஸ்லோ மோஷன்' காமிராக்கள் உள்ளன. சாதாரண திரைப்படக் காமிராக்கள் வினாடிக்கு 24 படங்கள் என்ற வீதத்தில் படம் பிடிக்கின்றன. அதற்கு மாறாக 'ஸ்லோ மோஷன்' காமிராக்கள் அதைவிடக் கூடுதலான அளவில் படங்களைப் பிடிக்கின்றன. இந்த முறையில் எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்தை வினாடிக்கு 24 படங்கள் என்ற வழக்கமான வேகத்தில் திரையில் காட்டும்போது, வழக்கமான வேகத்தைக் காட்டிலும் மிகவும் மெதுவாக அசைவுகள் ஏற்படுவதை நீங்கள் காண்கிறீர்கள்.**

# தமிழ்நாடு திருக்கோயில்கள்

## நிர்வாக வாரியம்



இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாக அமைப்பினை மாற்றி அமைத்து அதன்மூலம் திருக்கோயில்களின் பராமரிப்பு நிர்வாகம் வழிபாடு மற்றும் மத சம்பந்தமான விழாக்கள் நல்லமுறையில் நடைபெறுவதற்காகத் திருத்தி அமைக்கப்பட்ட அறநிலையத் துறைச் சட்டம், 1991 (சட்டம் 46/1991) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 13.12.1991 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் மாநில அளவில் இயங்கும். மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்கள் அமைக்கவும் இதன்மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த வாரியத்தின் தலைவராகச் செயல்படுவார்.

திருக்கோயில்கள் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் உள்ளடங்கிய ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட வருவாயுடைய திருக்கோயில்களின் அறங்காவலர்கள் நியமனம் செய்யும் அதிகாரம் மாநில அளவிலான வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கீழ் உள்ள திருக்கோயில்களின் அறங்காவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மாவட்டக் குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்தத் தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தில் அலுவல் சார்புடைய உறுப்பினர்கள் எட்டுப் பேரும், அலுவலர் சார்பில்லாத உறுப்பினர்கள் ஒன்பது பேரும் இருப்பார்கள். அலுவல் சார்பில்லாத அமைப்பில் ஓர் உறுப்பினர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்கள் மாநில அளவிலான திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தில் செயலாளராகச் செயல்படுவார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் இதுவரை செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்கள் தவிர மற்றவைகளைத் திருக்கோயில் நிர்வாக வாரியம் மற்றும் மாவட்டக் குழுக்களும் செயல்படுத்தும்.

13.12.1991 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள சட்டத்தின்படி மாநில அளவிலான திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைவர் (பதவி வழி)
2. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் உறுப்பினர்
3. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன் உறுப்பினர்
4. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரசுச் செயலாளர், உறுப்பினர் (பதவி வழி)
5. ஆணையர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உறுப்பினர் (பதவி வழி)

**அலுவல் சார்புள்ள உறுப்பினர்கள்**

6. தலைமைச் செயலாளர்.
7. வருவாய்த்துறை அரசுச் செயலாளர்

## வடகிழக்குப் பருவமழையால் கூடுதல் பாசனம்

தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 6,947 பொதுப் பணித்துறைப்பாசனக் குளங்களில் 1900 குளங்களில் சமீபத்தில் மழையின் பயனாக முழு அளவுக்குத் தண்ணீர் நிரம்பியுள்ளது. இந்த ஒவ்வொரு ஏரியின் மூலமும் சுமார் 1'00 ஏக்கருக்கு அதிகமான நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்.

இந்த ஏரிகளில் சுமார் 870 ஏரிகளில் 3 மாதப் பாசனத்துக்குத் தேவையான தண்ணீரும், 1,501 ஏரிகளில் 2 மாதங்களுக்குத் தேவையான தண்ணீரும், 1,624 ஏரிகளில் ஒரு மாதப் பாசனத்துக்கு வேண்டிய நீரும் இருப்பில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஏரிகளில் உள்ள மொத்தத் தண்ணீரைக் கொண்டு சுமார் 3.8 இலட்சம் எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியும். இதன் மூலம் வட மாவட்டங்களில் 3-வது நெற்பயிரும், மற்ற மாவட்டங்களில் பருப்பு வகைகளும் பயிர் செய்ய நல்ல வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள மொத்தம் 1,501 பாசன ஏரிகளில் 1,283 ஏரிகளில் முழு அளவுக்கு நீர் நிரம்பியிருக்கிறது. இதேபோல திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள மொத்தம் 407 ஏரிகளில் 115 ஏரிகளிலும், வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள 226 ஏரிகளில் 40 ஏரிகளிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள 809 ஏரிகளில் 52 ஏரிகளிலும், சேலம் மாவட்டத்தில் 172 ஏரிகளில் 60 ஏரிகளிலும், தருமபுரி மாவட்டத்தில் 95 ஏரிகளில் 73 ஏரிகளிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள 250 ஏரிகளில் 107 ஏரிகளிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 712 ஏரிகளில் 71 ஏரிகளிலும் முழு அளவுக்குத் தண்ணீர் நிரம்பியிருக்கிறது.

—நன்றி 'இந்து'

### மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.5 கோடி

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் கோரிக்கையை ஏற்று, மேற்குத் தொடர்ச்சி மலை மேம் பாட்டுத் திட்டப் பணிகளுக்காக, மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு இந்த ஆண்டு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல், மண் வளப் பாதுகாப்பு, நீர் ஆதாரங்கள் மேம்பாடு, காடு வளர்த்தல், வனப்பகுதிகளில் சாலை வசதி போன்ற பணிகள் நிறைவேற்றப்படும்.

மலைப் பகுதிகளில் திருட்டைக் கண்டுபிடிக்க மிகவும் தாழ்வாகப் பறக்கக்கூடிய ஒரு சிறிய விமானம் வாடகைக்கு எடுத்து அந்த விமானத்தைப் பயன்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

---

8. தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை.
9. இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

**அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள்**

10. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம்.
11. திரு. டி.எஸ். சந்தானம், தலைவர். சுந்தரம் நிதி நிறுவனம்.
12. திரு. பா. சிவந்தி ஆதித்தன்.
13. திரு. எம்.ஏ.எம். ராமசாமி.
14. அல்லூர் விஸ்வநாத சிவாச்சாரியார், அல்லூர், திருச்சி.
15. திரு. கே. பராசரன், இந்திய அரசின் முன்னாள் சட்ட ஆலோசகர்.
16. திரு. வானமாமலை, இராமனுஜ ஜீயர், நாங்குனேரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
17. அக்னிகோத்ரம் இராமனுஜ தாத்தாச்சாரியார்.
18. திருமதி. ராணி டி. இந்திராதேவி, இராமநாதபுரம்.

இந்த, தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் செயல்படத் தொடங்கியுள்ளது.

மாவட்டக் குழுக்கள் ஓர் தலைவரையும் 11 உறுப்பினர்களையும் கொண்டதாக அமையும். மாவட்டக் குழுக்கள் மற்றும் அதன் தலைவர்கள் ஆகியோரை இந்த, தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் நியமனம் செய்யும். இதில் ஓர் உறுப்பினர் தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார். இந்த மாவட்டக் குழுக்களின் செயலாளராகத் துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் செயல்படுவார். மாவட்டக் குழு, ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் கீழ் வருவாய் உள்ள திருக்கோயில்களின் பரம்பரை சாரா அறங்காவலர்களை நியமனம் செய்யும்.

மாவட்டக் குழு இதுவரை துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்தும்.

இந்தத் திருத்தி அமைக்கப்பட்ட சட்டம் 13.12.91 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளதால், இதுவரை பதவி வகித்து வந்த மண்டலக் குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அமலில் இருந்து வரும் இந்து சமய அறநிலையச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட அனைத்துப் பரம்பரை வழி சாரா அறங்காவலர்கள் அனைவரது பணியும் இதன்மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.



# மியூசிக் அகாடமியின் 65வது ஆண்டு இசை விழா

சென்னை ''மியூசிக் அகாடமி'' யின் 65-வது ஆண்டு இசைவிழா மற்றும் மாநாட்டை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 18.12.'91 அன்று தொடங்கி வைத்தார். விழாவுக்கு, இசைப் பாடகர் திரு. நெடுநேரி கிருஷ்ண மூர்த்தி தலைமை தாங்கினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:

''மியூசிக்-அகாடமி''யின் 65-வது இசை விழா மற்றும் மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்னையில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் நடைபெறும் இசைவிழாவைக் கண்டு, கேட்டு ரசிப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள இசை ரசிகர்கள் வருகின்றனர்.

இப்படிப்பட்ட இசை விழாவை, மியூசிக் அகாடமியினர் 65 ஆண்டுகளாகத் தொடர்ந்து எந்தவிதத் தடங்கலும் இன்றி நடத்தி வருகின்றனர். கர்நாடக இசை என்று சொல்லும் போது, அதில் தமிழ் இசைக் கலைஞர்களின் பங்கு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அதை யாரும் மறக்க முடியாது.

புறநானூறு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் போன்ற பழைய தமிழ் நூல்களிலேயே இசையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. இதில் இருந்தே தமிழ்நாட்டின் சிறப்பை உணர முடியும். இப்போது உலகம் முழுவதும் பழைய கலாசாரம் மங்கி வருகிறது. பழைய கலாசாரத்தை நிலைநிறுத்தப் பாடுபட வேண்டும். இந்தப் பணியில் இசை வல்லுநர்கள் ஈடுபட வேண்டும். அதைச் செய்வார்கள் என்று எண்ணுகிறேன். நம் கலாசாரத்தின் சிறப்பு அம்சங்கள் காப்பாற்றப்பட்டு வருங்காலச் சந்ததிகளுக்குப் பொக்கிஷமாக விளங்க வேண்டும். கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேல் இந்திய இசைக்கு ''மியூசிக் அகாடமி''யினர் சிறப்பாகச் சேவை செய்து வருகின்றனர். எதையும் எதிர்பாராத அவர்களின் சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது ஆகும். உங்களுடைய இந்தச் சேவைக்கு எனது மனப்பூர்வமான பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நல்ல நேரத்தில் மியூசிக் அகாடமிதலைவர் திரு.டி.டி.வாசுவுக்கும், நிர்வாகிகளுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்''

விழாவில், மியூசிக் அகாடமியின் சார்பிலான இசைக் கலைஞர்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம் சொந்தப் பணத்தில் இருந்து ரூ.1 இலட்சம் வழங்குவதாக அறிவித்தார்.

மியூசிக் அகாடமி சார்பில் நடைபெற்ற இசை, நாட்டியப் போட்டிகளில் பெங்களூரைச் சேர்ந்த இளம் கலைஞர் இலட்சுமி கோபால்சாமி வெற்றி பெற்றிருந்தார். அவருக்கு, மியூசிக் அகாடமி சார்பிலான



''எம்.ஜி.ஆர். விருதை'' மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பொன்னாடை போர்த்தினார். மியூசிக் அகாடமித் தலைவர் திரு. டி.டி.வாசு அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

இசை விழா மற்றும் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. நெடுநேரி கிருஷ்ணமூர்த்திக்கு, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமியின் கணவர் திரு. சதாசிவம் பொன்னாடை போர்த்தினார்.

திரு. நெடுநேரி கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டி, புகழ் பெற்ற பாடகர் திரு. செம்மங்குடி சீனிவாச அய்யர் பேசினார். முன்னதாக மியூசிக் அகாடமித் தலைவர் திரு. டி.டி.வாசு அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ''என்பீல்டு'' அதிபர் திரு. விசுவநாதன் நன்றி நவின்றார்.

விழாவில், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவினரின் நாதசுரக் கச்சேரி நடைபெற்றது.

# தமிழகத்துக்கு வரும் கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடி நிவாரண உதவி

கர்நாடக மாநிலத்தில் கன்னடர்களால் தாக்கப்பட்டு, தமிழகத்துக்கு வந்துள்ள தமிழ் மக்களின் நிலை பற்றி விவாதிப்பதற்காகச் சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கூட்டினார். இந்தக் கூட்டம் 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. தமிழகத்துக்கு வந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் நிலை பற்றியும், இது தொடர்பாகத் தமிழக அரசு எடுக்க வேண்டிய மேல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யவும் இந்தக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டினார்.

இதற்கிடையே, கோவை, நீலகிரி, வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், பெரியார், தருமபுரி மாவட்டங்களில் கர்நாடகத்திலிருந்து தமிழகத்துக்கு வரும் தமிழர்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களுக்கு உடனே சென்று, தகுந்த நிவாரண உதவிகளை அங்கு வரும் தமிழர்களுக்குக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சில அமைச்சர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. செ. அரங்கநாயகம் (கோவை, நீலகிரி), திரு. ஜி. விசுவநாதன் (வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர்), திரு. கே.ஏ. செங்கோட்டையன் (பெரியார்), திரு. அழகு திருநாவுக்கரசு (தருமபுரி) ஆகியோரை உடனடியாக அந்தந்த மாவட்டங்களுக்குச் செல்லுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அந்த மையங்களில் தமிழர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை நேரடியாகக் கண்டறிவதுடன், மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளை உடனடியாகச் செய்யவும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் இந்த நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவ தமிழக அரசின் மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. சி.என். ராமதாஸ் (கோவை, நீலகிரி), திரு. கே.சந்திரசூடன் (பெரியார்), திரு. என்.ஹரி பாஸ்கர் (தருமபுரி), திரு. கங்காதர்ஜாஸ் (வட ஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள்) ஆகிய நான்கு மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

# ஏழைகளுக்கான திட்டங்களுக்கு முன்னுரிமை!

## மாண்புமிகு முதல்வர் உரை

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாடு தொடக்கத்தை யொட்டி, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் சில வாரங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சாதாரண முறையில் சந்தித்தாலும், புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு இதுதான் முதல் மாநாடு.

புதிய அரசு பொறுப்பேற்றவுடன் நான் துறைத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களை மறுபடியும் சந்தித்துப் பேச இந்த மாநாடு வாய்ப்பு அளித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் அரசுக்கு உள்ள திறமை குறித்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் கடும் பணி ஆற்ற வேண்டி இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தால் மக்கள் நம்பிக்கை எவ்வாறு நொறுங்கியது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. தீவிரவாதம், பயங்கர வாதத்துக்கு மாநிலத்தில் தாராளமான நடமாட்டம் அளிக்கப்பட்டு இருந்தது. அமைதி, மதச்சார் பின்மை, நல்லெண்ணத்துக்கு முன்பு நல்ல பெயர் பெற்று இருந்த தமிழ்நாட்டில் அவையெல்லாம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தன. இந்தச் சூழ்நிலையில் புதிய அரசு சட்டம் - ஒழுங்குக்கு முன்னுரிமை கொடுத்து, பணியாற்ற வேண்டி இருந்தது. புதிய அரசு மிக உறுதியுடன் சட்டம்- ஒழுங்கு நிர்வாகத்தைச் சீர்படுத்தப் பல நடவடிக் கைகளை எடுத்தது.

உங்களுடைய நிர்வாகத் திறமைகள், நேர்மை, உற்சாகத்தின் காரணமாகக் கடந்த சில மாதங் களில் அரசு சிறப்பான வெற்றியை அடைய முடிந்தது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய பணியை மிகவும் எளிதாக்கும் வகையில் தங்கள் கடமையில் முழுமூச்சுடன் ஈடுபட்ட காவல் துறையில் உள்ள ஆண்கள், பெண்கள், மாநில அரசு அலுவலர்கள், ஊழியர் களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், இதோடு நாம் மன நிறைவடைந்து விட முடியாது. நம்மிடையே இருந்த பயங்கர வாதம், இன உணர்வுகள், தேசவிரோதச் சக்தி களை முழுமையாக நீக்கி விட்டோம் என்று நம்மால் சொல்ல முடியாது.

நம் நாட்டிலுள்ளதைப் போல பல கோணங் களுள்ள ஜனநாயகத்தில் பயங்கரவாதம், தீவிர வாதத்துக்கு இடம் இல்லை. இத்தகைய சக்திகள் தங்களின் அருவருக்கத்தக்க முகத்தைக் காட்டும் முன்பே மாவட்ட நிர்வாகத்தினர் மிக எச்சரிக் கையாக முழுவேகத்துடன் அதை அழிக்க நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும். மிகுந்த கவனத்துடன் வளர்ச்சித் திட்டங்களை நிறை வேற்றும் வகையில் நிர்வாகம் தங்கள் கடமையில் முழுமையாக ஈடுபடாவிட்டால் வன்முறை, அமைதிச் சீர்குலைவை நீக்க எடுக்கப்படும் எந்த முயற்சிகளும் வெற்றி பெறா.

இப்போதுள்ள ஏழ்மை, வேலை இல்லாத் திண்டாட்டப் பெருக்கம், விலைவாசி உயர்வு ஆகிய சூழ்நிலையில் மக்களின் கஷ்ட நிலையைப் போக்க அரசு தவறினால் ஈட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்களிடையே அமைதி இன்மை ஏற்பட்டு விடும். இதுபோல நடந்து விடாமல் பார்த்துக் கொள்வது மாவட்ட நிர்வாகத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் ஒரு அரசாங்கத்தின் கண்களாகவும், காதுகளாகவும் இருக்கிறார்கள்.

உள்ளூர் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வதில் உங்களுக்குள்ள திறமை, தகுந்த நடவடிக்கைகளை வளர்ப்பதில் உங்களுக்குள்ள பார்வை, உங்கள் எல்லைக்குள் உள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வளர்ச்சிப் பணிகளை அமைப்பதில் உங்களுக்குள்ள பார்வை ஆகியவை ஏழ்மை, வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்சினைகளைப் போக்குவதில் மிக முக்கியமாக இருக்கும்.

வளர்ச்சி நிர்வாகத்தில் தமிழகத்தில் உள்ள


முதலமைச்சர்

மாவட்ட ஆட்சித் தலைவாகள் எப்போதுமே மிகச் சிறந்து விளங்கி இருக்கிறார்கள். அந்தப் பாரம் பரியத்தை நீங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, ஏழ்மை ஒழிப்புத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், சாலைகள், பள்ளிக்கூட கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஆகிய முக்கிய இனங்களில் கிராமப்புற மக்களின் தேவைகள் முழுமையாத இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. கூடுமான வரையில் அந்தப் பகுதிகளில் உள்ள ஆதாரங் களைப் பயன்படுத்தி அங்குள்ள மக்களின் தேவை களை நிறைவேற்ற மரபு வழியல்லாத அணுகு முறை, நவீன முறைகளை வளர்க்க நாம் முயற்சிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக சமத்துவம், சமுதாய நீதி போன்ற குறிக்கோளை அடைய வேண்டுமானா லும், அறிவுபூர்வ வளர்ச்சியில் மக்களின் விருப்பம் நிறைவேற வேண்டுமானாலும் கல்வியின் பங்கு மிக முக்கியமானதாகும். என்றாலும் முறையான கல்வி மட்டும் இந்தப் பணியை நிறைவேற்றிட முடியாது. கல்வித் திட்டங்களைத் தமிழ்நாடு மிகச் சிறப்பாக நிறைவேற்றி இருந்தாலும், கல்வியை வெறும் ஒரு நிறுவன நடைமுறை என்பதில் இருந்து மாற்றி, தானாக முன்வரும் ஒரு சமுதாயக் கலாசாரமாக அமைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

அறிவொளி இயக்கம் அறிமுகப்படுத்தப்பட் டுள்ள 7 மாவட்டங்களில், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிக உற்சாகத்துடன் இந்த இயக் கத்தை நடத்தி முழு அளவில் கல்வி அறிவை ஏற்படுத்த உறுதி கொண்டு செயல்படுகிறார்கள் என்பதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டம் மிக வெற்றியைப் பெற அவர் களையும் இந்தத் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள நூற்றுக்கணக்கான தொண்டர்களையும் நான் வாழ்த்துகிறேன்.

மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் அறிவு விளக்கை ஏற்றுவதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் செய்யும் என்று உறுதி கூறு கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள உயர்ந்த சொத்தாகும். இந்தத் திட்டத்தின் மூலம் படிக்கும் குழந்தைகளுக்கு உணவு அளிக்க முடிகிறது. இந்தத் திட்டத்தில் அரசுக்கு உள்ள உறுதி பற்றி புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. சத்துணவுக்கூட மையங்கள் நல்லமுறையில் நடப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்ந்து உறுதிப்படுத்த வேண்டும். இளம் சிறுவர்-சிறுமிகளுக்கு உணவு அளிப்பதற்கு அடுத்தபடியாக நமது அடுத்த முக் கியப் பொறுப்பாக அவர்களின் ஆரோக்கியம் இருக்கிறது.

1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழு வதும் நடத்தப்பட இருக்கிற 10 ஆயிரம் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள் திட்டத்தை நான் விரைவில் தொடங்க இருக்கிறேன். டாக்டர்கள், சமூக சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் இந்தத்திட்டத்தால் அதிகமாகப் பயனடைய இருக் கும் கிராமப்புற மக்கள் ஆகியோரைக் கொண்டு வருவதில் டாக்டர்களின் பங்கு மிக முக்கியமான தாகும். இந்த முகாம்களையும் வெற்றிகரமாக நடத்தும் வகையில் மிகவும் ஆர்வத்துடன் செயல் பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மற்றும் சுகாதாரத் துறையின் பல்வேறு பிரிவு அலுவலர்களை நான் கேட்டுக் கொள் கிறேன்.

நாட்டின் மற்ற பகுதிகளைப் போலவே தமிழ்நாடும் ஏழைகளுக்குக் குடியிருப்பு அளிப்ப தில் பின்தங்கி இருக்கிறது. இங்கும்கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் வீட்டு வசதித் திட்டங் களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்கள். தவறான வடிவமைப்புகள், முறையற்ற முறையில் திட்டம் நிறைவேற்றம், நிதியைத் தவறான முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் சில நாட்களுக்கு முன்பு நான் பார்த்ததால் இந்தப் பணிகளை நிறுத்தச் சொல்லி உத்தரவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதுபோன்ற தவறான செயல்கள் தொடர்ந்து நடைபெறாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் கட்டடச் செலவு கணிச மாகக் குறையும் வகையில் அதிகச் செலவில்லாத வடிவமைப்புகள் இருக்கவேண்டும். சாதாரணத் தொழில்நுட்பத்துடன் அந்தப் பகுதியில் கிடைக் கும் பொருட்களைக் கொண்டு கட்டப்பட வேண்டும்.

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு ரூ.24.55 இலட்சம் உதவி

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பணித் திறனை மேம்படுத்தும் பொருட்டு அப்பல்கலைக்கழகத்தின், கணிப் பொறித் துறைக்குக் கணிப்பொறி மற்றும் அதற்குத் தேவையான நூல் களையும் உபகரணங்களையும் வாங்கு வதற்கும், இயற்பியல் துறையினை மேம்படுத்துவதற்கும் ரூபாய் 24.55 இலட்சத்தைப் பல்கலைக்கழகத் திற்கு வழங்குவதற்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார். மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பல்கலைக் கழகத்தில் இயற்பியல் ஆய்வகம் ஒன்றை நிறுவவும் ஆணையிட்டுள் ளார். இதனால், இங்குக் கணிப் பொறி, இயற்பியல் முதுகலை பயிலும் மாணவர்கள் பெரிதும் பயனடைவர்.

ஹட்கோ நிறுவனம் அறிவித்துள்ள கட்டட மையம் திட்டத்தைப் பயன்படுத்தி, குறைந்த விலையில் கட்டடம் கட்டும் தொழில்நுட்பத்தைப் பெற வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறமையை வளர்க்க அதைப் பயன்படுத்த வேண்டும்.

20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிடப் பின்தங்கி இருக்கிறது என்பதை இந்த மாநாட்டுக் குறிப்பில் இருந்து நான் அறிந்தேன். இந்தக் குறை சரி செய்யப்படவேண்டும். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற முழு வேகத்துடன் செயல்பட வேண்டும். அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடத்தை மறுபடியும் பெற எல்லா முயற்சிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு நமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. பொது விநியோகத் திட்டத்தின் பளு மிகவும் அதிகரித்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் நடைமுறைகளில் பல முறைகேடுகளை நான் பார்க்க நேரிட்டது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட உதவித்தொகை வழங்குவதில் மாநில அரசுக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைச் சீரமைக்க உங்களுக்குக் குறிப்புகள் வழங்கப் பட்டுள்ளன. இந்தக் குறிப்புகளில் வழங்கப் பட்டுள்ள ஆலோசனைகள் பற்றி உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறேன்.

ஏழை மக்களுக்கு இந்தத் திட்டத்தின் பலன்கள் போய்ச்சேரும் வகையில் திறமையாக, பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்தை நான் அறிய விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு, நாட்டில் இழந்த இடத்தைத் திரும்பப் பெற நாங்கள் முயற்சி எடுத்து வருகிறோம். அதிக முதலீட்டில் நிறைவேற்றப்படும் சில பெரிய திட்டங்கள், பொருளாதாரத்தை வளர்க்க உதவும் என்றாலும், கிராமப் புறங்களில் வேலை இல்லாத் திண்டாட்டம் குறிப்பாக வேலை இல்லாப் பெண்களிடையே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் குடிசைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்களை வளர்ப்பதற்காக நல்ல சூழ்நிலைகளை வளர்க்க வேண்டும். கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை அமைத்தல் போன்றவைகளும் வேலை இல்லாத மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஊக்கம் அளிக்கும் வகையிலும் தகுந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிக முக்கியமான பங்கை வகிக்க வேண்டும். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆராய்ந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

கிராமப்புறப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று நான் ஏற்கெனவே உறுதி அளித்துள்ளேன். இந்தத் திட்டத்தில் மிகவும் தீவிரமாகக் கவனம் செலுத்தி குறியீட்டை நிறைவேற்ற உதவ வேண்டும் என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு, வளர்ச்சித் திட்டங்கள் இங்கு விவாதத்துக்கு வருகின்றன. பல்வேறு பொருட்கள் குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயாராக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் கருத்துக்களை நாங்கள் முழுமையாக எடுத்துக்கொள்வோம் என்று உறுதி கூறுகிறேன். உங்கள் பரிந்துரைகள், எதற்காக எங்களை மக்கள் ஓட்டுப்போட்டு பெரும் மெஜாரிட்டியில் எங்கள் கட்சியை ஆட்சிக்கு அனுப்பினார்களோ, அந்த அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான கொள்கைகளை உருவாக்க உதவும்.

## இரண்டாவது நாள்:

இரண்டாவது நாளாக நடந்த இந்த மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:



"மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் 2 நாள் மாநாட்டை முடிக்கும் தருவாயில் இருக்கிறோம்.

நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டு மாநாட்டோடு தொடங்கினோம். பிறகு காவல் துறை தொடர்பான விஷயங்கள் பற்றி மட்டும் விவாதிக்கப்பட்டது. இன்று மாவட்ட நிர்வாகம் தொடர்பான பல்வேறு விஷயங்கள் பற்றி விவாதித்தோம். என்னைப் பொறுத்தவரையில், இந்த மாநாடு மிகவும் பயனுள்ள அனுபவமாக இருந்தது. ஏனெனில், இந்த மாநாட்டின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திக்கவும், மாநிலத்துக்கு மிக முக்கியமான விஷயங்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறியவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

மாநிலத்தின் சிறந்த நிர்வாகத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் பங்கு மிக முக்கியமான பங்கு என்று நான் நேற்றே கூறினேன். உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றி முடிக்க உங்களிடம் சரியான கண்ணோட்டம், தேவையான ஆர்வம், முறையான ஊக்கம் இருப்பதை இந்த விவாதத்தின்போது நான் பார்த்தேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் விவாதித்த பல பொருட்கள் பற்றி அரசின் கொள்கையை நீங்களும் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. உங்கள் பொறுப்புக்களை நீங்கள் ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் எல்லாவற்றுக்கும் மேலாக ஏழைகள் மற்றும் அடித்தளத்தில் உள்ள மக்கள் மீது, மனதில் உண்மையான அக்கறை கொண்டு நிறைவேற்றுவீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. மாவட்டங்களில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டும். இந்த விஷயத்தில் நீங்கள் சிறப்பாகச் சேவையாற்றினால் நான் மகிழ்ச்சியடைவேன். தனிப்பட்ட முறையில் ஆர்வம் காட்டி மிகவும் பொறுப்போடு இந்த விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டும்.

பயங்கரவாதிகள், சாதிக் கலவரத்தை உருவாக்குபவர்கள், பிரிவினைச் சக்திகள் மீது நீங்கள் எப்போதும் எச்சரிக்கையாக இருந்து அவர்களைக் கண்காணித்து அவர்கள் சக்திவாய்ந்த படையாக மாறி நமது சமூகத்தின் அமைதியான சூழ்நிலையைக் கெடுக்கும் முன்பு அவர்களை நீங்கள் அடக்க வேண்டும்.

வளர்ச்சிப் பகுதியைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிப்பட்ட ஆர்வத்தோடு பல திட்டங்களை நிறைவேற்றுவதைப் பார்க்கிறேன். இதற்காக உங்களைப் பாராட்டுகிற நேரத்தில் 20 அம்சத் திட்டம் போன்ற ஏழைகளுக்கான திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்து - குறியீட்டை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆதாரங்களைப்பயன்படுத்திக்கிராமப்புற மக்களுக்கு - குறிப்பாக, கிராமப்புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்புஅளிக்க உள்ளூர்த்திட்டங்களைத் தீட்டி இதுவிஷயத்தில் அரசின் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் மாவட்டங்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்த நீங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். கொள்முதல் திட்டங்களை மிகவும் உற்சாகத்தோடு நிறைவேற்ற வேண்டும். உணவுத் தானிய வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், ஓட்டல் அதிபர்கள் ஆகியோருடன் பேசி உங்கள் மாவட்டத்தில் விலைவாசியைக் குறைக்க அவர்களை நீங்கள் தூண்ட வேண்டும். இந்த விஷயத்தில் உங்கள் செயல்பாட்டின் மூலம் உங்கள் திறமையை நான் தீர்மானிப்பேன்.

உணவுப் பொருட்களைக் கடத்துவோர், பதுக்கல் செய்வோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது உங்களின் உத்தரவு அல்லது தீர்ப்பில் உள்ள அற்ப மற்றும் சிறிய குறைகளின் அடிப்படையில் அவர்கள் தப்பித்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். உள்ளூர் ஆதாரங்களைத் திரட்டி உங்கள் மாவட்டத்தில் உற்பத்தியை - குறிப்பாக





முக்கியமான உணவுப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். காய்கறி பயிரிடுதல், தோட்டக்கலை, காடுகளை உருவாக்குதல், மரம் வளர்த்தல் ஆகியவற்றில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும்.

நிர்வாகத்துக்கு நல்ல பெயரை உருவாக்குவது மிகவும் முக்கியமாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நல்ல முறையில் மக்கள் தொடர்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். மிகவும் பதட்டமாக, கஷ்டமான சூழ்நிலைகளில் அது உங்களுக்கு மிகவும் பலன் அளிக்கும். மாவட்ட நிர்வாகத்தில், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகம், வட்டார அலுவலகம், வட்ட அலுவலகங்களில் உள்ள அன்றாட நடைமுறைப் பிரச்சினைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அலுவலகங்களுக்கு வரும் ஏழை மக்களின் பல்வேறு தேவைகளை மிகவும் விரைவாகவும், இரக்கத்தோடும் பார்க்கவேண்டும்.

நிர்வாகத்தில் விரைவு ஏற்படுத்துவதற்கு வசதியாகப் புதிய முறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உருவாக்க வேண்டும். அடுத்த சில மாதங்களில் உங்கள் ஆற்றலின் அத்தாட்சியைப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சி அடைவேன். மேலும் வளர்ச்சிகளைத் தெரிந்துகொள்ள நான் மறுபடியும் விரைவில் உங்களை இதுபோல கூட்டமாகவோ, தனித்தனியாகவோ சந்திப்பேன் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன்.'

கடந்த ஆண்டுக்கான சிறுசேமிப்பு வசூலில் சாதனை படைத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

அதிக அளவில் வசூல் செய்து - அதாவது, 37 கோடியே 19 இலட்சம் ரூபாய் வசூல் செய்த கோவை மாவட்டத்துக்குச் சிறப்பு விருது வழங்கப்பட்டது. இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். கலைவாணனுக்கும், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. ஏ.எம். ராமனுக்கும் முதல்வர் அவர்கள் விருது வழங்கினார்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.ஏ. ராமையா, முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. சுர்ஜித் கே. சவுத்ரி, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். விஜயகுமார், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. கே.தீனதயாளன், காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஞானதேசிகன், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. டி.எஸ். ஸ்ரீதர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவரான திரு. சி.எஸ். ராஜமோகன், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. பி. கோலப்பன், திண்டுக்கல்-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரிதின் ராஜ் லாங்தாசா, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜீவ் நயன் சவுபே, முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. எம். கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு முதல்வர் அவர்கள் விருதுகள் வழங்கினார்.

# மகாகவி பாரதியாரின் 110-வது பிறந்தநாள் விழா

தமிழுக்கும், தேசியத்திற்கும் பெருமை சேர்த்த மகாகவி பாரதியார் அவர்களின் 110-வது பிறந்த நாள் விழாவினை மாநில அளவிலான விழாவாக அவர் பிறந்த மண்ணான சிதம்பரனார் மாவட்டம் எட்டயபுரத்தில் கொண்டாட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விழாவாக இவ்விழா எட்டயபுரத்தில் 11.12.91 அன்று மாலையில் பாரதியார் மணிமண்டப வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்கள் பாரதியார் மணிமண்டபத்தில் உள்ள பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். அன்சர் அலி, இ.ஆ.ப. அவர்கள் மாலை அணிவித்தார். பின்னர் மணிமண்டப வளாகத்தில் மரக் கன்றுகளை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்களும், சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கனககோவிந்தராஜு அவர்களும் நட்டார்கள்.

விழாவிற்குச்சிதம்பரனார்மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை வகித்தார். விழாவில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் முழு உருவப் படத்தை திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார்

விழாவில் டாக்டர் கனக கோவிந்த ராஜுலு, எம்.பி., திரு. எம்.ஆர். ஜனார்த்தனம், எம்.பி., திரு. செல்லத்துரை, எம்.எல்.ஏ., திருமதி. சியாமளா, எம்.எல்.ஏ., திருமதி கனகவல்லி, எம்.எல்.ஏ., காமராஜ் கல்லூரி முதல்வர் திரு. செல்வராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். விழா இறுதியில் திருநெல்வேலி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இன்னிசை நடைபெற்றது.

11.12.91 அன்று காலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். அன்சர் அலி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மதுரை மண்டல போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. பார்த்தசாரதி அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் உருவம் பொறித்த அஞ்சல் உறை வெளியிடும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பாரதி மணிமண்டப வளாகத்தில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை நலிந்தோர்க்கு வழங்கினார்கள்.

**சு. தீனதயாளன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தூத்துக்குடி, சிதம்பரனார் மாவட்டம்.**

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கர்நாடக மாநிலத்தில் வன்முறைச்சம்பவங்கள்;

# ஜனவரி 2-ல் முழு வேலை நிறுத்தம்

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

கர்நாடக மாநிலத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலை குறித்து ஆலோசனை செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் வருமாறு:

1. நமது அண்டை மாநிலமான கர்நாடகத்தில் பல்லாண்டுக் காலமாகவும், தலைமுறை தலைமுறையாகவும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அங்குள்ள கன்னட வெறியர்களால் ஒரு காரணமும் இன்றி வன்முறைக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கன்னட வெறியர்களால் தாக்கப்பட்டு, தங்களது உடைமைகளை இழந்து தமிழகம் வந்து சேர்ந்துள்ளனர். அம்மாநிலத்தில் உள்ள தமிழ் மக்கள் தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருவது குறித்து இந்தக் கூட்டம் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

2. வழிவழியாகக் கன்னடர்களோடு ஒன்றி வாழ்ந்து கர்நாடக மாநிலத்தின் செல்வ உயர்விற்கும், வளர்ச்சிக்கும் உழைத்துக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள், அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை காரணமாக, இன்று தங்கள் இல்லங்களையும், உடைமைகளையும் இழந்து தங்கள் உயிருக்கே பாதுகாப்புத் தேடும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்புத் தர கர்நாடக அரசு தவறியது குறித்து வருந்துவதோடு, இந்த வன்முறைச் செயல்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த பொழுது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களுடன் நேராகவும், தொலைபேசி மூலமாகவும் டெலக்ஸ் செய்திகள் மற்றும் கடிதங்கள் மூலமாகவும், பத்திரிக்கைகள் வாயிலாகவும் அத்தகைய நிகழ்ச்சிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டார். மத்திய அரசு கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தையோ அல்லது மத்திய அரசுப் படைகளையோ அனுப்பி அமைதி காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இது குறித்துத் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் இந்தக் கூட்டம் வரவேற்கிறது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைக் காக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்திருப்பதை இக்கூட்டம் பாராட்டுகிறது.

4. 70 ஆயிரத்திற்கும் மேலாகத் தமிழ் மக்கள் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது இங்கு ஒரு அசாதாரண நிலையினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வன்முறைச் சம்பவங்களால் அச்சத்திற்கும், கவலைக்கும் ஆளாக்கப்பட்ட தமிழ் மக்கள், பாதுகாப்பிற்காகத் தமிழ் நாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தங்கள் கர்நாடக மாநிலத்தில் தொடருகின்றன. இதனால் இங்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு, உணவளித்து, தங்க இடம் கொடுத்துப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பினை மாநில அரசு மேற்கொள்ளுவதால் கணிசமான செலவு ஏற்படுகிறது. இந்தச் செலவு அனைத்தையும் மைய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

5. மேலும், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அங்கு சென்று தொடர்ந்து வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவும், தேவையான எல்லா நடவடிக்கைகளையும் கர்நாடக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கான அறிவுரைகளை மத்திய அரசு கர்நாடக அரசுக்கு உடனடியாக வழங்க வேண்டுமென்றும், அந்த அறிவுரைகளைச் செயல்படுத்த வேண்டுமென்றும், கர்நாடக, மத்திய அரசுகளை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

6. வன்முறைச் செயல்களால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்களுக்கும், உடற்காயங்களுக்கும், பொருள் இழப்புகளுக்கும் கர்நாடக அரசு உடனடியாக உரிய நிவாரணம் அளிக்கவேண்டுமென்று அந்த மாநில அரசைக் கேட்டுக் கொள்ள இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

7. அத்தகைய நிவாரணத்திற்குத் தகுதி பெற்றுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொழுது தமிழகத்திற்கு வந்து தங்கியிருப்பதால், அவர்களுக்கும் கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் இந்த நிவாரணத்தை வழங்குவதற்கான விசாரணையை நடத்த மத்திய அரசு பதவியிலுள்ள உச்ச நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசை இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

8. கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்முறைச் செயல்களைக் கண்டிக்கவும் அந்த மக்களுக்குப் போதுமான பாதுகாப்பைத் தரத் தவறிய கர்நாடக மாநில அரசைக் கண்டிக்க

வும், கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக முதலமைச்சர் நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் மூலமாகவும் கேட்டுக் கொண்ட பிறகும், மத்திய அரசு தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டிக்கவும், கர்நாடகத்திலுள்ள தமிழ் மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க மத்திய அரசும், கர்நாடக மாநில அரசும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவும் வருகிற ஜனவரி 2-ஆம் தேதி அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழகம் தழுவிய முழு வேலை நிறுத்தம் நடத்துவதென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

9. தமிழகத்தின் ஒருமித்த உணர்வை வெளிப்படுத்த ஜனவரி 2-ஆம் தேதி முழு வேலை நிறுத்தம் நடத்த இக்கூட்டம் தீர்மானித்திருப்பதால், இந்த ஒற்றுமை உணர்வை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக, தமிழகத்திலுள்ள சில அரசியல் கட்சிகள் தனித்தனியே அறிவித்துள்ள ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் கைவிடுமாறும், ஜனவரி 2-ஆம் தேதி நடைபெறவுள்ள முழு வேலை நிறுத்தத்தை முழு வெற்றி அடைய ஒத்துழைக்குமாறும், இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

## அரிசி ஏற்றுமதி: பிரதமர் அவர்களுக்கு முதல்வர் கடிதம்

'வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும்' என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்.

"அரிசி விலை எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. எனவே வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யும் மத்திய அரசின் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதற்காகக் கிடைக்கிற அரிசியை ஏற்றுமதியாளர்கள் பதுக்கி வைக்கிறார்கள். இதனால் அரிசி விலை உயருகிறது. இந்தப் பதுக்கலின் விளைவாக, அரிசி விலை உயர்ந்து விடும் அபாய நிலைமை உருவாயிருக்கிறது. எனவே, மேற்கொண்டு அரிசி ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு உடனே நிறுத்த வேண்டும்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்:

1. திரு. விஜயராகவலு
மாநிலத் தலைவர்,
(பாரதிய ஜனதா கட்சி)

2. திரு. பி. நல்லக்கண்ணு
கூடுதல் செயலாளர்
(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி)

3. திரு. ஏ. நல்லசிவம்
செயலாளர்
(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)

4. திரு. கே. ராமமூர்த்தி
தலைவர்
(இந்திய தேசிய காங்கிரஸ்)

5. திரு. தஞ்சை ராமமூர்த்தி
(ஜனதா தளம்)

6. திரு. கே.ஆர். ராஜ்குமார்
மாநிலத் தலைவர்
(தமிழ்நாடு ஜனதா கட்சி)

7. திரு. பி.சி. பழனியாண்டி
தலைவர்
(லோக்தளம்)

8. திரு. பி. சாரதி
தலைவர்
(தமிழ்நாடு காங்கிரஸ்-சோசலிஸ்ட்)

9. திரு. ஆலடி அருணா
(திமுக)

10. திரு. எஸ். ஆண்டித் தேவர்
(பார்வர்டு பிளாக்)

11. திரு. கே. வீரமணி
(திராவிடர் கழகம்)

12. திரு. அப்துல் சமது
(முஸ்லீம் லீக்-(சமது))

13. திரு. எம். அப்துல் லத்தீப்
(முஸ்லீம் லீக்-(லத்தீப் பிரிவு))

14. திரு. எஸ். திருநாவுக்கரசு
(அண்ணா புரட்சித் தலைவர் முன்னேற்றக் கழகம்)

15. திரு. டி. இராஜேந்தர்
(தாயக மறுமலர்ச்சிக் கழகம்)

16. டாக்டர் சிவசாமி
(இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி)

17. திரு. ஜெய்னுதீன்
தலைவர்
(இந்திய மனித உரிமைக் கட்சி)

18. திரு. செ.கு. தமிழரசன்
(இந்திய குடியரசுக் கட்சி)

19. தலைவர்,
இந்திய ஜஸ்டிஸ் கட்சி

20. தலைவர்,
அம்பேத்கர் மக்கள் இயக்கம்

21. தலைவர்,
பாரதீய மக்கள் காங்கிரஸ்

22. தலைவர்,
கிருஸ்துவ ஜனநாயக முன்னணி

23. திரு. எஸ். ஜோசப் பெர்னாண்டோ,
தலைவர்,
(கிறிஸ்துவ முன்னேற்றக் கழகம்)

24. திரு. கே. காளியப்பன்
(இந்திய பொருளாதார விடுதலை இயக்கம்)

25. திரு. ஏ. ஜெகவீர பாண்டியன்
(வேலை தேடுவோர் சங்கம்)

26. திரு. கே. செல்லப்பன்
தலைவர்,
(நாத்திக திராவிட முன்னேற்றக் கழகம்)

27. திரு. சீதாராம் கோயங்கா
தலைவர்
(ராம் ராஜ்ய மார்க்கம்)

28. திரு. ஆர். பக்தவச்சலம்
தலைவர்,
(தமிழர் கழகம்)

29. திரு. எம்.கே.டி. சுப்ரமணியன்
தலைவர்,
(தமிழக தேசிய இயக்கம்)

30. திரு. கே. முருகேசன்
தலைவர்,
(தமிழக முன்னேற்ற முன்னணி)

31. டாக்டர் அமான் கான்
தலைவர்,
(தேசிய மாணவர் கட்சி)

32. திரு. எம். ஜெபமணி
தலைவர்,
(தமிழ்நாடு ஜனதா கட்சி)

33. திரு. செங்கம் ஜப்பார்
தலைவர்,
முஸ்லீம் லீக் (ஜெ)

34. திரு. டி. வசீகரன்
தலைவர்,
(அனைத்திந்திய சிறுபான்மையினர் கழகம்)

35. திரு. தாஜித்தின்
(தமிழ்நாடு முஸ்லிம் லீக்)

36. திரு. கே. செல்ல முத்து
(இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி)

37. திரு. எஸ்.வி. சண்முகம்
(ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி)

38. திரு. கந்தசாமி
(பார்வர்டு பிளாக்-(க))



# கர்நாடகக் கலவரம் -
## மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கை

கர்நாடக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை உடனடியாக நிலைநாட்டிட வேண்டுமெனவும், அப்பாவித் தமிழ் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை உடனே நிறுத்த வேண்டுமென்றும் அம்மாநில முதல்வரை டிசம்பர் மாதம் 13-ஆம் நாள் நான் கேட்டுக் கொண்டேன். மோசமாகிக் கொண்டு வரும் சட்டம் ஒழுங்கு நிலைமையைத்திறமையாகச் செயல்பட்டு அடக்கி அப்பாவித்தமிழ் மக்களின் உயிர்களை காப்பாற்றும்படி கர்நாடக முதல்வருக்கு அறிவுறுத்துமாறு பிரதமர் அவர்களையும் கேட்டுக் கொண்டேன். சீன நாட்டுப் பிரதமர் வருகையினால் பிரதமர் அவர்களைத்தொடர்பு கொள்ள இயலாத நிலையில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களையும் டாக்டர் சின்தா மோகன் அவர்களையும் தொடர்பு கொண்டு, அவர்களை பிரதமருடன் பேசி, கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்பி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு 14.12.'91 அன்று கேட்டுக் கொண்டேன். அவர்கள் நிலைமையின் அவசரத்தை உணர்ந்து பிரதமருடன் இது குறித்துப்பேசுவதாகக்கூறினார்கள். கர்நாடக மாநிலத்தில் மீண்டும் அமைதியைக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று கூறினார்கள்.

ஆனால், கர்நாடகத்தில் நடக்கும் சம்பவங்கள் வேறுவிதமாக இருக்கின்றன. தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களின் வீடுகளில் புகுந்து பொருட்களையும் சொத்துக்களையும் கொள்ளையடித்து, அவர்களுக்கு கடுமையான காயங்களை ஏற்படுத்துவதாக தகவல் வந்த வண்ணம் உள்ளன. இவை அனைத்தும் உள்ளூர்க் காவலர்களின் உதவியுடனும், தூண்டுதலுடனும் நடைபெறுவதாகச் செய்திகள் கிடைக்கின்றன. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து வயதானவர்களும், பெண்களும், குழந்தைகளும் அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டுக்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள். இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதலை இந்நாட்டின் மனிதாபிமானமுள்ள மக்கள் அனைவரும் நேரடியாகக் கண்டிப்பார்கள் என நான் உறுதியுடன் நம்புகிறேன். இதிலிருந்து கர்நாடகத்தில் சட்டம் ஒழுங்கு மிக மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருப்பது நமக்குத் தெரிகிறது. தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுத் துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த நிலை இன்னும் நீடித்தால், இது தமிழ்நாட்டில் கடுமையான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என நான் அஞ்சுகிறேன்.

அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இந்த முரட்டுத்தனமான வன்முறைகளுக்கு கர்நாடக முதலமைச்சர் முழுப் பொறுப்பேற்று, இத்தகைய வன்முறைச் செயல்களை உடனே தடுத்து நிறுத்த வேண்டுமென நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கர்நாடகத்தில் மாமூல் நிலைமையை உடனே கொண்டுவர மேலும் காலந்தாழ்த்தாமல் கர்நாடக முதல்வருடன் பேச வேண்டுமென நான் இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கர்நாடகக் காவலர்கள் அங்கு வாழும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்புத்தரத் தவறியதுடன் அவர்களுக்கு எதிராகச்செயல்படுவதால், அங்கு வன்முறையைக் கட்டுப்படுத்த இராணுவத்தை அனுப்பி வைக்குமாறு நான் பிரதமர் அவர்களை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பெங்களூரிலும், கர்நாடகத்தின் பிற பகுதிகளிலும் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தங்கள் உடைமைகளை அப்படியே விட்டுவிட்டு அந்த மாநிலத்தை விட்டு ஓடி வருகிறார்கள். இவர்களின் இழப்புகளுக்கு முழு நஷ்ட ஈடு கொடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறு பிரதமர் அவர்களையும், கர்நாடக முதல்வர் அவர்களையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகத்தின் முன்னேற்றத்திற்குப் பெரும்பணியாற்றிய தமிழ் இன மக்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல்கள் நடத்தத் தூண்டிவிடப்பட்டிருப்பது மிகப்பெரிய வெட்கக்கேடான காரியம் ஆகும். இத்தகைய வன்முறைகளைத் தவறாது கண்டிக்குமாறு நான் அமைதியை விரும்பும் மக்களையும் பொறுப்புள்ள தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களின் நிலைமை ஆபத்தாக இருக்கும் இந்தச் சூழ்நிலையில் கர்நாடக முதல்வரைச் சந்தித்துப் பேச பிரதமர் கூட்டும் எந்தக் கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளும் கேள்விக்கே இடமில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ●

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் பகிர்ந்துகொள்ள, 1990-இல் மாற்றியமைக்கப்படுவதற்கு முன்பிருந்த காட்கில் உத்தியே போதுமானதாக இருந்தது. முன்பிருந்தபடியே 55 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதம் வரை மக்கள் தொகை அம்சத்திற்கு முக்கியத்துவம் தரும். யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

தனிநபர் மூலமான பகிர்வு முறையை நான் வரவேற்கிறேன். தேசிய சராசரி வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் சில மாநிலங்கள் விடுபடலாம் என்பதால் உச்ச பட்ச வருமானத்திலிருந்து உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் 20 சதவிகிதம் அளவீட்டைப் பகிர்ந்தளிக்கலாம் என்பதை உங்கள் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். தமிழகத்தின் பிரச்சினை தனித்தன்மை வாய்ந்தது. ஏழாவது திட்டத்தில், தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம், தேசிய சராசரி வருமானத்தின் அளவிலோ அல்லது சற்றே அதிகமாகவோ இருந்ததாகக் கருதப்பட்டது. தேசிய வருமானத்துக்குக் கீழ் தனி நபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்கு 20 சதவிகிதம் ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்படுவதிலிருந்து தமிழகம் விடுபட்டதால், சந்தைக் கடன் உள்ளிட்ட மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது. மத்திய புள்ளி விபர அமைப்பின் (Central Statistical Organisation) 82-85-ஆம் ஆண்டின் குறிப்பின்படி தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் தேசிய சராசரிக்குக் கீழ் உள்ளது. இந்த அமைப்பின் (CSO) 84-87 (அ) 85-88 குறிப்பின்படி தமிழகத்தின் தனி நபர் வருமானம் தேசிய சராசரிக்குச் சற்று கூடுதலாக உள்ளது. இந்த குறிப்பிட்ட காலக் கட்டங்களில் 80 வருமான மதிப்பீடுகளைப் பற்றி நாங்கள் சில வினாக்களை எழுப்பியுள்ளோம். இவை இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளன. தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் இந்த மதிப்பீடுகளில் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாகவே இருக்கின்றது என்று நாங்கள் நம்பக் காரணம் உள்ளது. தனிநபர் வருமான மதிப்பீடுகளின் ஒப்பீடு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் அமைய வேண்டும். மக்கள் தொகையைக் குறிக்க மகத்தான முயற்சி எடுத்துள்ள மாநிலங்களுக்கு ஏற்ற பரிசாக இது அமையும். இது மட்டும் செய்யப்படுமானால் தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் தேசிய சராசரிக்கு மிகக் கீழாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலத்திலும்கூட நிலவரத்தைச் சரியாகச் சுட்டிக்காட்டாத வருமான மதிப்பீடுகள் இந்தக் குழுவினால் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்பதாவது நிதிக்குழு செய்ததைப் போலவே 82-85 காலகட்ட வருமான மதிப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்த ஒரு காரணத்துக்காகவோ இது ஏற்புடையதாக இல்லாதிருக்குமானால் மத்திய உதவி சந்தைக் கடன் ஆகிய இரண்டிலும் ஏழாவது திட்டத்தில் அளிக்கப்பட்டதைப் போலவே தமிழ்நாட்டிற்குத் தனிச் சிறப்புரிமை வழங்கப்பட வேண்டும்.

வரி முயற்சி, வரவு-செலவு, நிர்வாகம், சில சிறப்பு இனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 10 சதவிகித வரி வருவாய் பிரித்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாடு, அனைவருக்கும் தொடக்கக் கல்வி, அயல் உதவி திட்டங்களின் செயற்பாடு ஆகிய மூன்று



## காவிரி நதிநீர்ப் பிரச்சினை:

# மாண்புமிகு பிரதமர் உறுதி

**இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைத் தமிழக முதல்வர் அவர்கள் 23-12-91 அன்று டெல்லியில் சந்தித்துத் தமிழ்நாட்டின் நலன் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.**

**காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் கோரிக்கைக்குப் பதிலளித்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசுகையில், 'காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படும்' என்று உறுதி கூறினார்.**

செயல் திறன் குறியீடுகளிலும், தமிழகம் சாதனை படைத்துள்ளது. எனவே உச்ச பட்ச விபரங்கள் ஏற்கெனவே எட்டப்பட்ட நிலையில் எதிர்காலச் சாதனை என்பது ஏட்டள்வில் சிறிதாகவே அமையும் வரவு-செலவு நிர்வாகம் ஏழாவது திட்டக் காலத்தின் நிலையைப் பிரதிபலிக்கிறது. வரி முயற்சி அம்சத்திற்கு 10 சதவிகிதம் ஒதுக்கி, திருத்தியமைக்கப்பட்ட காட்கில் திட்டத்தையே தக்க வைத்துக் கொள்ளலாம்.

தனித்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு ஒதுக்க 10 சதவிகிதம் தொடர இருக்கின்றது. அது, விருப்பம்போல் பகிர்ந்தளிக்கப்பட இருக்கின்றது. 1991-92-இல் தமிழ்நாட்டிற்குப் போதுமான ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மிகக்குறைவான திட்ட உதவி உயர்வே தமிழகத்திற்குக் கிட்டியது. குறைந்தபட்ச திட்டத்தைக்கூட நிறைவேற்ற இயலாத சூழ்நிலையில் தமிழகம் உள்ளது. தமிழகத்திற்கான தனிநபர் திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி அளவைவிட மிகக்குறைந்து உள்ளது. வெளிநாட்டுத் தீவிரவாதிகளால் இந்த மாநிலத்திற்கு ஏற்பட்ட அபாயம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இது நிதி ஆதாரங்களைப் பெருக்கும் முயற்சிகளுக்குப் பெரும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்திவிட்டது. விருப்பம்போல் வழங்கப்படும் 10 சதவிகித உதவியில் தமிழகத்திற்குச் சிறப்புரிமை உறுதி செய்யப்படவேண்டும். இது குறித்து குறிப்பிடத்தக்க உறுதி மொழி ஒன்று வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய சராசரிக்குக் கீழ் தனிநபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்குச் சந்தைக் கடன்களைப் பெறுவதற்காக 20 சதவிகிதம் வழங்கப்பட்டுள்ளது என அறிகிறேன். தேசிய வருமானத்துக்குக் கீழ் தனிநபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்புச் செய்வதைத் தீர்மானிப்பதில் உள்ள சிக்கலை ஏற்கெனவே நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். கடன்களினால் ஏற்படும் அதிகமான செலவினத்தைக் கருதும்பொழுது பின் தங்கிய மாநிலங்களுக்கான தனி ஒதுக்கீடு 20 சதவிகித அளவில் அமையலாம். இந்த 20 சதவிகித தனித் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்குச் சிறப்பு ஒதுக்கீடு செய்ய வேண்டும். அல்லது அதிக பட்ச அளவிலிருந்துள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் இந்த மொத்த தனித் தொகுப்பும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்த ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டிற்குத் தனிப் பாதுகாப்புத் தேவை என்று வேண்டிக் கொள்கிறேன்.

வெளிஉதவி பெறும் திட்டங்களுக்கு 100 சதவிகித உதவி உண்டு என்று நிகழ்ச்சிக் குறிப்பு தெரிவிக்கிறது. இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அடிப்படை வசதிகள் உள்ள பிரிவில் உள்ள திட்டங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் தொடர்ந்து பெற்று வருவது 70 சதவிகிதம் மட்டுமே. அனைத்து வெளி உதவித் திட்டங்களைப் பொறுத்த வரையில் 100 சதவிகித உதவியை மைய அரசு வழங்க வேண்டும். தற்பொழுது நடைபெற்று வருகின்ற திட்டங்களும் இதில் அடங்கவேண்டும். புனரமைப்பு வளர்ச்சிக்கான புதிய உத்திகளை வகுத்தல் ஆகியவற்றை மாநிலங்கள் செவ்வனே செய்யும் வாய்ப்பை வெளியுதவித் திட்டங்கள் வழங்குகின்றன. சமத்துவம் என்ற பெயரில் மாநிலங்கள், திட்டமிடுதல், திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்குக் குந்தகம் விளைவிற்கும் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படக்கூடாது.

கடல் எல்லைகளினால் ஏற்படும் தமிழகத்தின் தனிப்பட்ட சிக்கல்கள் தற்போது தான் சிறிது உணரப்பட்டுள்ளது. எட்டாவது திட்டத்தில் பிராந்திய வளர்ச்சித் திட்டங்களைத் தொடரும்போது கடற்கரை ஓரத்திலும் கடல் எல்லையிலும் காணப்படும் சிக்கல்களைக் களைவதற்காகச் சிறப்பு ஒதுக்கீடுகள் தேவை.

எட்டாவது திட்டத்தின் தொடக்கத்தில் தமிழகத்தின் மிக முக்கியக் கோரிக்கைகளை மட்டுமே வலியுறுத்தினேன். மத்திய அரசு நம்மைக் கவனிக்கவில்லையே என்ற ஆதங்கம்தான். பஞ்சாபிலும், காஷ்மீரிலும் வெவ்வேறு வடிவங்களில் வெடித்துள்ளது. அப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட விட்டுவிடக் கூடாது. கஷ்டங்களையும் தியாகங்களையும் பகிர்ந்து கொள்ளும் தமிழ்நாடு தேசிய நீரோட்டத்தில் கலந்துள்ள அதே நேரத்தில், தேசிய வளர்ச்சி, அபிவிருத்தியில் தனக்குரிய பங்கைக் கேட்பது நியாயமான ஒன்றே ஆகும்.

நன்றி.

**டில்லியில், மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**



# சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு சட்டம் 22, 1974-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நகர் மற்றும் ஊர்கள் திட்டமிடுதல் சட்டம் 1971-ன் படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ.) சட்டபூர்வ மாக அமைக்கப்பட்டது.

சென்னை நகரம், 5 நகராட்சிகள், 4 நகரியங்கள், 27 நகர் ஊராட்சி, 10 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 212 கிராமங்கள், 2 கன்டோன் மென்ட் போர்டு பகுதிகள் அடங்கிய 117 சதுர கிலோ மீட்டர் பரப்பை உள்ளடக்கிய சென்னைப் பெருநகரப் பகுதி (எம்.எம்.ஏ.) இதன் அதிகார எல்லைக்குள் வருவதாகும்.

**இந்தக் குழுமத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:**

1. சென்னைப் பெருநகரப் பகுதியின் அடிப்படை வசதிகள், பொருளாதார மேம்பாட்டுக்குத் திட்டமிடுதல்.

2. சென்னைப் பெருநகர் பகுதிக்கான மாஸ்டர் பிளானை அமல் படுத்துதல் மற்றும் இந்தத் திட்டத் தின்கீழ் உருவாக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப் படுத்துதல்.

3. பெருநகர வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல்.

**எம்.எம்.டி.ஏ. -வின் நடவடிக்கை சட்டப்பூர்வமான பணிகள்**

நகர் மற்றும் ஊர்கள் திட்டமிடுதல் சட்டத்தின்படி எம்.எம்.ஏ.-வின் வளர்ச்சியை முறைப்படுத்துவதே எம்.எம்.டி.ஏ. -வின் முக்கியமான சட்டப்படியான பணியாகும். மாஸ்டர் பிளான்களைத் தயாரித்தல், விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், இந்தத் திட்டங்களின் நிபந்தனைகளை வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் மூலம் நடைமுறைப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

**பணிகளைக் கண்காணித்தல், ஒருங்கிணைத்தல்**

அரசின் இதர அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படும் உலக வங்கி உதவியுடனான நகர்ப்புறத்திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல், கண் காணித்தல், மதிப்பிடல் ஆகியவற்றுக்கு எம்.எம்.டி.ஏ. பொறுப்பாகும். ரூ.57.71 கோடி செலவிலான சென்னை நகர வளர்ச்சித் திட்டம் - I (எம்யுடிபி)-1 ரூ. 87.26 கோடி செலவிலான சென்னை நகர வளர்ச்சித் திட்டம் - II (எம்யுடிபி) - II ஆகியவை அந்தத் திட்டங்களாகும்.

சென்னை நகர வளர்ச்சித் திட்டங்களின் முதல் 2 திட்டங்

## அட்டைப்பட விளக்கம்:

### முதல் அட்டை:

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தினை (டி.லிட்) மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் வழங்கினார் (19.12.91).

### இரண்டாம் அட்டை:

சென்னை மியூசிக் அகாடமியின் 65-வது ஆண்டு இசை விழாவினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். அவ்வமயம், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார் (18.12.91).

### நான்காம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

களின் மூலம் பொருளாதார ரீதியாக நலிவடைந்த 85,000 குடும்பங்கள் மனையும், 85,000 குடிசை வாழ் குடும்பங்களும் பயன்பெற்றன. 9000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது. 350 சிறு தொழிற்சாலைக் கூடங்கள், 47 குடிசைத் தொழிற்கூடங்கள் ஆகியவை கட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் 412 ப்ரீ-ஸ்கூல்களும், 22 மருத்துவ மையங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. 17.5 கி.மீ. உட்பட்ட சுற்றுப்பாதை அமைக்கப்பட்டது. 14.5 கி.மீ. தார்ச்சாலை மேம்படுத்தப்பட்டது. 200 கி.மீ. பாதசாரிகள் பாதை, 50 கி.மீ. சைக்கிள் பாதை ஆகியவையும் அமைக்கப்பட்டன. 10 சுரங்கப்பாதைகள், 7 பாலங்கள், 2 கிரேடு செப்பரேட்டர்கள் ஆகியவையும் கட்டப்பட்டன

சென்னை நகருக்காக எம்.எம்.டி.ஏ. செயல்படுத்திய இரு திட்டங்களின் வெற்றிகரமான அனுபவத்தின் அடிப்படையில் மாநிலத்தின் 10 பெரிய நகரங்களின் வளர்ச்சிக்காக ரூ.632.60 கோடி செலவிலான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (டிஎன்யுடிபி) என்ற பல்துறைத் திட்டம் 1988 செப்டம்பர் முதல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், எம்.எம்.ஏ. எல்லைக்குள் வரும் ரூ.354.85 கோடி அளவுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பில் எம்.எம்.டி.ஏ. உள்ளது. டிஎம்யுடிபி-யின் ஒரு அங்கமாக, எம்.எம்.ஏ.-வில் எட்டு இடங்களில் மனைகள் மற்றும் சேவைகள் திட்டத்தின் கீழ் சுமார் 30,000 மனைகளும், கைடட் அர்பன் டெவலப்மென்ட் (ஜியுடி) என்ற திட்டமும் திட்டமிடப்பட்டுள்ளன.

> ஒரு மனிதன் சாகும்போது அவனுடைய செயல்களும் அடங்கி விடுகின்றன. ஆனால், மூன்று மட்டும் எஞ்சி நிற்கின்றன.
>
> 1. அவனுக்குப் பிறகும் தொடர்ந்து நடைபெற்று வரும் அவனுடைய அறச் செயல்கள்.
> 2. எல்லோருக்கும் பயன் தரக்கூடிய அவனுடைய அறிவு.
> 3. அவனுக்காகப் பிரார்த்தனை செய்யும் அவனுடைய சந்ததிகள்.
>
> —நபிகள் நாயகம்

டிஎன்யுடிபி-யின் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், எம்எம்ஏ-வில் சுமார் 15,000 குடும்பங்களைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் டிராபிக் நிர்வாகத் திட்டம் சாலை விளக்குகள் போடுதல், சாலைகள், உள்வட்டச் சாலைகள், பைபாஸ் சாலைகள் அமைத்தல், பாதசாரிகள் வழித்தடம், இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல் உள்ளிட்ட சாலை மேம்பாடு மற்றும் டிராபிக் சிக்னல் மயமாக்கல் திட்டங்களுக்கு நிதி வழங்குகிறது.

பஸ் நிலையங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மார்க்கெட்டுகள் போன்ற சேவை மற்றும் வருவாய் பெற்றுத் தரும் அமைப்புகளைக் கட்டுதல், பராமரித்தல், சாதனங்களை வழங்குதல் ஆகிய பணிகளுக்கு நிதி உதவி செய்ய புதியதாக நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி (எம்யுடிஎப்) என்று ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும் அனைத்து அமைப்புகளுக்கும் பயிற்சியும், தேவையான சாதனங்களை வாங்கி அளிப்பதற்கான தொழில்நுட்ப உதவியும் இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

இவை தவிர நடைபாதை வாசிகளுக்கான திட்டம், ஆற்றங்கரைகளில் உள்ள குடிசைவாசிகளுக்கு மறுவாழ்வு, இரவு தங்குமிடம், உள்ளாட்சி அமைப்புகளுக்கான உதவித் திட்டங்கள், துரித இரயில் திட்டம், எம்.எம்.ஏ.-வில் இரயில் போக்குவரத்தை அதிகப்படுத்துதல், பில்டிங் மையங்கள் மூலம் கட்டடப்

பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளையும் எம்எம்டிஏ ஒருங்கிணைக்கிறது.

வளர்ச்சியை ஒழுங்குபடுத்துதல், விரிவான வளர்ச்சித் திட்டங்களை (டிடிபி) தயாரித்தல் மாஸ்டர் பிளானை அவ்வப்போது திருத்தி அமைத்தல் ஆகிய சட்டப்பூர்வமான பணிகளை எம்.எம்.டி.ஏ. நிறைவேற்றுகிறது. கீழ்க்கண்ட முக்கியப் பணி வகைகள் எம்.எம்.டி.ஏ. வினால் நிறைவேற்றப்படுகின்றன.

1. திட்டங்களுக்கான அனுமதி அளித்தல்.

2. சப்-டிவிஷன், லே-அவுட்டு களை அங்கீகரித்தல்.

3. நிலப் பயன்பாட்டு மண்டலங்களைத் திருத்துதல்.

4. பொதுமக்களுக்கு உதவ ஆலோசனை, வழிகாட்டுதல் பணி.

5. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டைப் பரிசீலித்தல்.

6. அமலாக்கம்.

இரண்டாவது மாஸ்டர் பிளானைத் தயாரிக்கும் பணியும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது 1975-இல் அரசு அங்கீகரித்த முதலாவது மாஸ்டர் பிளானுக்குப் பதிலானதாகும்.

சட்டத்தின் 48-வது பிரிவின் கீழ் திட்ட அனுமதியை அளிப்பதன் மூலம் மாஸ்டர் பிளானில் உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் (டிசிஆர்) அமலாக்கப்படுகின்றன. நிலப் பயன்பாட்டு மண்டலத்துக்கு இணக்கமான சிறு திட்டங்களுக்கு, எம்.எம்.டி.ஏ. அளித்த அதிகாரங்கள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளே அனுமதி அளித்து வருகின்றன. இதர அனைத்துக் கோரிக்கைகளும், எம்.எம்.டி.ஏ.-வால் பரிசீலிக்கப்படுகின்றன. 1989-90-ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் 2,794 திட்டங்களுக்கு எம்.எம்.டி.ஏ. அனுமதி வழங்கியுள்ளது. 1,104 திட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் இந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. சப்-டிவிஷன்கள், லே-அவுட்டுகளுக்கான அங்கீகாரம் கோரி 913 விண்ணப்பங்கள் வந்ததில், 12,000 மனைகளைக் கொண்ட 817 ஏக்கர் பரப்பளவுக்கான 394 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. ●

## பார்த்தோம்-படித்தோம்

1.12.91 இதழில் வெளி வந்த நேரு பிறந்தநாள் விழாவில் - முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை என் நெஞ்சை நெகிழச் செய்தது. மேலும், சிவானந்தா குருகுலத்திற்கு அன்பளிப்பாகப் பேருந்து வழங்கி உள்ளார். அது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

—எஸ்.பி.சந்தானராஜகோபால்,
களப்பாள்.

மதுவின் தீமையை விளக்கிடும் கதைகள், கட்டுரைகள், எளிய இனிய நடையில் படைத்து அரும் பணியாற்றுகிறது தமிழரசு.

—பச்சையப்பன்,
பள்ளிச்சந்தல்

எல்லாத் துறைகளிலும் மகளிரே வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வரின் செய்தி, மங்கலமும் மதிப்பும் மரியாதையும் பயனும் நிறைய விளைவிக்கும் என்பது திண்ணம்.

—அரிமா. பூபாளம்
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

சிக்கன முறையில் சீரோடு வாழ்ந்திட, பிறருக்கு, உதவி செய்யத் தூண்டுகின்ற சேமிப்பு பற்றி அழகான, அருமையான முறையில், கவிதை படைத்த கவிஞர்-பூங்கோவன் அவர்களுக்கு நன்றி!

—ப.அ. சண்முகம்,
களம்பூர்

தமிழ்நாடு முழுவதும் பெய்த கடும் மழை மற்றும் பெரும் காற்றினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, முதல்வர் அவர்களின் உதவி-நடுக்கடலில் தத்தவித்தவர்களுக்குக் கிடைத்த கப்பல் போன்றது.

—ந. சுந்தரபுத்தன்,
கண்கொடுத்தவனிதம்.

சித்த மருத்துவப் பயனை அறிந்து, மகிழ்ச்சியடைந்தேன். இந்தக் கட்டுரை பலருக்கும் பயன் தரக்கூடியது.

—பி.ஜி. அழகிரி,
பெரம்பூர்.

"காலம் போற்றி வாழ்க!" என்ற சீனி, விஜயராணி அவர்களின் 'மாணவர் பக்க'க் கவிதை மணியான கவிதை!

—கவிஞர் அ.சுப்பையன்,
செட்டிகுறிச்சி.

'மழை பாதித்த இடங்களில் முதல்வர்' - கட்டுரை, முதல்வருடன் சென்றதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

—நெல்லை நாதன்,
மேலத்திடியூர்.

"உணவே மருந்து" என்ற கட்டுரை மிகவும் அருமை. நாம் அன்றாடம் உண்ணும் கீரை வகைகளைப் பற்றித் தெளிவாகக் கூறியது.

—ஞான. சங்கர்,
தலைஞாயிறு.

"மதுவினால் அழிந்த சாம்ராஜ்யம்" என்ற புராணக் கதை படிப்பதற்கும், பார்ப்பதற்கும் அதிசயமாக இருந்தது.

—க. காவேரி,
வாழப்பாட்டாம்பாளையம்.

திங்கள் இருமுறை மலரும் 'தமிழரசு' முகர்ந்தேன். மனம் மகிழ மணம் நிறைந்தது. உளம் குளிர்ந்தது. வாழ்த்துக்கள்! சிறப்பான பூரணமான தகவல் ஏடாக மிளிர்வதைப் பாராட்டுகிறேன்.

—ந. தர்மலிங்கர்,
திருச்சி-3.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

VISIT INDIA
TOURISM YEAR 1991



# A Dance Festival That Will Sweep You Off Your Feet.

Mamallapuram. A seaside town 60 kms South of Madras famous for its ancient art and culture. Where tales of yester-years have been sculpted on stone. And history has been recorded on rock.

Come January, it'll be festival time in Tamilnadu. Pongal, the harvest festival, will be celebrated with pomp and splendour.



Mamallapuram will host a festival of dances – Bharata Natyam, Kuchipudi, Kathakali, Odissi and Folk. As our country's leading artistes converge here, remember to be around.



Jointly organised by
**Ministry of Tourism,** Govt. of India.
and
**Department of Tourism**
Govt. of Tamilnadu, Fort St. George
Madras 600 009

**Tamilnadu Tourism Development Corporation Ltd.**
25, Dr. Radhakrishnan Salai, Madras 600 004
Phone: 846843, 846825 Telex: 41-7758 Grams: TAMILTOUR

## MAMALLAPURAM
### Dance Festival
15th Jan. – 16th Feb. 1992

DIPR/MAA COMMUNICATIONS

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

